# UNIVERSITY OF MADRAS

# B. A. & B. Sc. DEGREE EXAMINATIONS

# 1972

ASST. SECRETARY TO GOVERNMENT
16 JUL 19..
SOCIAL WELFARE (I. & P.) DEPT.

PART II - TAMIL

# SELECTIONS IN POETRY

DOCTRINA VIM PROMOVET INSITAM

L12
1-50

சென்னைப் பல்கலைக் கழகம்

UNIVERSITY OF MADRAS

## இளங்கலை - அறிவியல் - பட்டத் தேர்வு

## B. A. & B. Sc. DEGREE EXAMINATION

1972

பகுதி II - தமிழ்

Part II - TAMIL

# செய்யுள் திரட்டு

# SELECTIONS IN POETRY

DOCTRINA VIM PROMOVET INSITAM

*Copies can be had from :*

THE REGISTRAR,
UNIVERSITY OF MADRAS,
UNIVERSITY BUILDINGS,
CHEPAUK, MADRAS - 5.

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
111059

PRINTED AT
GITHA PRESS, TIRUCHIRAPALLI - 2.

*August, 1968 - C. 10000.*

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நெடுநல்வாடை | ... 1 |
| | குறிப்புரை | ... 101 |
| 2. | புறநானூறு | ... 9 |
| | குறிப்புரை | ... 113 |
| 3. | பதிற்றுப்பத்து | ... 20 |
| | குறிப்புரை | ... 119 |
| 4. | திருக்குறள் | ... 27 |
| | குறிப்புரை | ... 127 |
| 5. | சிலப்பதிகாரம் | ... 34 |
| | குறிப்புரை | ... 135 |
| 6. | சீவக சிந்தாமணி | ... 45 |
| | குறிப்புரை | ... 141 |
| 7. | பெரிய புராணம் | ... 58 |
| | குறிப்புரை | ... 147 |
| 8. | கம்பராமாயணம் | ... 73 |
| | குறிப்புரை | ... 150 |
| 9. | சீறாப்புராணம் | ... 89 |
| | குறிப்புரை | ... 157 |
| 10. | திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை | ... 93 |
| | குறிப்புரை | ... 158 |
| 11. | கிருஸ்துவின் அருள் வேட்டல் | ... 97 |
| | குறிப்புரை | ... 160 |

# 1. நெடுநல்வாடை

சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்பர். சங்க காலப் புலமைச் சான்றோர்கள் பாடிய பாடல்கள் பாட்டு, தொகை என இரு பிரிவாக வழங்கும். பாட்டு என்பது பத்துப்பாட்டினையும் தொகை என்பது எட்டுத்தொகையினையும் குறிக்கும். பத்துப்பாட்டு என்பது அகவற்பாவால் இயற்றப் பட்ட பத்து நெடும் பாடல்கள் தொகுக்கப்பட்ட தொகை நூலாகும். பத்துப்பாட்டு இவையிவை எனக் குறிக்குமுகத்தான் பின்வரும் பாடல் வழங்குகின்றது :

> முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து.

இந்நூலில் உள்ள பாடல்கள் நூற்றுமூன்று அடிகள் சிற்றெல்லையும், எழுநூற்று எண்பத்திரண்டு அடிகள் பேரெல்லையுங் கொண்டு திகழ்கின்றன. அடியளவிற் சிறியது முல்லைப்பாட்டு; பெரிய பாட்டு மதுரைக் காஞ்சி. திரு முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் முதலியன மற்ற எட்டுப் பாட்டுகளாகும்.

பத்துப்பாட்டைப் பாடிய புலவர்கள் எண்மராவர். அவர் களுள் நக்கீரனாரும், கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் இரண் டிரண்டு பாடல்களைப் பாடியுள்ளனர். மற்ற ஆறு புலவர் பெரு மக்களும் ஒவ்வொரு பாட்டுப் பாடியுள்ளனர். இத்தொகுப்பில் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்ற மூன்று நூல்களும் அகப்பொருள் பற்றியன; மற்ற ஏழு பாடல்களும் புறப்பொருள் பற்றியன. அவற்றுள் ஐந்து பாட்டுகள் ‘ஆற்றுப்படை’ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தன வாகும். முல்லைப்பாட்டு நீங்கலாக உள்ள பிற பாடல்கள் ஒவ்வொன்றினுக்கும் பாட்டுடைத் தலைவன் உண்டு.

இப் பத்துப்பாட்டு, “மூத்தோர்கள், பாடியருள் பத்துப் பாட்டு” என்றும், “ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து

சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டும்'' என்றும், 'பத்துப்பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ எத் துணையும் பொருட் கிசையும் இலக்கணமில் கற்பனையே'' என்றும் புலவர் பெருமக்களாற் பாராட்டப் பெற்றுள்ளது.

பத்துப்பாட்டு, பண்டைத் தமிழ் மக்களின் வரலாற்றினையும் நாகரிகச் சிறப்பினையும் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. முடியுடை மூவேந்தர்களது வரலாறு குறுநில மன்னர்கள், வள்ளல்கள் முதலியோர் வரலாறு, பண்டைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், போர் முறை, சமுதாய நிலை, காதல் வாழ்க்கை, கடவுள் நெறி முதலானவை குறித்துப் பத்துப்பாட்டு வழி நன்கறியலாம்.

இங்குப் பாடமாக வைக்கப் பெற்றுள்ள நெடுநல்வாடை பத்துப் பாட்டுள் ஏழாவதாக அமைந்துள்ளதாகும். 'கோல நெடுநல் வாடை' எனச் சிறப்பிக்கப்பெறும் இப்பாட்டு ஆசிரியப் பாவால் அமைந்ததாகும். பகைவர்மேற் படையெடுத்துச் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் வருத்தம் நீங்கும் பொருட்டு அவன் பகையை வென்று விரைவில் திரும்பி வருவானாக என்று வெற்றிக் கடவுளாம் கொற்றவையைப் போற்றிப் பரவும் பெண் கூற்றாக இப்பாட்டு அமைந்துள்ளது.

நெடுநல்வாடை என்பது நெடிதாகிய வாடை என விரியும். தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுது ஒரூழி போல நெடிதாகிய வாடையாகவும், அரசன் போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பு அவனுக்கு வெற்றி நல்குமாதலின் அவனுக்கு அது நல்லது ஆகிய வாடையாகவும் ஆயினமையின் நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றது. இப்பாட்டு, ''மக்கள் நுதலிய அகனைந் திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்'' என்ற தொல்காப்பிய நூற் பாவின்படி அகப்பொருளாமேனும், 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' எனப் பாண்டிய வேந்தனது அடையாளப் பூவாகிய வேம்பைக் கூறினமையின் அகம் ஆகாது புறமே யாயிற்று.

''கூதிர்ப் பாணள்'' (12), ''கூதிர் நின்றன்றாற் போதே'' (72) என்ற தொடர்களால் வாடைக்காற்று வீசும் கூதிர்க்காலமும், ''வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கி'' (173) என்பதனுல் வாடையும், ''புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு இன்னு அரும்படர் தீர'' (166,67) என்பதனுல் தலைவியின் நிலையும், ''சிலரொடு திரிதரும் வேந்தன், பல

ரொடு முரணிய பாசறைத் தொழிலே" (187, 88) என்பதனால் அரசனின் பாசறை இருப்பும், "இன்னே முடிகதில் லம்ம" (168) என்பதனால் கொற்றவை பரவலும் விளங்குகின்றன.

இப் பாட்டில் கூதிர்க் காலத்தில் மக்களும் விலங்கு பறவைகள் முதலியனவும் குளிரால் நடுங்கி வருந்தியிருக்கும் நிலை முதற்கண் கூறப்படுகின்றது. பின்னர்த் தலைவியின் துன்பநிலை சுட்டப்படுகின்றது. தலைவி வதியும் அரண்மனையின் அமைப்பு, அதன் வாயில் முதலியவற்றின் அழகுமாட்சி, தலைவி பள்ளி கொள்ளும் பாண்டிற் கட்டிலின் எழில் நலம், கட்டிலில் இட்டு வைத்திருக்கும் பாயலின் அமைப்பு, அரசன் பிரிவினால் பண்டைய நிலையிலிருந்து மாறுபட்டு விளங்கி வருந்தும் தலைவியின் நிலை முதலியன நுட்பமாக விளக்கப்படுகின்றன. இப் பகுதியில் தலைவியின் கற்பு மேம்பாடும், அவளுற்ற துயர் நிலையும் நன்கு விளக்கமுறுகின்றன. அவள் கொண்ட பிரிவுத் துன்பம் தீர மகளிரும் செவிலியரும் ஆற்றும் செயல்கள் பின்பு நுவலப்படுகின்றன. பாட்டின் இறுதிப் பகுதியில், அரசன் வீரர் தீப்பந்தம் ஏந்திப் பின் தொடர, நடுயாமம் என்றும் மழை பெய்கின்றது என்றும் பாராமல் புண்பட்ட வீரர்கள்பால் அன்பு பூண்டு, முகமலர்ந்து அவர்களைத் தனிப்படக் கண்டு அருள் சுரந்து ஆற்றுவிக்கும் செய்தி கூறப்படுகின்றது. மேலும் பூ மலர்வதனற் பொழுதை அறியும் வழக்கம், மாலைக் காலத்தை மகளிர் கொண்டாடும் செயல், மனைவகுப்பு முறை, வேலுக்கு அடையாளப் பூவை அணியும் மரபு முதலியனவும் புலனாகின்றன.

நெடுநல்வாடையை இயற்றியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஆவர். இவர் இயற்பெயர் கீரன் என்பதாகும். 'ந' சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச்சொல். திருமுருகாற்றுப்படையும் இவரால் இயற்றப்பெற்றதே. நற்றிணையில் ஏழு செய்யுட்களும், குறுந்தொகையில் எட்டுச் செய்யுட்களும், அகநானூற்றில் பதினேழு செய்யுட்களும் இவர் இயற்றியனவாகக் காணப்படுகின்றன. இவர் தாம் வாழ்ந்த காலத்தே பெரிதும் மதிக்கப்பெற்ற புலவராவர். இவருடைய பாடலினால், இவர் கடைச்சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது.

# நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோட

னீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை

கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாட்
புன்கொடி முசுண்டைப் பொதிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி

யிருங்கிளி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
யகலிரு விசும்பிற் றுவலை கற்ப

வங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு

தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரைவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூ
ராறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்

படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர

வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்

தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவ

லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக

வடவர் தந்த வான்கேழ் வட்டந்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்

திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்

வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவருந்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்

பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார......
கூதிர் நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து

நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்

துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்

தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்
றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து

நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்

கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்

யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ளகல

பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ

மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லிற்
றசநான் கெய்திய பணைமரு ணோன்று

ளிகன்மீக் கூறு மேந்தொழில் வரிநுதற்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு......
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்

டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்

தகடுகண் புதையக் கொளிஇத் துகடீர்ந்
தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை......

நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து

வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து......
மெல்லியன் மகளிர் நல்லடி வருட
தரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்

குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
வுகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து......
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடுதலை யாக

விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
வுரோகிணி நினைவன ணோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்

புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவி
ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்

களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல

வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
விருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்

புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப

நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

# 2. புறநானூறு

ஒரு நாட்டின் பழைய வரலாற்றை அறிதற்கு, அந்நாட்டிலுள்ள பண்டைப் புதை பொருள்களும் பண்டைக் கட்டடங்களும் (Archaeological evidence), கல்வெட்டுகளும் (Inscriptions), செப்புப் பட்டயங்களும் (Epigraphic evidence), பண்டைய நாணயங்களும் (Numismatic evidence), அந்நாட்டைப்பற்றிப் பிற நாட்டார் எழுதி வைத்த குறிப்புக்களும் (Foreign testimony), பிறவுஞ் சிறந்த சான்றுகளாயிருப்பினும், பழைய இலக்கியங்களும் சிறந்ததொரு சான்றாகும் (Literary evidence) என்று ஆராய்ச்சியாளர் கொள்கின்றனர். அம் முறையில், பல்லவர்களின் ஆட்சி தொடங்குகின்ற கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழக வரலாற்றை யறிவதற்கு அக்காலத்திற்கு முன்னர் எழுந்த நூல்களே – சங்க இலக்கியங்களே நமக்கு உதவி புரிவனவாகும். அவற்றிலும் நாட்டு வரலாற்றை நன்கு அறிவதற்கு உதவி புரிவன புறப்பொருள் இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, புறநானூறு முதலியனவும், அகப்பொருள் இலக்கியமாகிய அகநானூறும் ஆகும். புறநானூறு வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் நூலாகும்.

பாட்டும் தொகையும் என வழங்கப்படும் சங்க நூல்களில் புறநானூறு தொகை நூலைச் சார்ந்ததாகும். எட்டுத்தொகையுள் ஒன்றான இந்நூல் அகம், புறம் எனப்படும் இருவகைப் பொருள்களுள், புறத்தைப் பற்றிய பாடல்களையே கொண்டுள்ளது. அறநூலார் வாழ்க்கைக் குறிக்கோளாக வகுத்த அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கையும் தமிழ் இலக்கண நூலார் அகம் புறம் என்னும் இரு பிரிவினுள் அடக்குவர். புறத்தார்க்குப் புலனாகாது என்றும் அகத்தளவாகவே — உள்ளத்து உணர்வானே நுகரப்பெறும் இன்பம் அகம் என்றும், அதற்குப் புறமான அறம் பொருள் வீடு என்னும் மூன்றும் புறம் என்றும் உரைக்கப்பெறும். இந் நூல் புறத்தின் பகுதிகளாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைகளின் பொருளமைந்த நானூறு பாடல்களைக் கொண்டுள்ளதாதலின், இது புறநானூறு என்னும் பெயர் பெற்றது. புறநானூறு என்னுந் தொடர் புறப் பொருளைப்பற்றிய நானூறு

பாக்களைக் கொண்டது, என்று பொருள்படுவதால், இரண்டாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

இந் நூலிலுள்ள பாடல்களைப் பாடியவர் கடைச் சங்கப் புலவர் எனப் பெறுவராயினும், அவர் யாவரும் ஒரே காலத்தவரல்லர், ஒரே மரபினரல்லர்; ஓரிடத்தாரல்லர். பாடியவர்களுள் பெரும்பான்மையானவர் ஆண்பாற் புலவர்; சிறுபான்மையானவர் பெண்பாற் புலவர்களும் மன்னர்களுமாவர்.

இந் நூலால், பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், அமைச்சர்கள், படைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச் சங்கப் புலவர்கள் முதலியவர்களுடைய வரலாறுகளும், அக்காலத்து மக்களுடைய நடையுடை பாவனைகளும், அரசியல் போர்முறைகளும், பழக்கவழக்கங்களும், பிறவும் நன்கு புலப்படும். சுருங்கச் சொன்னால், புறநானூறு அந் நாளைய அரசியல் வரலாற்றினையும் சமுதாய வரலாற்றினையும் (Political and Social History) ஒருங்கே கூறும் நூலெனலாம்.

இங்கே பாடப் பகுதியாக வந்துள்ள பதினெட்டுப் பாடல்களும் வேள்பாரியைப் பற்றியன. வேள்பாரி யென்பான் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; முந்நூறு ஊர்களைத் தன்னகத்தே கொண்டிருந்த பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன்; முல்லைக்குத் தேரீந்த பெருங் கொடையினன். தன்னுடைய முந்நூறு ஊர்களையும் மற்றைய எல்லாப் பொருள்களையும் பரிசிலர்க்கு வாரி வழங்கியவன்; வீர மேம்பாடும் ஈர நெஞ்சமுங் கொண்டு விளங்கியவன். பிற்காலத்துச் சமயச் சான்றோராகிய நம்பியாரூரால் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று பாராட்டப்பெற்ற பெருஞ் சிறப்பிற்குரியவன்.

இப்பாடலைப் பாடிய புலவர் கபிலர் சங்கப் புலவர்களிலேயே மிகப் பல பாடல்களைப் பாடிய பெரும் புலவராவர். வேள்பாரியின் உயிர் நண்பராக விளங்கிய இவர் பாரியைப் பற்றிப் பாடியுள்ள பாடல்கள் படிப்பார் உள்ளத்தை உருக்குவனவாகும்.

# புறநானூறு

## கபிலர் பாடல்கள்

திணை — பாடாண் 1 துறை - விறலியாற்றுப்படை

வேள்பாரியைப் பாடியது

சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினும் அருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே.

---

திணை — பாடாண் 2 துறை - இயன் மொழி

வேள்பாரியைப் பாடியது

நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே

---

திணை — பாடாண் 3 துறை — இயன் மொழி

வேள்பாரியைப் பாடியது

பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

---

திணை – பாடாண் | 4 | துறை – இயன்மொழி

### வேள்பாரியைப் பாடியது

குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே அறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னு னவர்வரை யன்னே.

---

திணை – நொச்சி | 5 | துறை – மகள் மறுத்தல்

### வேள்பாரியைப் பாடியது

அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே

மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு

மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின். சீறியாழ் பண்ணி

விரையொலி கூந்தல் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

---

திணை – நொச்சி 6 துறை – மகள் மறுத்தல்

மூவேந்தரும் பாரிபறம்பு முற்றியிருந்தாரைப் பாடியது

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

---

திணை – நொச்சி 7 துறை – மகள் மறுத்தல்

வேள்பாரியைப் பாடியது

அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே.

---

துறை – கையறுநிலை 8 திணை – பொதுவியல்

பாரிமகளிரைக் கொண்டுபோகும் கபிலர்
பறம்பு நோக்கி நின்று பாடியது

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னே முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.

---

திணை – பொதுவியல் 9 துறை - கையறுநிலை

### வேள்பாரியைப் பாடியது

ஒருசா ரருவி யார்ப்ப ஒருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வேல்
அண்ணல் யானை வேந்தர்க்கு
இன்னா னாகிய இனியோன் குன்றே.

———

திணை – பொதுவியல் 10 துறை - கையறுநிலை

### வேள்பாரியைப் பாடியது

தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரு மருங்குல்
ஏந்தெழில் மழைக்க ணின்னகை மகளிர்
புல்மூசு கவலைய முள்முடை வேலிப்
பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கண்

பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை யேறி யுமணர்
உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ
நோகோ யானே தேய்கமா காலை
பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்

பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா வாகப் பலவும்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே
அண்ணல் நெடுவரை யேறித் தந்தை

பெரிய நறவிற் கூர்வேற் பாரியது
அருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே.

———

திணை - பொதுவியல் 11 துறை - கையறுநிலை

### வேள்பாரியைப் பாடியது

மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலகம் நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற அமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே.

திணை - பொதுவியல் 12 துறை - கையறுநிலை

### வேள்பாரியைப் பாடியது

அறையும் பொறையு மணந்த தலைய
எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரி தண்பறம்பு நாடே.

திணை - பொதுவியல் 13 துறை - கையறுநிலை

### வேள்பாரியைப் பாடியது

கார்ப்பெயல் தலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோன் நாடே.

திணை - பொதுவியல் **14** துறை - கையறுநிலை

### வேள்பாரியைப் பாடியது

வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்
களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி

மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து
கீழு மேலு மெஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப அவரைக்

கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுனிய மட்டின் தேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோள் தாலம் பூசல் மேவர

வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை
ஆடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பிற் பகைவர்
ஓடுகழற் கம்பலை கண்ட

செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடே.

---

திணை - பாடாண் **15** துறை - பரிசிற்றுறை

### பாரி மகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டு சென்ற கபிலர் பாடியது

பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கடுவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப!

நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேற்
களங்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே!
இவரே, பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்

கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தணன் நீயே
வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்

அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே.

---

திணை – பாடாண் 16 துறை – பரிசிற்றுறை

பாரி மகளிரை இருங்கோவேளுழைக் கொண்டு சென்ற
கபிலர் பாடியது

இவர்யா ரென்குவை யாயின் இவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே

தந்தை தோழன் இவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு

நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே! விறற்போ ரண்ணல்!
தாரணி யானைச் சேட்டிருங் கோவே!
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!

யான்தர இவரைக் கொண்மதி வான்கவித்து
இருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ! வென்வேல்
உடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே!

திணை – பாடாண் 17 துறை – பரிசிற்றுறை

இருங்கோவேள் பாரி மகளிரைக் கொள்ளானாகக் கபிலர் பாடியது

வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழும் நெடுவரைப் படப்பை
வென்றிநிலைஇய விழுப்புக ழொன்றி

இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருள்நுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாயம் நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!

நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே இயல்தே ரண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்

தேற்றாப் புன்சொல் நோற்றிசிற் பெரும!
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்து
அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்

பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே!

திணை – பொதுவியல் 18 துறை – கையறுநிலை

வேள்பாரி துஞ்சிய வழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப்
படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது

கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே

பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லாது
ஒருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி
இனையை யாதலி னினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி யும்மை

இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக வுயர்ந்த பாலே.

# 3. பதிற்றுப்பத்து

பாட்டும் தொகையும் சங்க இலக்கியம் என வழங்கும். பாட்டு என்பது பத்துப்பாட்டினையும், தொகை என்பது எட்டுத் தொகையினையும் குறிக்கும். எட்டுத்தொகை நூல்கள் இன் னின்னவை எனக் குறிக்கப் பாடலொன்று வழங்குகின்றது. அது வருமாறு:

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப் பத்தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டு நூல்களும் எட்டுத் தொகையுள் அடங்கும்.

மேற்குறித்த நூல் வரிசையில் நான்காவதாக விளங்குவது பதிற்றுப்பத்தாகும். தமிழ் நாட்டு முடியுடை வேந்தர் மூவரில் சேர மரபினர் பதின்மரைப்பற்றி அகவல் பாக்களில் பாடப் பட்ட நூலாகும் இது. பத்துச் சேர மன்னர் குறித்துப் பத்துப் பத்துப் பாடல்களில் பாடப்பெற்றிருத்தலில் இந் நூல் பதிற்றுப் பத்து எனப் பெயர் வழங்குவதாயிற்று. ஆயின் இப்பொழுது முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இந் நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னார் இன்னாரென்பது தெரியக்கூடவில்லை.

எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல் களும் அகத்திணையைச் சார்ந்தவை; பதிற்றுப்பத்தும் புற நானூறும் புறப்பொருள் பற்றியனவாகும். பரிபாடல் அகம், புறம் என இருதுறைப் பொருள்களும் பற்றி வருகின்றது.

பதிற்றுப்பத்திற்கே அமைந்த சில சிறப்புக்கூறுகள் உண்டு. அவையாவன: (1) இந்நூல் முழுவதும் சேர அரசர்கள் பற்றியே எழுந்ததாகும். குறிப்பிட்ட ஓர் அரசரைக் குறித்துத் தொடர்ச்சியாகப் பத்துச் செய்யுட்கள் இதிலேதான் காணப் படுகின்றன. (2) ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணையும் ஒவ்வொரு புலவராற் பாடப்பட்டுள்ளது போலப் பதிற்றுப்

பத்தும் பத்துச் சேர அரசர்கள் பற்றிப் புலவர் பதின்மரால் பாடப்பெற்றதாகும். (3) ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றைப் புலப்படுத்தும் குறிப்புக்கள் அமைந்துள்ளன. (4) ஒவ்வொரு பாட்டிலும் பொருளாற் சிறப்புடைய தொடர் ஒன்றே அவ்வப்பாட்டின் பெயராக அமைந்துள்ளது. (5) நான்காம் பத்து முழுவதும் அந்தாதியாக அமைந்துள்ளது. (6) ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அப்பத்தின் பாட்டுடைத் தலைவனுடைய பெயரும் செயல்களும் அவனைப் பாடினர் பெயரும், பத்துச் செய்யுட்களின் பெயர்களும், பாடிய புலவர் பெற்ற பரிசிலும், சேர அரசர் ஆண்ட கால அளவும் ஒவ்வொரு பதிகத்தாலும் தெரிகின்றன. (இப் பதிகங்களை இயற்றியவர் யார் எனத் தெரியவில்லை. இவை ஆசிரியப்பாவாகத் தொடங்கிக் கட்டுரை நடையாக முடிகின்றன. சாசனங்களிற் காணப்படும் மெய்க்கீர்த்திகளைப் போன்று இவை காணப்படுகின்றன.)

இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனாரும், மூன்றும் பத்து இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனாரும், நான்காம் பத்து களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம் பத்து கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணரும், ஆறாம்பத்து ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம்பத்து செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்து தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்து குடக்கோ இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர் கிழாரும் பாடியவை.

பதிற்றுப்பத்து வரலாற்றாராய்ச்சிக்குப் பெருந்துணை புரிவதாகும். சேர மன்னர்களது ஆட்சி முறை, கொடைச் சிறப்பு, வீரமிகுதி முதலியன பெரும்பாலும் ஒவ்வொரு பாட்டிலும் கூறப்படுகின்றன. அரசனது புறவாழ்க்கை மட்டுமின்றிச் சிலவிடங்களில் இல்லற வாழ்க்கையின் இனிமையும் சுட்டப்படுகின்றது. சேர வேந்தரின் மனைவியரின் காதற் சிறப்பு, குன்றா எழில் நலம், கற்பு மேம்பாடு, பொறுமையுணர்ச்சி, ஊடற் பண்பு, சொல் நலம், கலைச் சிறப்பு முதலிய பல செய்திகளும் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றிருக்கக் காணலாம். அறிவும் வீரமும் பொருந்திய அரசன் கலைத்திறன் கெழுமிய கலைஞர்களையும், புலமைத்திறன் நிறைந்த புலவர் பெருமக்களையும் போற்றிப் புரந்த செய்தி நன்கு விளக்கப்படுகின்றது. சேர மன்னரின் கொடைத்திறம்

சிந்தையைக் குளிர்விப்பதாயுள்ளது; வியக்கவும் தூண்டு கின்றது. மேலும் நாட்டுவளம், மக்கள் வாழ்க்கை, மறவர் வீரம், புலவர் தம் சொல்லாட்சி முதலியன பலவும் பதிற்றுப்பத்துவழி அறியலாம்.

பதிற்றுப்பத்துப் பாடல்கள் சொற்செறிவு மிகுந்து, பொருளாழங்கொண்டு, கருத்துநலன் சிறந்து காணப்படு கின்றன. தமிழ் நடை சிறிது கடினமானது;

இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ள இரண்டாம் பத்தினைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார் ஆவர். இவர் இயற்பெயர் கண்ணனார் என்பதும், ஊர் குமட்டூர் என்பதும் பெயரான் அறியப்படும். இரண்டாம் பத்தின் பதிகம் இவர் பிரமதாயமாக உம்பற்காட்டு ஐந்நூறு ஊர்களையும், முப்பத்தெட்டு ஆண்டு தென்னாட்டு வருவாயிற் பாகமும் பரிசாகப் பெற்றார் என்பதனால் இவர் அந்தணர் என்பர்.

இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனாவன். "இவன் இமயத்து வில் பொறித்த வன்; ஆரியரை வணங்கச் செய்தவன்; யவனரைப் பிணித்த வன்; தம் பகைவர்களின் தலையில் நெய் பெய்து, கைகளைப்பின் கட்டி, அவர்கள் அரிதின் முயன்று சேர்த்த அரும்பொருள் களைத் தன் நாட்டிற்குக் கொணர்ந்தவன்; அப்பொருள்களைத் தானே துய்க்காமல் பிறர்க்கும் கொடுத்து உதவியவன்; ஐம்பத் தெட்டு ஆண்டுகள் அரசாண்டவன்". இவ்வாறு இரண்டாம் பத்தின் பதிகம் குறிப்பிடுகின்றது.

பாடப்பகுதியில் வந்துள்ள துறை, வண்ணம், தூக்கு விளக்கம்

செந்துறை: உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல்.

பாடாண் பாட்டு: பாடப்படுகின்ற ஆண்மகனின் ஒழுக லாற்றினையும் வீரத்தினையும் வெற்றியினையும் விளங்கவுரைப்பது.

ஒழுகு வண்ணம்: அற்று அற்றுச் செல்லாமல் ஒழுகிய ஓசையாற் செல்வது ('ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்' — தொல்).

செந்தூக்கு: ஆசிரியப்பா (தூக்கு = பாட்டு; 'பாக்களைத் துணித்து இத்துணையடியெனக் கூறுபாட றிதல்' என்பர் பேராசிரியர்).

வஞ்சித் தூக்கு = வஞ்சிப் பாட்டு.

சொற்சீர் வண்ணம் = பாஅவண்ணம்.

# பதிற்றுப்பத்து

## 1

வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்

கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
அருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று

முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னார மார்பிற்

போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே

கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

துறை - செந்துறைப் பாடாண் பாட்டு, வண்ணம் - ஒழுகு வண்ணம்.
தூக்கு - செந்தூக்கு. பெயர் - புண்ணுமிழ் குருதி.

## 2

வயவர் வீழ வாளரின் மயக்கி
இடங்கவர் கடும்பி னரசுதலை பனிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே
தாரணி யெருத்தின் வாரல் வள்ளுகிர்
அரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்

தோடுகொ ளினநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநக ரரசுதுயி லீயாது
மாதிரம் பனிக்கு மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிதுநின் செல்வங் கேட்டொறும்
காண்டல் விருப்பொடு கமழுங் குளவி

வாடாப் பைம்மயி ரிளைய வாடுநடை
அண்ணன் மழகளி றரிஞிமி றோப்பும்
கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கல்
றொல்பசி யுழந்த பழங்கண் வீழ

எஃகுபோழ்ந் தறுத்த வானிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன
நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை

நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்
வசையின் மகளிர் வயங்கிழை யணிய
அமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.

இதுவுமது. பெயர் - மறம் வீங்கு பல்புகழ்.

## 3

தொறுத்தவய லாரல்பிறழ் நவும்
ஏறுபொருதசெறு வுழாதுவித்து நவும்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமையி னிரைதடுக் குநவும்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்

வளைதலை மூதா வாம்ப லார்நவும்
ஒலிதெங்கி னிமிழ்மருதிற்
புனல்வாயிற் பூம்பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடுகவி னழிய நாமந் தோற்றிக்

கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க

ஊரிய நெருஞ்சி நீருடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர் பனிக்கும் பாழா யினவே
காடே கடவுள் மேன புறவே

ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன
ஆறே யவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
அழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது

மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே.

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு. வண்ணம் - ஒழுகு வண்ணம்.
தூக்கு - செந்தூக்கும் வஞ்சித்தூக்கும். பெயர் - பூத்த நெய்தல்.

## 4

நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே
நாள்கோ டிங்கண் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
போர்தலை மிகுந்த வீரைம் பதின்மரொடு

துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
அக்குர னனைய கைவண் மையையே
அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப
கூற்றுவெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே

எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ

பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ பாடினி வேந்தே
இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ

கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ லியரோவிவ் வுலகமோ டுடனே.

துறை - செந்துறைப் பாடாண்பாட்டு.
வண்ணம் - ஒழுகு வண்ணமும், சொற்சீர் வண்ணமும்.
தூக்கு - செந்தூக்கு. பெயர் - சான்றோர் மெய்ம்மறை.

# 4. திருக்குறள்

திருக்குறள் என்பது, தமிழில் இதுபோதுள்ள அற நூல் களுள் தலைமை வாய்ந்த நூலாகும். தமிழ்மறையாகவும் உலகப் பொதுமறையாகவும் ஒப்புயர்வற்றுத் திகழும் இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சார்ந்தது. குறள் வெண்பாவினால் யாக்கப் பெற்றதனால் குறள் எனப் பெயர் பெற்றது. இது கருவியாகு பெயர். திரு என்பது இந்நூலின் தெய்வத் தன்மையினைக் குறிக்க வந்த அடைமொழியாகும். இந் நூல் - ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களைக் கொண்ட இந்நூல் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பெரும் பகுப்புக்களையுடையது; அறத்துப் பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் பெற்று இலங்குவது.

சங்க நூல்களுள் ஒன்றாகிய புறநானூற்றின் 34 ஆம் பாடலில், 'அறம் பாடிற்றே' என்பதால், ஆலத்தூர் கிழார் அறம் என்றே திருக்குறளைக் குறிக்கின்றமை தெளியலாம். 'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்' என்று புறம் 31 ஆம் பாடலில், முப்பொருளுள் அறத்தைச் சிறப்பாகக் கோவூர் கிழார் கூறியிருத்தல், திருக்குறளை ஆலத்தூர் கிழார் அறம் எனக் கூறியதற்குரிய விளக்கம் அளிக்கும்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலுமிரண்டும் சொல்லுக் குறுதி", "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" முதலிய தொடர்கள் இந்நூலின் பெருமையினை யுணர்த்தும் மரபுரை களாகும்.

"அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை"

என்று மாமூலனாரும்,

"அறமுதல் நான்கும் ... ... ... ... பன்னிய வள்ளுவனார்"

என்று கோவூர் கிழாரும்,

"முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்"

என்று கீரந்தையாரும்,

"நாலு மொழிந்தபெரு நாவலரே"
என்று தொடித்தலை விழுத்தண்டினாரும்,

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்"

என்று கொடிஞாழன் மாணிபூதனாரும் இந்நூலினைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

சங்க நூல்களின் சில பாடங்களில் திருக்குறளின் கருத்துக்களைக் காணலாம். திருக்குறள் எழுந்த காலத்திற்குப் பின் எழுந்த நூல்களும் திருக்குறளைப் பொன்னே போல் போற்றிக் கருத்துக்களையும் தொடர்களையும் கையாண்டுள்ளன.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற திருக்குறளினை மணிமேகலையில் சாத்தனார்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"

(மணிமேகலை; சிறைசெய் காதை: 59-61)

என்று திருவள்ளுவர் பெயர் கூறியே திருக்குறட்பாவினைக் கையாண்டிருப்பதனைக் காணலாம். திருக்குறள் இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல் அயல்நாட்டு மொழிகளான ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, இலத்தின், கிரீக்கு முதலிய பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே, இஃது உலகப் பெரு நூல்களுள் ஒன்றாம் என்பதில் எவர்க்கும் எத்தகைய கருத்து வேறுபாடும் இராது என்பது வெள்ளிடை மலையாம். குலம், சமயம், காலம், நாடு, நிறம், மொழி முதலிய வேற்றுமைகளையும் கடந்து நின்று, உலகில் யாவர்க்கும் பொதுவாகிய நல்லொழுக்க முறைகளையும் நெறிகளையும் நன்கு எடுத்துக் கூறுவதே அதற்குரிய காரணமாகும். இம்முறையில் திருக்குறள் தலைசிறந்து விளங்குவதனாற்றான் தமிழுலகில் தோன்றிய எத்தனையோ நூல்கள் அழிந்தும் திரிந்தும், உருத்தெரியாது சிதைந்தும் போயிருக்க, தன்னகத்தே கொண்டு மிளிரும் பொதுநோக்குக் கொள்கை மேம்பாட்டினால், அறச் சிறப்பினால் பொருட் பண்பினால், இன்பத் திறத்தினால் இந் நூல் மட்டும் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளாய் வளர்பிறையென வளர்ந்து பெருமை குன்றாது பெரும் பயனளித்து வருகின்றது.

திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் : தமிழ்மறை, பொதுமறை, பொய்யாமொழி, திருவள்ளுவப்பயன், வாயுறை வாழ்த்து, உத்திரவேதம், தெய்வ நூல் என்பனவாம்.

திருவள்ளுவர்க்கு வழங்கும் வேறு பெயர்கள் : நாயனுர், தேவர், முதறபாவலர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர், பெருநாவலர் முதலியவாம்.

திருக்குறளுக்கு உரையெழுதியவர் பதின்மர். அவற்றுட் பரிமேலழகர் உரையே திட்ப நுட்பம் வாய்ந்ததாகும். தமிழில் பழைய நாட்களிலேயே பதின்மர் உரைகண்ட நூல் திருக்குறள் ஒன்றேயாம். இன்றும் திருக்குறளுக்குப் பல உரைகள் வெளி வந்த வண்ணமிருப்பதை நோக்கும் பொழுது திருக்குறளின் ஆழமும் மாட்சியும் அழகும் நன்கு புலப்படா நிற்கும்.

திருவள்ளுவர் எனும் பெயர் குடிபற்றி வந்ததென்று ஒரு சிலரும், அரசர்க்குரிய உட்படு கருமத் தலைவர் என்பதனுல், அப்பெயர் வந்தது என்று ஒரு சிலரும் கருத்துக் கொள்கின் றனர். இவர்பற்றி வழங்கும் கதைகள் பலவும் சான்றுடையன என்று கொள்ளத்தக்கவை அல்ல. இவர் வாழ்வும் வரலாறும் இன்று உணர முடியாதிருப்பினும் இவர் பெருமையினை உலகம் நன்கு இனங்கண்டு விட்டது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியது புனைந்துரையன்று; பொருந்திய வுரையாம். டாக்டர் சுவைட்சர் முதலான பிற நாட்டு அறிஞர்கள் திருக்குறளைத் தம் நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். ஒப்பற்ற உலகப் பெருநூலை இயற்றிய திருவள்ளுவர் காலம் கிறித்தவ நூற்ருண்டின் தொடக்கம் என்பர்.

———

# திருக்குறள்

## 1. தெரிந்து செயல்வகை

1 அழிவதூஉம் ஆவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

2 தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

3 ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்.

4 தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

5 வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

6 செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

7 எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
னெண்ணுவ மென்ப திழுக்கு.

8 ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

9 நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

10 எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

## 2. வலியறிதல்

1 வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

2 ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

3 உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

4 அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

5 பீலிபெய் சாகாடும் அச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

6 நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

7 ஆற்றி னளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

8 ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

9 அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

10 உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

## 3. காலமறிதல்

1 பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2 பருவத்தோடு ஒட்ட வொழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

3 அருவினை யென்ப வுளவோ கருவியான்
கால மறிந்து செயின்.

4 ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

5 காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

6 ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

7 பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

8 செருநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காந் தலை.

9 எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

10 கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

## 4. இடனறிதல்

1 தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது.

2 முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

3 ஆற்றாரு மாற்றி யடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

4 எண்ணியா ரெண்ண மிழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

5 நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கி னதனைப் பிற.

6 கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து.

7 அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்.

8 சிறுபடையான் செல்லிடம் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

9 சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

10 காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

## 5. தெரிந்து தெளிதல்

1 அறம்பொரு ளின்ப முயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

2 குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

3 அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
லின்மை யரிதே வெளிறு.

4 குணம்நாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

5 பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

6 அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

7 காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

8 தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

9 தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

10 தேரான் றெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவுந்
தீரா விடும்பை தரும்.

# 5. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதற் காப்பியமாகும். உலக மொழிகளில் மன்னர் குலத்தினரைப் பற்றியே காப்பியங்கள் எழுந்திருக்கத் தமிழில் தோன்றிய முதற்காப்பியம் குடிமக்கள் காப்பியமாய் விளங்குகின்றது. வளமிகு காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குடியில் பிறந்து, பாண்டியன் தலைநகராம் மதுரையம்பதியிற் கணவன் கொலையுண்ண, மதுரையை எரித்து, மலைநாடாம் சேர நாட்டில் மன்னர் பலரும் போற்றுமாறு கோயில் கொண்டருளிய கற்புக்கரசியாம் கண்ணகியின் வரலாற்றை எளிய இனிய தமிழில் சொற்சுவையும் பொருள் நயமும் ததும்பச் சேரன் தம்பி இளங்கோவடிகள் இயற்றியருளிய காப்பியமே சிலப்பதிகாரம்.

### சிலப்பதிகாரத்தின் பதிகம்

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்

ஆகிய உண்மைகளை உலகிற்கு உணர்த்த இந்நூல் இயற்றப்பட்டதாகக் கூறுகின்றது. இது, கோவலனும் பாண்டியனும் இறத்தற்கும் அதன் வாயிலாகப் பலவுண்மைகள் வெளியாதற்கும் காரணமாயிருந்த சிலம்பின் பெயரால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

இது புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளையும், மங்கல வாழ்த்துப்பாடல் முதலாக வரந்தருகாதை ஈருக முப்பது சிறு பிரிவுகளையும் உடையது. புகார்க் காண்டத்தில் சோழனின் சிறப்பும், மதுரைக் காண்டத்தில் பாண்டியனின் கொற்றமும், வஞ்சிக்காண்டத்தில் சேரனின் வீரமும் சிறக்கப் பேசப்பட்டுள்ளன. புகார்க் காண்டம் உவகைச் சுவை கெழுமியது; மதுரைக் காண்டம் அவலச் சுவை மிக்கது; வஞ்சிக்காண்டம்

வீரச்சுவை செறிந்தது. முடியுடை மூவேந்தரின் தலைநகராற் பெயரமைந்து ஒற்றுமையினை எடுத்து மொழியும் ஓர் ஒருமைப் பாட்டுக் காப்பியமாய்ச் சிலப்பதிகாரம் மிளிர்கின்றது. தமிழ் நாடு முழுவதும் தண்டாத இன்பத் தமிழ்ச் சோலையாக விளங்கவேண்டும் என இன்பக் கனவு கண்டவர் இளங் கோவடிகளாவர்.

இந்நூல், முத்தமிழும் விரவப் பெற்றதாதலின் இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் என்றும், நாடக வுறுப்புக்களைக் கொண்டுள்ள தாதலின் நாடகக் காப் பியம் என்றும், இடையிடையே உரையும் இசைப்பாட்டும் விரவியுள்ள தாதலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும், அழைக்கப்பெறும். இதில் உள்ள அகவல்களெல்லாம் னகரவொற்றில் முடிதலின், தொல் காப்பியச் சூத்திரப்படி, இந்நூல் இயைபு என்னும் வனப்பு வகையைச் சேர்ந்ததாகும். சிலப்பதிகாரம் ஒன்பான் சுவையும் ஒருங்கமைந்த சிறந்த காப்பியமாதலன்றித் தமிழக வரலாற்று நூலெனவும், தமிழ்மொழி வரலாற்று நூலெனவும், கவின் கலை நூலெனவும் மதிக்கத்தக்க சிறப்புடையதாகவும், எல்லா வகையானும் தமிழுக்கே உரிமையுடையதாகவும், தமிழர் ஆண்மையை விளக்குவதாகவும் உள்ளது. இலங்கைக் கயவாகு மன்னன் சேரன் செங்குட்டுவன் தன் கோநகராம் வஞ்சியில் கற்பரசி கண்ணகிக்குக் கடவுட்கோட்டம் கண்டு செய்த பெருவிழாவிற்கு வந்திருந்தனன் என்பது கொண்டு இந்நூலின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனத் துணியப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் சேரன்செங்குட்டுவனின் தம்பி என்பதும், அவன்தன் செல்லல் நீங்கவே துறவியானார் என்பதும் சிலப்பதிகாரத்தின் வழி நாம் தெரிந்து கொள்ளும் செய்திகளாகும். சாத்தனாரின் தூண்டுதலாற் 'குணவாயிற் கோட்டத்து அரசுதுறந் திருந்த அடிகள்' இந் நூலை ஆக்கித் தமிழ்கூறு நல்லுலகுக்கு அளித்துள்ளார் என்பதும் அறியத் தக்க செய்தியாகும். இளங்கோவடிகளுடைய முத்தமிழ்ப் புலமையும் நடுநிலைக் கூற்றும், உயிரோவியம் போலக் கடந்த காலத்தில் கழிந்த நிகழ்ச்சிகளைக் கண்முன் கொணர்ந்து நிறுத்தும் செய்யுள் வன்மையும் யாவரும் வியந்து பாராட்டற் குரியனவாகும்.

இந்நூற்கு அருஞ்சொல்லுரை யொன்றும் விரிவுரை யொன்றுமாக இரு பழைய உரைகள் உள்ளன. அவற்றுள் முன்னதன் ஆசிரியர் அரும்பதவுரையாசிரியர் எனவும், பின்னதன் ஆசிரியர் அடியார்க்கு நல்லார் எனவும் அழைக்கப் பெறுகின்றனர். அடியார்க்கு நல்லார் உரையின்றேல் நாம் பழந்தமிழகத்தின் கலைபற்றிய செய்திகளை எவ்வளவோ அறியாமலிருந்திருப்போம் என்பது முற்றும் உண்மையாம்.

## கொலைக்களக் காதை

அடைக்கலமாகப் பெற்ற கண்ணகியையும் கோவலனை யும் மாதரி புதிய மனையொன்றில் இருத்தித் தன் மகள் ஐயையைக் கண்ணகிக்குத் துணையாக வைத்து அடிசிலாக்கு தற்கு வேண்டும் நற்பொருள்களை நனிமகிழ்ந்தளிக்க, கண்ணகி சமைத்த உணவைத் திருத்தமுறக் கோவலன் உண்டனன். உணவுக்குப் பின்னர் வெற்றிலைப் பாக்கு அளித்து நின்ற கண்ணகியைக் கோவலன் அருகணைத்துத் தன் தவறுன வொழுக்கத்திற் கிரங்கி "ஈங்கு என்னொடு போந்து என்துயர் களைந்த பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்! நாணின் பாவாய்! நீணில விளக்கே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! நிற்சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டுபோய் மாறி வருவன் மயங்காதிரு" எனத் தேற்றி நீங்கிச் சென்றனன். மதுரைமாநகரில் பீடிகைத் தெருவில் பொற்கொல்லர் நூற்றுவர் பின்வர முன்வந்த ஒரு பொற்கொல்லனைக் கண்டு, தான் விற்பதற்குக் கொணர்ந்த சிலம்பினைக் காட்ட, அப் பொற்கொல்லன் அரசமாதேவியின் சிலம்பு கவர்ந்த கள்வனுதலால், அத்தீச் செயல் வெளிப்படு முன், இச் சிலம்பாற் கோவலனைக் குற்றவாளியாக்கிவிடலாம் எனத் துணிந்து, துணிந்த வண்ணமே செயற்படுகின்றுன். 'கோப்பெருந்தேவி அணிதற்குரிய சிலம்பினை நான் அரசற் கறிவித்துவிட்டு வருங்காலும் இவ்விடத்திருப்பீர்' என்று கூறிச் செல்லும் பொற்கொல்லன், தன் தேவியின் ஊடல் தணித்தற் பொருட்டு அவள் அந்தப்புரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பாண்டியன் நெடுஞ்செழியனைக் கண்டு 'சிலம்பு திருடிய கள்வன் அகப்பட்டனன்' என்னவும், 'கொன்று அச் சிலம்பைக் கொணர்வீர்' என்று 'வினைவிளை கால மாதலின் சினையலர் வேம்பின் மன்னன் தேராதுகிச்'

சொற்றனன். அதனைக் கேட்டு மகிழ்ந்து கொலையாளிக ளோடு கோவலன் இருப்பிடஞ் சேர்ந்த பொற்கொல்லன், 'அரசன் ஏவலாற் சிலம்பு காண வந்தோர் இவர்' எனக் கூறி, அவன் கைச் சிலம்பினைக் காட்டுவித்து, 'முகக்குறி முதலியவற்றால் நோக்கின் இவன் கள்வனல்லன்' எனக் கூறிய கொலைஞரைச் சினந்து நோக்கி, களவு நூல் கூறும் ஏதுக்களை யெல்லாம் எடுத்துக்காட்டிக் கோவலனைக் கள்வ னென்று வற்புறுத்தவும், அப்பொழுது கல்லாக் களிமகன் ஒருவன் கோவலனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினன். மண்ணக மடந்தை பெருந்துன்பம் அடையக் கோவலன் குருதி படிந்து நன்னிலம் செந்நிலமாயிற்று. கோவலனின் பண்டை ஊழ்வினை உருத்தவும், வளையாத காவலன் செங் கோலும் வளைந்தது.

# சிலப்பதிகாரம்

## கொலைக்களக் காதை

அரும்பெறற் பாவையை யடைக்கலம் பெற்ற
இரும்பே ருவகையி னிடைக்குல மடந்தை
அளைவிலை யுணவி னாய்ச்சியர் தம்மொடு
மிளைசூழ் கோவல ரிருக்கை யன்றிப்
பூவ லூட்டிய புனைமாண் பந்தர்க்

காவற் சிற்றிற் கடிமனைப் படுத்துச்
செறிவளை யாய்ச்சியர் சிலருடன் கூடி
மறுமலர்க் கோதையை நாணீ ராட்டிக்
கூடல் மகளிர் கோலங் கொள்ளும்
ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்

செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மகள்
ஐயை காணீ ரடித்தொழி லாட்டி
பொன்னிற் பொதிந்தேன் புனைபூங் கோதை
என்னுட னங்கையீங் கிருக்கெனத் தொழுது
மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி

ஏத மில்லா விடந்தலைப் படுத்தினள்
நோதக வுண்டோ நும்மக னார்க்கினிச்
சாவக நோன்பிக ளடிக ளாதலின்
நாத்தூ ணங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசி லாக்குதற் கமைந்தநற் கலங்கள்

நெடியா தளிமி னீரெனக் கூற
இடைக்குல மடந்தைய ரியல்பிற் குன்றா
மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்

மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப
மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்

திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற.அட்டில் கண்டனள் பெயர
வையெரி மூட்டிய வையை தன்னொடு
கையறி மடைமையிற் காதலற் காக்கித்
தாலப் புல்லின் வால்வெண் டோட்டுக்

கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசிற் செல்வ னிருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையிற் றொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்

தண்ணீர் தெளித்துத் தன்கையாற் றடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்
கமுத முண்க வடிக ளீங்கென
அரசர் பின்னோர்க் கருமறை மருங்கின்
உரிய வெல்லா மொருமுறை கழித்தாங்

காயர் பாடியி னசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணு நம்பி யீங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுனை யாற்றினுட் டூமணி வண்ணனை

விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையுந் தவ்வையும் விம்மித மெய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சி யீங்கென
உண்டினி திருந்த வுயர்பே ராளற்
கம்மென் திரையலோ டடைக்கா யீத்த

மையீ ரோதியை வருகெனப் பொருந்திக்
கல்லத ரத்தங் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடியென
வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி
எம்முது குரவ ரென்னுற் றனர்கொல்

மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவது மறியேன்
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்

நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ ?
இருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய் தனையென

அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னையும்
பெருமக டன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்

முந்தை நில்லா முனிவிகந் தனனா
அற்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
எற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமு நொடிவது போலுமென்
வாயல் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப்

போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலின்
ஏற்றெழுந் தனன்யா னென்றவள் கூறக்
குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கு மாயமு நீங்கி

நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே

கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகெனக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னை
ஒருங்குடன் றழீஇ யுழையோ ரில்லா

ஒருதனி கண்டுதன் னுள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ண னாகிப்
பல்லான் கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்
இமிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்
தன்குல மறியுந் தகுதியன் றாதலின்
தாதெரு மன்றந் தானுடன் கழிந்து
மாதர் வீதி மறுகிடை நடந்து
பீடிகைத் தெருவிற் பெயர்வோ னாங்கண்
கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவின்
கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகித்
தென்னவன் பெயரோடு சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்ல னிவனெனப் பொருந்திக்
காவலன் றேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதி யோவென
அடியே னறியே னாயினும் வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யானெனக்
கூற்றத் தூதன் கைதொழு தேத்தப்
போற்றருஞ் சிலம்பின் பொதிவா யவிழ்த்தனன்
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூற்
சித்திரச் சிலம்பின் செய்வினை யெல்லாம்
பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துட னோக்கிக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்பு
யாப்புற வில்லை யெனமுன் போந்து
விறல்மிகு வேந்தற்கு விளம்பியான் வரவென்
சிறுகுடி லங்க ணிருமி னீரெனக்
கோவலன் சென்றக் குறுமக னிருக்கையோர்
தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்
கரந்தியான் கொண்ட காலணி யீங்குப்
பரந்து வெளிப்படா முன்ன மன்னற்குப்
புலம்பெயர் புதுவனிற் போக்குவ னியானெனக்
கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன்

கூடன் மகளி ராடற் றோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவல னுள்ளங் கவர்ந்தன வென்றுதன்
ஊட லுள்ள முள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தந் தன்மே லிட்டுக்
குலமுதற் றேவி கூடா தேக
மந்திரச் சுற்ற நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கட் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயி னோக்கிக்
காப்புடை வாயிற் கடைகா ணகவையின்
வீழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல வேத்திக்
கன்னக மின்றியுங் கவைக்கோ லின்றியும்
துன்னிய மந்திரந் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயி லுறுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனென
வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா னாகி
ஊர்காப் பாளரைக் கூவி யீங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்
காவல னேவக் கருந்தொழிற் கொல்லனும்
ஏவ லுள்ளத் தெண்ணியது முடித்தெனத்
தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன் றன்னைக் குறுகின னாகி
வலம்படு தானை மன்னவ னேவச்
சிலம்பு காணிய வந்தோ ரிவரெனச்
செய்வினைச் சிலம்பின் செய்தி யெல்லாம்
பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட,
இலக்கண முறைமையி னிருந்தோ னீங்கிவன்
கொலைப்படு மகனல னென்று கூறும்
அருந்திறன் மாக்களை யகநகைத் துரைத்துக்
கருந்தொழிற் கொல்லன் காட்டின னுரைப்போன்

மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தம்
தந்திர மிடனே காலங் கருவியென்
றெட்டுட னன்றே யிழுக்குடை மரபிற்
கட்டுண் மாக்க டுணையெனத் திரிவது
மருந்திற் பட்டீ ராயின் யாவரும்

பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டீர்
மந்திர. நாவிடை வழுத்துவ ராயின்
இந்திர குமரரின் யாங்காண் குவமோ
தெய்வத் தோற்றந் தெளிகுவ ராயிற்
கையகத் துறுபொருள் காட்டியும் பெயர்குவர்

மருந்தி னங்கண் மயக்குவ ராயின்
இருந்தோம் பெயரு மிடனுமா ருண்டோ
நிமித்தம் வாய்த்திடி னல்ல தியாவதும்
புகற்கில ரரும்பொருள் ஏந்துகைப் புகுதினும்
தந்திர கரண மெண்ணுவ ராயின்

இந்திரன் மார்பத் தாரமு மெய்துவர்
இவ்விட மிப்பொருள் கோடற் கிடமெனின்
அவ்விடத் தவரை யார்காண் கிற்பார்
காலங் கருதி யவர்பொருள் கையுறின்
மேலோ ராயினும் விலக்கலு முண்டோ

கருவி கொண்டவ ரரும்பொருள் கையுறின்
இருநில மருங்கினி யார்காண் கிற்பார்
இரவே பகலே யென்றிரண் டில்லை
கரவிடங் கேட்பினோர் புகலிட மில்லை
தூதர்கோ லத்து வாயிலின் இருந்து

மாதர்கோ லத்து வல்லிருட் புக்கு
விளக்கு நிழலிற் றுளக்கிலன் சென்றாங்
கிளங்கோ வேந்தன் றுளங்கொளி யாரம்
வெயிலிடு வயிரத்து மின்னின் வாங்கத்
துயில்கண் விழித்தோன் றோளிற் காணான்

உடைவா ளுருவ வுறைகை வாங்கி
எறிதொறுஞ் செறித்த வியல்பிற் காற்றான்
மல்லிற் காண மணித்தூண் காட்டிக்
கல்வியிற் பெயர்ந்த கள்வன் றன்னைக்
கண்டோ ருளரெனிற் காட்டு மீங்கிவர்க்

குண்டோ வுலகத் தொப்போ ரென்றக்
கருந்தொழிற் கொல்லன் சொல்ல வாங்கோர்
திருந்துவேற் றடக்கை யிளையோன் கூறும்
நிலனக ழுளிய னீலத் தானையன்
கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று

மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தூர்மடி கங்கு லொருவன் றோன்றக்
கைவா ளுருவவென் கைவாள் வாங்க
வெவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலேன்
அரிதிவர் செய்தி யலைக்கும் வேந்தனும்

உரியதொன் றுரைமி னுறுபடை யீரெனக்
கல்லாக் களிமக னொருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன் விலங்குகூ டறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்

காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை யூழ்வினை யுருத்தென்.

# 6. சீவக சிந்தாமணி

சீவக சிந்தாமணி என்பது தமிழ் மொழியில் அமைந்த பெருங் காப்பியங்களுள் ஒன்ருகும். பழைய இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் பெருமை சான்றது இந்நூல். கம்பராமாயணம் முதலான பெருநூல்களுக்கெல்லாம் இந்நூல் வழிவகுத்துக் கொடுத்தது என்பர்.

இது சீவகன் என்னும் அரசன், பிறந்தது முதல் வீடெய்தியது ஈருக உள்ள கதை பொதிந்ததாகும். நல் வாழ்விற்கு உரிய சிறந்த கருத்துக்களெல்லாம் இதன்கண் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

சிந்தாமணி என்பது இந்நூலுக்குத் தன்மையால் வந்த பெயர் என்பர் நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர். சீவக னுடைய தாயாகிய விசயை அவன் பிறந்தவுடன் அவனைச் சிந்தாமணியே என்றது முதலில் அவனுக்குப் பெயராயிற்று; அதன் பின் அவனைப் பற்றிப் பாடப்பெற்ற இந்நூலுக்குப் பெயராயிற்று என்று கூறுதலும் உண்டு.

சுடுகாட்டில் விசயை பெற்ற குழந்தையைக் கந்துக்கடன் என்னும் வணிகன் எடுத்தபோது, அக் குழந்தை தும்மிற்று. அங்கு ஒரு குரல் 'சீவ' என்று எழுந்தது. அது காரண மாகவே அக் குழந்தைக்குச் சீவகன் என்ற பெயர் இடப் பட்டது. எனவே சீவகனும் சிந்தாமணியும் ஆன ஒருவனது வரலாற்றைக் கூறும் நூல் சீவகசிந்தாமணி என்னும் பெயர் பெற்றது மிக்க பொருத்தமுடையது.

இந்நூலுக்கு "மணநூல்" என்ருெரு பெயரும் உண்டு. அதற்குக் காரணம், இந்நூற் பகுதிகளாகிய பதின்மூன்று இலம்பகங்களுள் 3, 4, 5, 6, 7, 8, 9, 12ஆம் இலம்பகங்களில் சீவகன் காந்தருவதத்தை முதலிய எண்மரைத் தனித் தனியே மணந்துகொண்டதாகக் கூறப்படுதல் ஆகும்.

இந்நூலை இயற்றியவர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவர். இவர் சோழ குலத்திலே பிறந்தவர்; நல்லாசிரியரிடம் இலக்கண இலக்கியம் அனைத்தும் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிவு பெற்றவர்; இளமையிலேயே துறவறம் பூண்டு தம் ஆசிரியரைவிட்டு நீங்காமல் அவர் கருத்தின் வழியே ஒழுகி வந்தவர்; துறவறப் புலவர்கட்குக் காமச் சுவையுடன் பாடத் தெரியாது என்று சங்கப் புலவர்கள் கூறிய உரையைப் பொறுக்கலாற்ருது தம்முடைய ஆசிரியர்பால் இசைவு பெற்றுக் காமச்சுவை மிகுதியாக விளங்க இந்நூலை இயற்றியவர்; தம் ஆற்றலை ஆசிரியர்க்கு மெய்ப்பிக்க இந்நூல் இயற்றுவதற்குமுன் நரிவிருத்தம் என்னும் ஒரு சிறு நூல் இயற்றியவர். இவ்வாறு இவரைப் பற்றிய செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன.

இந்நூல் 8-ம் நூற்ருண்டில் எழுந்தது எனச் சிலரும் 10-ம் நூற்ருண்டில் எழுந்தது எனப் பலரும் கருதுகின்றனர்.

இந்நூலுக்கு நச்சினர்க்கினியர் ஓர் அரிய உரை இயற்றியுள்ளார்.

இந்நூலுக்கு முதல் நூல் இன்னதென்பது தெளிவாகத் துணியக்கூடவில்லை. க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்திர சம்பு என்ற நான்கு நூல்கள் சீவகன் வரலாற்றைக் கூறுவனவாய் வடமொழியில் உள்ளன. அவற்றுள் க்ஷத்திர சூடாமணியே இந்நூலுக்கு முதல் நூல் என்று சமணர் கருதுகின்றனர்.

இங்கே பாடமாக உள்ள பகுதி சிந்தாமணியின் எட்டாம் இலம்பகத்தில் உள்ளது.

சீவகன் தண்டகாரணியம் சென்று தன் தாயின் அறிவுரை பெற்று, மாமனுகிய கோவிந்தனிடம் செல்லும் வழியில், நகரில் பந்து விளையாடிக்கொண்டிருந்த விமலையைக் கண்டு காதல் கொள்ளலும், அவளுடைய தந்தையின் விருப்பப்படி அவளை மணத்தலும் இப்பகுதியில் கூறப்படும்.

# சீவக சிந்தாமணி

## விமலையாரிலம்பகம்

### நந்தட்டன் பதுமுகனுக்குக் கூறல்

1 முருகுகொப் புளிக்குங் கண்ணி முறிமிடை படலை மாலைக்
குருதிகொப் புளிக்கும் வேலோன் கூந்தன்மா
[விவர்ந்து செல்ல
உருவவெஞ் சிலையி னற்குத் தம்பியிஃ துரைக்கு
[மொண்பொற்
பருகுபைங் கழலி னருட் பதுமுகன் கேட்க வென்றே

2 விழுமணி மாசு மூழ்கிக் கிடந்ததிவ் வுலகம் விற்பக்
கழுவினீர் பொதிந்து சிக்கக் கதிரொளி மறையக் காப்பிற்
றழுவினீ ருலக மெல்லாந் தாமரை யுறையுஞ் செய்யாள்
வழுவினர் தம்மைப் புல்லாள் வாழ்கநுங் கண்ணி
[மாதோ.

3 தொழுததங் கையி னுள்ளுங் துறுமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரி னுள்ளு மணிகலத் தகத்து மாய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுட
[னெடுங்கும் பற்று
தொழிகயார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார்
[விளிகுற் றாரே.

4 வண்ணப்பூ மாலை சாந்தம் வாலணி கலன்க ளாடை
கண்முகத் துறுத்தித் தூய்மை கண்டலாற் கொள்ள
[வேண்டா
அண்ணலம் புள்ளோ டெல்லா வாயிரம் பேடைச் சேவல்
உண்ணுநீ ரமிழ்தங் காக்க யூகமோ டாய்க வென்றான்.

5 அஞ்சனக் கோலி னற்றா நாகமோ ரருவிக் குன்றிற்
குஞ்சரம் புலம்பி வீழக் கூர்நுதி யெயிற்றிற் கொல்லும்
பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காத்தல் வேண்டு மரும்பொரு ளாக
[வென்றான்.

6 பொருந்தலாற் பல்லி போன்றும் போற்றலாற் ருய [ரொத்தும்
அருந்தவர் போன்று காத்து மடங்கலா லாமை [போன்றும்
திருந்துவேற் றெவ்வர் போலத் தீதற வெறிந்து மின்ப
மருந்தினன் மனைவி யொத்து மதலையைக் காமி [னென்ருன்.

7 பூந்துகின் மாலை சாந்தம் புனைகலம் பஞ்ச வாசம்
ஆய்ந்தளந் தியற்றப் பட்ட வடிசினீ ரின்ன வெல்லாம்
மாந்தரின் மடங்க லாற்றற் பதுமுகன் காக்க வென்ருங்
கேந்துபூண் மார்ப னேவ வின்னண மியற்றி னனே.

மலைவளம்

8 சிறுகண்யா னையினினஞ் சேர்ந்துசே வகங்கொளத்
துறுகலென் றுணர்கலாத் துள்ளிமந் திம்மக
நறியசந் தின்றுணி நாறவெந் தனகள்கொண்
டெறியவெள் கிம்மயிர்க் கவரிமா விரியுமே.

9 புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன
பவழமே யனையன பன்மயிர்ப் பேரெலி
அகழுமிங் குலிகமஞ் சனவரைச் சொரிவன
கவழயா னையினுதற் றவழுங்கச் சொத்தவே.

10 அண்ணலங் குன்றின்மேல் வருடைபாய்ந் துழக்கலின்
ஒண்மணி பலவுடைந் தொருங்கவை தூளியாய்
விண்ணுளு வுண்டென வீழுமா நிலமிசைக்
கண்ணகன் மரமெலாங் கற்பக மொத்தவே.

11 மானிடம் பழுத்தன கிலுத்தமற் றவற்றயற்
பான்முரட் பயம்பிடைப் பனைமடிந் தனையன
கானிடைப் பாந்தள்கண் படுப்பன துயிலெழ
ஊனுடைப் பொன்முழை யாளிநின் றுலம்புமே.

12 சாரலந் திமிசிடைச் சந்தனத் தழைவயின்
நீரதீம் பூமரந் நிரந்ததக் கோலமும்
சீரில வங்கமு மின்கருப் பூரமும்
ஒருநா விகலந் தோசனை கமழுமே.

13. மைந்தரைப் பார்ப்பன மாமகண் மாக்குழாம்
சந்தன மேய்வன தவழ்மதக் களிற்றினம்
அந்தழைக் காடெலாந் தினைப்பவா மானினம்
சிந்தவால் வெடிப்பன சிங்கமெங் கும்முள.

14. வருக்கையின் கனிதொறும் வானரம் பாய்ந்துராய்ப்
பொருப்பெலாம் பொன்கிடந் தொழுகிமேற்
றிருவில்வீழ்ந்
தொருக்குலாய் நிலமிசை மிளிர்வவொத் தொளிர்மணி
திருக்கிள ரொளிகுலாய் வானகஞ் செகுக்குமே.

15. வீழ்பனிப் பாறைக ணெறியெலாம் வெவ்வெயிற்
போழ்தலின் வெண்ணெய்போற் பொழிந்துமட்
[டொழுகுவ
தாழ்முகில் சூழ்பொழிற் சந்தனக் காற்றசைந்
தாழ்துயர் செய்யுமவ் வருவரைச் சாரலே.

16. கூகையுங் கோட்டமுங் குங்கும மும்பரந்
தேகலா காநிலத் தல்கிவிட் டெழுந்துபோய்த்
தோகையு மன்னமுந் தொக்குட னூர்ப்பதோர்
நாகநன் காவினு ணயந்துவிட் டார்களே.

17. பூத்தகி றவழும் போர்வை பூசுசாந் தாற்றி பொன்னூற்
கோத்துநீர் பிலிற்றுங் காந்தங் குங்கும வைரப்
[பொற்கோய்
சாத்துறி பவழக் கன்னல் சந்தன வால வட்டம்
நீத்தவ ரிடத்து நாற்றி நிழன்மணி யுலகஞ் செய்தார்.

விசயையைக் கண்டு கூறல்

18. பொறிமயி லிழியும் பொற்றூர் முருகனிற் பொலிந்து
[மாவின்
நெறிமையி னிழிந்து மைந்தன் மணிக்கைமத்
[திகையை நீக்கி
வெறுமையி னவரைப் போக்கி வெள்ளிடைப் படாத
[நீரால்
அறிமயி லகவுங் கோயி லடிகளைச் செவ்வி யென்றான்.

19. எல்லிருட் கனவிற் கண்டேன் கண்ணிட னுடு மின்னே
பல்லியும் பட்ட பாங்கர் வருங்கொலோ நம்பி யென்று
சொல்லின டேவி நிற்பப் பதுமுகன் றெழுது சேர்ந்து
நல்லடி பணிந்து, நம்பி வந்தன னடிக ளென்றான்.

விசயை உருகுதல்; விருந்து செய்தல்

20. எங்கணை யனைய னென்றாட் கடியன்யா னடிக ளென்னைப்
பொங்கிவில் லுமிழ்ந்து மின்னும் புனைமணிக் கடிக [மார்ந்த
தங்கொளித் தடக்கை கூப்பித் தொழுதடி தழுவி [வீழ்ந்தான்
அங்கிரண் டற்பு முன்னீ ரலைகடல் கலந்த தொத்தார்.

21. வாட்டிறற் குருசி றன்னை வாளம ரகத்து ணீத்துக்
காட்டகத் தும்மை நீத்த கயத்தியேற் காண வந்தீர்
சேட்டிளம் பருதி மார்பிற் சீவக சாமி யீரே
ஊட்டரக் குண்ட செந்தா மரையடிநோவ வென்றாள்.

22. கெடலருங் குரைய கொற்றங் கெடப்பிறந் ததுவு மன்றி
நடலையு ளடிகள் வைக நட்புடை யவர்க ளைய
இடைமகன் கொன்ற வின்னா மரத்தினேன் றந்த [துன்பக்
கடலகத் தழுந்த வேண்டா களைகவிக் கவலை யென்றான்.

23. யானல னெளவை யாவாள் சுநந்தையே யையற் [கென்றும்
கோனலன் றந்தை கந்துக் கடனெனக் குணத்தின் [மிக்க
பானிலத் துறையுந் தீந்தே னனையவா யமிர்த மூற
மானலங் கொண்ட நோக்கி மகன்மன மகிழச் [சொன்னாள்.

24. எனக்குயிர்ச் சிறுவ னவா னந்தனே யைய னல்லை
வனப்புடைக் குமர னிங்கே வருகென மருங்கு சேர்த்திப்
புனக்கொடி மாலை யோடு பூங்குழ லிருத்திப் போற்றார்
இனத்திடை யேற னனுக் கின்னளி விருந்து செய்தாள்.

25. சிறகராற் பார்ப்புப் புல்லித் திருமயி லிருந்த தேபோல்
இறைவிதன் சிறுவர் தம்மை யிருகையி னலும் புல்லி
முறைமுறை குமரர்க் கெல்லா மொழியமை முகமன் கூறி
அறுசுவை யமிர்த மூட்டி யறுபகல் கழிந்த பின்னாள்.

**நீதி அறிவுறுத்தல்; கருத்தினை வினுதல்**

26. மரவ நாக மணங்கமழ் சண்பகம்
குரவங் கோங்கங் குடம்புரை காய்வழை
விரவு பூம்பொழில் வேறிருந் தாய்பொருள்
உருவ மாத ருரைக்குமி தென்பவே.

27. நலிவில் குன்றெடு காடுறை நன்பொருட்
புலிய னார்மகட் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொண் மன்னர் வழக்கென நேர்பவே.

28. நீதி யாலறுத் தந்நிதி யீட்டுதல்
ஆதி யாயவ ரும்பகை நாட்டுதல்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்துபி ளந்திடல் பெட்டதே.

29. ஒற்றர் தங்களை யொற்றறி னய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றஞ் சூழ்ந்துபெ ருக்கலுஞ் சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே.

30. வென்றி யாக்கலு மேதக வாக்கலும்
அன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலும்
பொன்றுஞ் சாகத்தி னய்பொருள் செய்யுமே.

31. பொன்னி னாகும் பொருபடை யப்படை
தன்னி னாகுந் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெருப்பொரு ளப்பொருள்
துன்னுங் காலைத்துன் னாதன வில்லையே.

32. நிலத்தி னீங்கி நிதியினுந் தேய்ந்துநம்
குலத்திற் குன்றிய கொள்கைய மல்லதூஉம்
கலைக்க ணாளரு மிங்கில்லை காளைநீ
வலித்த தென்னென வள்ளலுங் கூறுவான்.

## சீவகன் விடை

33. எரியொடு நிகர்க்கு மாற்ற லிடிக்குரற் சிங்க மாங்கோர்
நரியொடு பொருவ தென்ருற் சூழ்ச்சிநற் றுணையொ
டென்னும்
பரிவொடு கவல வேண்டா பாம்பவன் கலுழ னுகும்
சொரிமதுச் சுரும்புண் கண்ணிச் சூழ்கழ னந்த
னென்ருன்.

## விசயை பாராட்டல்

34. கெலுழனே நந்த னென்னுக் கிளரொளி வனப்பி னுனைக்
கலுழத்தன் கையாற் றீண்டிக் காதலிற் களித்து நோக்கி
வலிகெழு வயிரத் தூண்போற் றிரண்டுநீண்
டமைந்த திண்டோள்
கலிகெழு நிலத்தைக் காவா தொழியுமோ காளைக்
கென்ருள்.

35. இடத்தொடு பொழுது நாடி யெவ்வினைக் கண்ணுமஞ்சார்
மடப்பட லின்றிச் சூழு மதிவல்லார்க் கரிய துண்டோ
கடத்திடைக் காக்கை யொன்றே யாயிரங் கோடி கூகை
இடத்திடை யழுங்கச் சென்ருங் கின்னுயிர் செகுத்த
தன்றே.

36. இழைபொறை யாற்ற கில்லா திட்டிடை தளர நின்ற
குழைநிற முகத்தி னுர்போற் குறித்ததே துணிந்து
செய்யார்
முழையுறை சிங்கம் பொங்கி முழங்கிமேற் பாய்ந்து
மைதோய்
வழையுறை வனத்து வன்க ணரிவலைப் பட்ட தன்றே.

## பதுமுகன் கூறல்

37. ஊழிவாய்த் தீயோ டொப்பான் பதுமுக னுரைக்கு
மொன்னுர்
ஆழிவாய்த் துஞ்ச மற்றெம் மாற்றலா னெருங்கி
வென்று
மாழைநீ ணிதியந் துஞ்சு மாநிலக் கிழமை யெய்தும்
பாழியாற் பிறரை வேண்டேம் பணிப்பதே பாணி
யென்ருன்.

## மற்றத் தோழர் கூறல்

38. பொருவருங் குரைய மைந்தர் பொம்மென வுரறி யாங்கள்
திருவிருந் தகன்ற மார்பன் சேவடி சேர்ந்த யாங்கள்
எரியிருந் தயரு நீர்மை யிருங்கதி ரேற்ற தெவ்வர்
வருபணி யிருளு மாக மதிக்கவெம் மடிக ளென்றார்.

## விசயை அறிவுரை

39. கார்தோன்ற வேமலரு முல்லை கமலம் வெய்யோன்
தேர்தோன்ற வேமலருஞ் செம்மனின் மாமன் மற்றுன்
சீர்தோன்ற வேமலருஞ் சென்றவன் சொல்லி னோடே
பார்தோன்ற நின்றபகை யைச்செறற் பாலை யென்றாள்.

## சீவகன் வேண்டுகோள்

40. நன்றப் பொருளே வலித்தேன்மற் றடிக ளாளைச்
சென்றப் பதியு ளெமர்க்கேயென துண்மை காட்டி
அன்றைப் பகலே யடியேன்வந் தடைவ னீமே
வென்றிக் களிற்று னுழைச்செல்வது வேண்டு மென்றான்.

## ஏமாங்கத நாட்டுக்குச் செல்லுதல்

41. வேற்றைவந் தன்ன நுதிவெம்பரற் கான முன்னி
நூற்றைவ ரோடு நடந்தானுதி வல்வின் மைந்தன்
காற்றிற் பரிக்குங் கலிமான்மிசைக் காவ லோம்பி
ஆற்றற் கமைந்த படையோடதர் முன்னி னானே.

42. மன்றற் கிடனு மணிமால்வரை மார்பன் வான்கண்
நின்றெத் திசையு மருவிப்புன னீத்த மோவாக்
குன்றுங் குளிர்நீர்த் தடஞ்சூழ்ந்தன கோல யாறும்
சென்றப் பழனப் படப்பைப்புன னாடு சேர்ந்தான்.

43. காவின்மேற் கடிமலர் தெகிழ்ந்த நாற்றமும்
வாவியு ளினமல ருயிர்த்த வாசமும்
பூவிரி கோதையர் புனைந்த சாந்தமும்
ஏவலாற் கெதிரெதிர் விருந்து செய்தவே.

## இராசமாபுரத்தில் தங்குதல்

44. கரும்பின்மேற் ளுடுத்ததேன் கலிகொ டாமரைச்
சுரும்பின்வாய்த் துளித்தலிற் றுவைத்த வண்டொடு
திருந்தியாழ் முரல்வதோர் தெய்வப் பூம்பொழிற்
பொருந்தினன் புனைமணிப் பொன்செய் பூணினன்.

45. பொறைவிலங் குயிர்த்தன பொன்செய் மாமணிச்
செறிகழ லிளையருஞ் செல்ல னீங்கினர்
நறைவிரி கோதையர் நாம வேலினாற்
கறுசுவை நால்வகை யமுத மாக்கினர்.

46. கட்டியி னரிசியும் புழுக்குங் காணமும்
புட்டில்வாய்ச் செறித்தனர் புரவிக் கல்லவும்
நெட்டிருங் கரும்பொடு செந்நென் மேய்ந்துநீர்
பட்டன வளநிழற் பரிவு தீர்ந்தவே.

47. குழிமதுக் குவளையங் கண்ணி வார்குழற்
பிழிமதுக் கோதையார் பேண வின்னமு
தழிமதக் களிறனு னயின்ற பின்னரே
கழிமலர் விழித்தகண் கமலம் பட்டவே.

48. எரிமணி யிமைத்தன வெழுந்த தீம்புகை
புரிநரம் பிரங்கின புகன்ற தீங்குழல்
திருமணி முழவமுஞ் செம்பொற் பாண்டிலும்
அருமணி யின்குர லரவஞ் செய்தவே.

49. கனைகதிர்க் கடவுள்கண் விழித்த காலையே
நனைமலர்த் தாமரை நக்க வண்கையாற்
புனைகதிர்த் திருமுகங் கழுவிப் பூமழை
முனைவனுக் கிறைஞ்சினன் முருக வேளனன்.

### விமலை பந்தாட்டம்

50. வேனெடுங் கண்க ளம்பா விற்படை சாற்றி யெங்கும்
தேனெடுங் கோதை நல்லார் மைந்தனைத் தெருவி லெய்ய
மானெடு மழைக்க ணேக்கி வானவர் மகளு மெய்யாள்
பானெடுந் தீஞ்சொ லாளோர் பாவைபந் தாடு கின்றாள்.

51. அங்கை யந்த லத்த கத்த வைந்து பந்த மர்ந்தவை
மங்கை யாட மாலை சூழும் வண்டு போல வந்துடன்
பொங்கு மீதெ ழுந்து போய்ப்பி றழ்ந்து பாய்த லின்றியே
செங்க யற்கண் புருவந் தம்மு ளுருவஞ் செய்யத் திரியுமே.

52. மாலை யுட்க ரந்த பந்து வந்து கைத்த லத்தவாம்
ஏல நாறி ருங்கு ழற்பு றத்த வாண்மு கத்தவாம்
நூலி னேர்நு சுப்பு நோவ வுச்சி மாலை யுள்ளவாம்
மேலெ ழுந்த மீநி லத்த விரல கைய வாகுமே.

53. கொண்டு நீங்கல் கோதை வேய்தல் குரங்கு மம்ம ணிந்துராய்
எண்டி சையு மேணி யேற்றி லங்க நிற்றல் பத்தியின்
மண்டி லம்வ ரப்பு டைத்தன் மயிலிற் பொங்கி யின்னணம்
வண்டுந் தேனும் பாட மாதர் பந்து மைந்துற் றுடுமே.

54. நன்ம ணிச்சி லம்பி னோடு கிண்கி ணிந்ந கந்நகும்
மின்ம லர்ந்த முல்லை மாலை நக்கி மிக்கி றந்தெழுந்து
பொன்ம லர்ந்த கோதை பந்து பொங்கி யொன்று போந்துபாய்ந்து
மின்ம லர்ந்த வேலி னுன்முன் வீதி புக்கு வீழ்ந்ததே.

## விமலை காணுதல்

55. மந்தார மாலை மலர்வேய்ந்து மகிழ்ந்து தீந்தேன்
கந்தாரஞ் செய்து களிவண்டு முரன்று பாடப்
பந்தார்வஞ் செய்து குவளைக்கண் பரப்பி நின்றாள்
செந்தா மரைமேற் றிருவின்னுரு வெய்தி நின்றாள்.

56. நீர்தங்கு திங்கண் மணிநீணிலந் தன்னு ளோங்கிச்
சீர்தங்கு கங்கைத் திருநீர்த்தண் டுவலை மாந்திக்
கார்தங்கி நின்ற கொடிகாளை யைக் காண்ட லோடு
பீர்தங்கிப் பெய்யா மலரிற்பிறி தாயி னாளே.

## சீவகன் காதல்

57. பூவுண்ட கண்ணாள் புருவச்சிலை கோலி யெய்ய
ஏவுண்ட நெஞ்சிற் கிடுபுண்மருந் தென்கொ லென்னா
மாவுண்ட நோக்கின் மடவாளை மறித்து நோக்கிக்
கோவுண்ட வேலான் குழைந்தாற்றல னாயி னானே.

58. நாவிநோய் செய்த நறுங்குழலா ளாணீலக்
காவிநோய் செய்த கருங்கயற்கட் பூங்கொடியென்
ஆவிநோய் செய்த வணங்கென் றறியாதேன்
மேவிநோய் தீர வினாத்தருவா ரில்லையே.

59. தெண்ணீர்ப் பனிக்கயத்து மட்டவிழ்ந்த தேங்குவளைக்
கண்ணீர்மை காட்டிக் கடல்போ லகன்றவென்
உண்ணீர்மை யெல்லா மொருநோக்கி னிற்கவர்ந்த
பெண்ணீர்மை மேனாட் பிறந்து மறியுமோ.

60. பைங்கண் மணிமகர குண்டலமும் பைந்தோடும்
திங்கண் முகத்திலங்கச் செவ்வா யெயிறிலங்கக்
கொங்குண் குழலுழக் கோட்டெருத்தஞ் செய்தநோக்
கெங்கெங்கே நோக்கினு மங்கங்கே தோன்றுமே.

61. வாளார் மதிமுகத்த வாளோ வடுப்பிளவோ
தாளார் கழுநீரோ நீலமோ தாமரையோ
நீள்வேலோ வம்போ கயலோ நெடுங்கண்ணே
கோளார்ந்த கூற்றமோ கொல்வான் றொடங்கினவே.

## விமலையின் தந்தைக்கு வாணிகம் செழித்தல்

62. என்றாங்கொன் மாதர் நலமெய்துவ தென்று சிந்தித்
தொன்றார்க் கடந்தான் புலம்புட்கொண் டிருந்த லோடும்
அன்றே யமைந்த பசும்பொன்னட ராறு கோடி
குன்றாமல் விற்றான் குளிர்சாகர தத்த னென்பான்.

63. திருமல்க வந்த திருவேயெனச் சேர்ந்து நாய்கன்
செருமல்கு வேலாய்க் கிடமாலிது வென்று செப்ப
வரிமல்கி வண்டுண் டறைமாமலர்க் கண்ணி மைந்தன்
எரிமல்கு செம்பொ னிலமாமனை யேறி னானே.

## விமலையின் தந்தை தன் கருத்தைக் கூறல்

64. நம்பன் சிறிதே யிடைதந்திது கேட்க நாளும்
அம்பொன் னகரு ளமைந்தேன்மற் றெனக்க மைந்தாள்
கம்பம் மிலாதாள் கமலைக்கு விமலை யென்பாள்
செம்பொன் வியக்கு நிறத்தாடிரு வன்ன நீராள்.

65. பூம்பாவை வந்து பிறந்தாளப் பிறந்த போழ்தே
ஆம்பால வெல்லா மறிவாரன் றெழுதி யிட்டார்
தூம்பியாது மில்லாக் குளம்போன்றதென் ஞேமில் பண்டம்
கூம்பாத செல்வக் கொடியேயிது கேண்மோ வென்ருன்.

66. ஏற்ற கைத்தொடி வீழ்ந்தென வேந்தலைத்
தேற்றி ஞன்றிரு மாநிலஞ் செல்வனே
தோற்ற மாதருந் தோன்றலைக் காண்டலும்
ஆற்றி ஞடன தாவியுந் தாங்கிஞள்.

## திருமணம்

67. அம்பொற் கொம்பனை யாளையும் வார்கழற்
செம்பொற் குன்றனை யானையுஞ் சீர்பெறப்
பைம்பொ னீணகர்ப் பல்லிய மார்த்தெழ
இம்ப ரில்லதொ ரின்ப மியற்றிஞர்.

# 7. பெரிய புராணம்

பெரியபுராணம் இயற்றியவர் சேக்கிழார். இவர் தொண்டை மண்டலத்தில், புலியூர்க் கோட்டத்துக்குன்றத் தூரில், வேளாளர் மரபில், சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் அருண்மொழித் தேவர் என்பது. இவர் காலத்தில் இருந்த அநபாய சோழன் (இரண்டாம் குலோத்துங்கன்) இவரது புலமைத் திறத்தை வியந்து, இவரைத் தன் முதல் அமைச்சராக்கி, உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டப்பெயரையும் சூட்டினன். இவ் வேந்தனுடைய வேண்டுகோளுக் கிரங்கி, இப் புராணத்தைச் சேக்கிழார் இயற்றினுர். சேக்கிழாரைப் பற்றியும், இவர் புராணம் பாடிய வரலாற்றைப் பற்றியும் விரிவாக உமாபதி சிவாச்சாரியார் இயற்றியுள்ள சேக்கிழார் புராணத்தில் அறியலாம். இக் கவிஞர் பெருமானின் தெய்வம் மணக்கும் பாடல்களில் பெரிதும் ஈடுபட்ட மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை, "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என இவரைப் பாராட்டியுள்ளார். சேக்கிழாரின் காலம் பன்னிரண்டாம் நூற்ருண்டின் முற்பகுதி.

பெரிய புராணம் என்னும் இந்நூல், பெருமைபெற்ற சிவனடியார்களின் வரலாற்றினை உணர்த்துவதாகும். சைவத் திருமுறைகளில் இது பன்னிரண்டாம் திருமுறை எனப்படும். தனியடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் எனச் சிவனடியார் பலராவர். பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனுர் திருத்தொண்டத் தொகை பாடினுர். அத்தொகையில் சிவனடியார்கள் பாராட்டப்பட்டுள்ளனர். நம்பியாண்டர் நம்பி என்பவர், தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் அவர்தம் வரலாற்றை வகுத்துக் கூறினர். அவ்விருவரும் கூறிய தொகை வகைகளைக் கொண்டு சேக்கிழார் இப் புராணத்தை விரிவாக எழுதினுர். இவையே யன்றித் தேவாரம், காரைக்கால் அம்மையார் பாடல்கள், திருமூலர்

திருமந்திரம், கழறிற்றறிவார் பொன்வண்ணத்தந்தாதி, தெய்வ உலா முதலியனவும் பெரிய புராணம் பாடுவதற்குத் துணையாய் அமைந்த நூல்களாகும்.

சுந்தரமூர்த்தி நாயனர் பிறப்பும், வளர்ப்பும், திருமண ஏற்பாடும், அப்போது திருமணப் பந்தலில் சிவபெருமான் முதிய மறையவனய் வந்து சுந்தரர் தன் அடிமை என்று ஓலை காட்டி வழக்காடுதலும், படியோலை கிழிக்கப்பட்ட பின் மூல ஓலை காட்டுவதற்காகத் திருவெண்ணெய் நல்லூர்க்குச் செல்லுதலும், தன் வழக்கை நிறுவிய பின் இறைவன் தன் மனை இதுவே என்று கோயிலுள் சென்று மறைதலும், பித்தா எனத் தொடங்கிப் பாடுமாறு செய்தலும், பிறகு திருவதிகையில் சித்த வட மடத்தில் கால் நீட்டி உணர்த்தி மறைதலும் ஆகியவற்றைக் கூறும் இப் பாடப் பகுதி.

# பெரிய புராணம்

## தடுத்தாட்கொண்ட புராணம்

### நாடும் ஊரும்

1. கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு.

2. பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினல் அவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை குன்ருத்
திருமறை யவர்கள் நீடும் திருநாவ லூராம் அன்றே.

3. மாதொரு பாக ஞர்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருவவ தாரம் செய்தார்.

4. தம்பிரான் அருளி னலே தவத்தினல் மிக்கோர்
போற்றும்
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாற்றி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொன் நாண் அரையில் மின்னத் தெருவில்தேர்
உருட்டு நாளில்.

5. நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பருவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினல் மகன்மை
கொண்டார்.

6. பெருமைசால் அரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபில் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார்.

7, தந்தையார் சடைய னார்தம் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரு மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு அனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார்.

8. குலமுதல் அறிவின் மிக்கார் கோத்திர முறையும் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்த னாகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான்.

9. மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்துநாள் ஓலை விட்டார்.

10. மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர் சோலை மூதூர் குறுகினர் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார்.

11. மகிழ்ச்சியால் மணமீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழில ராகி
இகழ்ச்சியொன் றானு மின்றி ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தி னார்கள்.

12. மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத்
துணர்மலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னனைப்
புணர்மணத் திருநாள் முன்னாட் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன்நாண் காப்புச் சேர்த்தார்.

13. மாமறை விதிவ ழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலந் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான்.

14. காலைசெய் வினைகள் முற்றிக் கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையு முன்னர் விதிமணக் கோலம் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான்.

### சுந்தரர் மணக்கோலம்

15. வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கி னார்கள்.

16. அகில்விரைத் தூப மேய்ந்த அணிகொள்பட் டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான்.

17. தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்துசந் தனச்சே றூட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்மறை முந்நூல் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான்.

18. தூமலர்ப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி கோதை
தாமமென் றினைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்தே தூய வளரொளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம் கொண்டான்.

19. மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார்.

## திருமண ஆரவாரம்

20. இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கள் மிசைக்கொண்டார் உழைய ராளுர்.

21. அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும் அலங்கொளி மணிகளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீலநீர்த் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே.

22. நெருங்குதூ ரியங்கள் ஏங்க நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிகள் ஆட
அருங்கடி மணம்வந் தெய்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூரராமால்.

23. நிறைகுடம் தூபம் தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நிறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம்எதிர் கொள்ள
வந்தார்.

24. கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண
என்பார்
பெண்களில் உயர நோற்ருள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடு வார்கள்.

சிவபெருமான் முதியவர் வேடம் பூண்டு வருதல்

25. ஆலுமறை சூழ்கயிலை யின்கண் அருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுறவெ ழுந்துமிகு கீழுற அகழ்ந்து
மாலுமய னுக்குமரி யாரொருவர் வந்தார்.

26. கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய முதல்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க.

27. மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடமென ஐயமுற எய்தி.

வழக்கு உண்டு என்று குறுக்கிடல்

28. வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கு
பந்தரிடை நம்பிஎதிர் பன்னுசபை முன்னின்
றிந்தமொழி கேண்மினெதிர் யாவர்களும் என்ருன்
முந்தைமறை ஆயிரம் மொழிந்ததிரு வாயான்.

29. என்றுரைசெய் அந்தணனை எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கல மடங்கலனை யானும்
நன்றுமது நல்வரவு நங்கள்தவம் என்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ தென்ருர்.

30. பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி என்றான்.

31. நெற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லான்
உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலதி யான்வதுவை செய்யேன்
முற்றவிது சொல்லுகென எல்லைமுடி வில்லான்.

32. ஆவதிது கேண்மின்மறை யோரென்னடி யானிந்
நாவல்நக ரூரனிது நான்மொழிவ தென்றான்
தேவரையு மாலயன் முதல்திருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான்.

### சுந்தரர் நகைத்தலும் எள்ளலும்

33. என்றான் இறையோன் அதுகேட்டவர் எம்மருங்கும்
நின்றார் இருந்தார் இவன்என் நினைந் தான்கொல் என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திருநாவ லூரான்
நன்றால் மறையோன் மொழியென் றெதிர்நோக்கி
நக்கான்.

34. நக்கான் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரியத் துகில்தாங்கி மேற்சென்
றக்காலம் உன்தந்தை தன்தந்தை ஆள்ஓலை ஈதால்
இக்கா ரியத்தை நீயின்று சிரித்ததென் ஏட என்ன

35. மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி-
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை ஆதல்
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோ
னென்றார்.

### ஓலை காட்டு என்றல்

36. பித்தனு மாகப் பின்னும் பேயனு மாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னால் யாதுமற் றவற்றால்
நாணேன்
அத்தனைக் கென்னை ஒன்றும் அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேச வேண்டா பணிசெய வேண்டும் என்றார்.

37. கண்டதோர் வடிவால் உள்ளங் காதல்செய் துருகா நிற்கும்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்
உண்டொராள் ஓலை என்னும் அதனுண்மை அறிவே னென்று
தொண்டனுர் ஓலை காட்டு கென்றனர் துணைவ னுரை.

## ஓலை கிழித்தல்

38. ஓலைகாட் டென்று நம்பி உரைக்கநீ ஓலை காணற்
பாலையோ அவைமுன் காட்டப் பணிசெயற் பாலை என்ற
வேலையில் நாவ லூரர் வெகுண்டுமேல் விரைந்துசென்று
மாலயன் தொடரா தானை வலிந்துபின் தொடர லுற்ருர்.

39. ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக் கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்ருர் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னுரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்?

40. மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றிநின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும்ஆள் ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் ஆளாய் அந்தணர் செய்த லென்ன
முறையெனக் கீறி யிட்டார் முறையிட்டான் முடிவி லாதான்.

41. அருமறை முறையிட் டின்னும் அறிவதற் கரியான் பற்றி
ஒருமுறை முறையோ என்ன உழைநின்ருர் விலக்கி இந்தப்
பெருமுறை உலகில் இல்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீர் எங்குளீர் செப்பும் என்ருர்.

42. என்றலும் நின்ற ஐயர் இங்குளேன் இருப்புஞ் சேய தன்றிந்த வெண்ணெய் நல்லூர் அதுநிற்க அறத்தா றின்றி
வன்றிறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினுன் அடிமை என்ருன்.

## மூல ஓலைக்காக அழைத்துச் செல்லுதல்

43. குழைமறை காதி ஞனைக் கோதில்ஆ ரூரர் நோக்கிப்
பழையமன் ருடி போலும் இவன்என்று பண்பின் மிக்க
விழைவுறு மணமும் பொங்க வெண்ணெய்நல் லூரா
யேல்உன்
பிழைநெறி வழக்கை ஆங்கே பேசநீ போதாய் என்ருர்.

44. வேதியன் அதனைக் கேட்டு வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினும் நன்று மற்றப் புனிதநான் மறையோர்
முன்னர்
ஆதியில் மூல வோலை காட்டிநீ அடிமை யாதல்
சாதிப்பன் என்று முன்னே தண்டுமுன் தாங்கிச்
சென்ருன்.

45. செல்லுநான் மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ்
சேர்ந்த
வல்லிரும் பணையு மாபோல் வள்ளலுங் கடிது சென்ருன்
எல்லையில் சுற்றத் தாரும் இது என்னும் என்று செல்ல
நல்லஅந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை
நண்ணி.

46. வேதபா ரகரின் மிக்கார் விளங்குபேர் அவைமுன்
சென்று
நாதனும் மறையோன் சொல்லும் நாவலூர் ஆரூ
ரன் தான்
காதலென் அடியான் என்னக் காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்முன் போந்தா னிதுமற்றென் முறைப்பா
டென்ருன்.

47. அந்தணர் அவையில் மிக்கார் மறையவர் அடிமை ஆதல்
இந்தமா நிலத்தில் இல்லை என்சொன்னுய் ஐயா என்ருர்
வந்தவா றிசைவே அன்ருே வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்த தென்றனன் தனியாய்
நின்ருன்.

48. இசைவினல் எழுதும் ஓலை காட்டினுன் ஆகில் இன்று
விசையினல் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி யாமோ
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச்
சொன்னுன்
அசைவில்ஆ ரூரர் எண்ணம் என்னென்ருர் அவையில்
மிக்கார்.

49. அனைத்துநூல் உணர்ந்தீர் ஆதி சைவனென்
றறிவீர் என்னைத்
தனக்குவே றடிமை என்றிவ் வந்தணன் சாதித் தானேல்
மனத்தினா லுணர்தற் கெட்டா மாயைஎன் சொல்லு
கேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணா தென்றனன் எண்ணம்
மிக்கான்.

50. அவ்வுரை அவையின் முன்பு நம்பியா ரூரர் 'சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற திருமறை முனியை நோக்கி
இவ்வுல கின்கண் நீயின் றிவரையுன் னடிமை என்ற
வெவ்வுரை எம்முன் பேற்ற வேண்டுமென் றுரைத்து
மீண்டும்.

மூல ஓலை காட்டுதல்

51. ஆட்சியில் ஆவ ணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன் என்றனன் மாயை
வல்லான்.

52. வல்லையேல் காட்டிங் கென்ன மறையவன்
வலிசெய் யாமல்
சொல்லநீர் வல்லீ ராகில் காட்டுவேன் என்று சொல்லச்
செல்வநான் மறையோய் நாங்கள் தீங்குற ஒட்டோம்
என்றார்
அல்லல்தீர்த் தாள நின்றார் ஆவணங் கொண்டு
சென்றார்.

ஓலை கண்டு ஐயம் தீர்தல்

53. இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண் டவையோர்
ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது
வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை
நோக்கித்
தெருள்பெறு சவையோர் கேட்ப வாசகம் செப்பு
கின்றான்.

54. அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கி வைஎன் எழுத்து.

55. வாசகங் கேட்ட பின்னர் மற்றுமே லெழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி அவையொக்கு மென்ற பின்னர்
மாசிலா மறையோர் ஐயா மற்றுங்கள் பேர னூர்தம்
தேசுடை எழுத்தே ஆகில் தெளியப்பார்த் தறிமின் என்றார்.

56. அந்தணர் கூற இன்னும் ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்துநீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின் என்றான் வலியஆட் கொள்ளும் வள்ளல்.

57. திரண்டமா மறையோர் தாமும் திருநாவலூரர்கோமுன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறோன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
இரண்டுமொத் திருந்த தென்னே இனிச்செய லில்லை என்றார்.

58. நான்மறை முனிவ னார்க்கு நம்பியா ரூரர் தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடனென்று பண்பில் மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி விதிமுறையீதுவே யாகில்
யான்இதற் கிசையேன் என்ன இசையுமோ என்று நின்றார்.

## வீடு இது எனக் காட்டல்

59. திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
அருமுனி நீமுன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய துமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையுங் காட்டு கென்றார்.

60. பொருவரு வழக்கால் வென்ற புண்ணிய முனிவர்
என்னை
ஒருவரும் அறியீராகில் போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார் கண்டிலர் திகைத்து
நின்றார்.

61. எம்பிரான் கோயில் நண்ண இலங்குநூல் மார்பர்
எங்கள்
நம்பர்தங் கோயில் புக்க தென்கொலோ என்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனித்தொடர்ந் தழைப்ப
மாதோ
டும்பரின் விடைமேல் தோன்றி அவர்தமக் குணர்த்தல்
உற்றார்.

62. முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னியவேட்கை கூரப்
பின்புநம் ஏவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து
வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோம்
என்றார்.

### அருட்செயல் என்று சுந்தரர் உணர்தல்

63. என்றெழும் ஓசை கேளா ஈன்றஆன் கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர ணாதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக
மன்றுளீர் செயலோ வந்து வலியஆட் கொண்ட
தென்றார்.

64. எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கிஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார்.

65. மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.

## தேவாரம் பாடுதல்

66. தேடிய அயனும் மாலும் தெளிவுரு ஐந்தெ ழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் பாடுவாய் நம்மை என்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர் மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று.

67. வேதியன் ஆகி என்னை வழக்கினல் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகேன் எனமொழிந்தார்.

68. அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய் என்றார் நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடலுற்றார்.

69. கொத்தார்மலர்க் குழலாளொரு கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானையவ் வியன்நாவலர் பெருமான்
பித்தாபிறை சூடிஎனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உய எடுத்தார்.

70. முறையால்வரு மதுரத்துடன் மொழிஇந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினல்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிக ரில்லான்.

71. சொல்லார்தமிழ் இசைபாடிய தொண்டன்தனை இன்னும்
பல்லாறுல கினில்நம்புகழ் பாடென்றுறு பரிவில்
நல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம் எய்தானருள் செய்தான்.

72. நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரில்
மேவுமருட் டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார்.

## திருவதிகையில் அருட்செயல்

73. மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற்பெண்ணை யாறுகடந் தேறியபின்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலிற்
செலஅணையும் பொழுதணையத் திருவதிகைப்
புறத்தணைந்தார்.

74. உடையஅர சுலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும்
பதியைமிதித்
தடையுமதற் கஞ்சுவன்என் றந்நகரிற் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடம்புகுந்தார்.

75. வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்றொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடையெங்கும் மிடைகின்ற
பரிசனமுந் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார்.

76. அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னொருவர் அறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து பூந்தாரான் திருமுடிமேல்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார்
போற்பயின்றார்.

77. அந்நிலைஆ ரூரனுணர்ந் தருமறையோய் உன்னடியென்
சென்னியில்வைத் தனையென்னத் திசையறியா
வகைசெய்த
தென்னுடைய மூப்புக்காண் என்றருள அதற்கிசைந்து
தன்முடிஅப் பால்வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன்.

78. அங்குமவன் திருமுடிமேல் மீட்டுமவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூராளி
இங்கென்னைப் பலகாலும் மிதித்தனைநீ யாரென்னக்
கங்கைசடைக் கரந்தபிரான் அறிந்திலையோ
எனக்கரந்தான்.

79. செம்மாந்திக் கியானறியா தென்செய்தேன்
எனத்தெளிந்து
தம்மானை அறியாத சாதியார் உளரேயென்
றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினார்.

# 8. கம்ப ராமாயணம்

கம்ப ராமாயணம் என்பது கம்பரால் பாடப்பட்ட இராமாயணம் என்று பொருள்படும். வடமொழியில் ஆதி காவியம் என்று வழங்கப்படுவதும், வால்மீகியால் இயற்றப் பெற்றுள்ளதுமான இராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டு கம்பர் தமிழில் பாடினர்.

ராம அயநம் என்ற வடசொற்கள் வடமொழி இலக்கண விதியின்படி ராமாயணம் என்ற சொற்றொடர் ஆயின. இத் தொடர், 'இராமனை அறிதற்கு இடனாயுள்ளது', 'இராமனது கதை', 'இராமனது அவதார நிகழ்ச்சி' எனப் பல பொருள் படும். இனி, இத்தொடரையே ராமா அயநம் எனப் பிரித்துச் சீதையின் ஏற்றம் கூறுவது என்று பொருள் கூறுவாரும் உளர்; 'ராம' என்பதற்குப் பெண்பால் 'ராமா' என்பது ஆகும்.

வான்மீகி ராமாயணத்திலும், சங்கச் செய்யுட்களில் சிலவிடத்தும், திவ்வியப் பிரபந்தங்களில் பலவிடத்தும் வந்துள்ள இராமனைப் பற்றிய செய்திகளை அறிந்து, தமிழ் வழக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப, வான்மீக ராமாயண கதைப் பகுதிகளுள் சிலவற்றை மாற்றியும், சிலவற்றை விரித்தும், சில செய்திகளை அடியோடு விடுத்தும் கம்பர் தமது காவியத்தை யாத்துள்ளார். கதையும், காலமும், இடமும் ஒழிந்த ஏனையவெல்லாம் தமிழகச் செய்திகளாகவே கம்ப ராமாயணத்தில் தோற்றம் அளிக்கின்றன. வடநாட்டுக் கங்கை தமிழ் நாட்டுக் காவிரியாகவே காட்சி நல்குகின்றது. கோசல நாடு தமிழகச் சோழ நாடாகத்தான் காட்சியளிக் கின்றது. தமிழ் நாட்டுச் சடையன் மரபினர் எடுத்துக் கொடுத்த முடியைத்தான் வடநாட்டு வசிட்டன் அந் நாட்டரசன் தலையில் சூட்டிப் பெருமை அடையச் செய்திருக் கிறன். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் மிகுதியாக உடைய கம்பர், தம் காவியத்தைப் படிப்பார்க்கு அப்பற்றுக்கள் நன்கு வேர்கொள்ளும் வகையில் இயற்றியுள்ளார்.

பண்டைத் தமிழிலக்கியங்களில் வந்துள்ள சிறந்த சொற்களையும் சொற்றொடர்களையும், கருத்துக்களையும், பொருள்களையும் பண்பாட்டையும் கற்பனைகளையும் உவமைகளையும் தக்க இடங்களில் அமைத்து அவற்றைச் சாணையில் தீட்டிய மணிகளென மிளிர வைத்துள்ளார் கம்பர்.

பல மொழிகளில் உள்ள பெருங்காப்பியங்களை ஆராய்ந்தவர்கள் கம்பராமாயணத்தை இயற்றிய கம்பர் உலகப் பெருங்கவிகளுள் ஒருவராகப் போற்றப்படுவதற்கு உரியவர் என்று கருதுகின்றனர்.

இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த கம்பரது வரலாறு முழுவதும் நமக்கு நன்கு தெரியவில்லை. இவருடைய பெயர்க் காரணம், மரபு, காலம் முதலியவற்றில் கருத்துவேற்றுமைகள் பல உள்ளன.

கம்பர் சோழமண்டலத்தில் உள்ள திருவழுந்தூரில் பிறந்து வாழ்ந்தவர். இவருடைய தந்தையார் பெயர் ஆதித்தர். பெருஞ் செல்வரும் வள்ளலுமாக அக்காலத்தில் வெண்ணெய் நல்லூரில் வீற்றிருந்த சட்டையப்பரிடம் உண்வு உடை உறையுள் முதலியன பெற்றுக் கல்விப் புலமையுற்று இவர் சிறப்பெய்தினுர். இவை இவரைப் பற்றிய அகச்சான்று உடைய உண்மைச் செய்திகளாகும்.

கம்பர் உவச்சர் குலத்தில் பிறந்தவர் என்று சிலரும், அரசர் இல்லத்திற் தோன்றியவர் என்று சிலரும் கூறுவர். இவர் வேளாள மரபினராயிருக்கலாம் என்று திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள் சில சான்றுகள் காட்டிக் கூறியுள்ளார்.

கம்பர் என்னும் பெயர், காஞ்சிபுரம் சிவபெருமானுடைய பெயராகிய ஏகம்பர் என்பதனுடைய முதற்குறை என்பாரும், கம்பங் கொல்லையைக் காத்தமையாற் பெற்ற பெயரென்பாரும், கம்பநாடுடைமை பற்றி வந்த பெயரென்பாரும், இவர் பிறந்த மரபினராகிய காளி கோயிற் பூசனை புரியும் உவச்சர்கட்கு வழங்குவதொரு குடிப் பெயரென்பாருமாய்ப் பெயர்க் காரணம் கூறுவோர் பலதிறத்தினர் ஆவர். இவ்வாறு காரணம் பற்றி வந்ததன்றி, அக்காலத்தில் கம்பர்

என்ற பெயர் சிலர்க்கு வழங்கி வந்த தன்மை கல்வெட்டுக்களால் அறியப்படுவதால், கம்பர் என்பது இயற்பெயர் என்று கொள்வதும் பொருத்தம் ஆகும்.

'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்', 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்', 'கவிச் சக்கரவர்த்தி கம்பன்' என்ற புகழுரைகள் கம்பருடைய கல்விப் புலமையின் சிறப்பையும், கவிபாடும் திறத்தையும் தெளிய விளக்குவனவாகும்.

தொல்காப்பியம், சங்கச் செய்யுட்கள், ஆழ்வார் பாசுரங்கள், சிந்தாமணி முதலியவற்றிற் கம்பர் மிக்க பயிற்சியுடையவர் என்பதை இந் நூல் காட்டும்.

ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி முதலியன கம்பர் இயற்றிய பிற நூல்களாகும்.

சிலர், கம்பரை ஒன்பதாம் நூற்றுண்டில் இருந்தவர் என்பர்; வேறு சிலர் இவரைப் பன்னிரண்டாம் நூற்றுண்டில் இருந்தவர் என்று கூறுவர்.

கம்பர் நன்றி மறவாத நற்பண்பினர். தம்மை ஆதரித்த சடையப்ப முதலியாரைக் கம்ப ராமாயணத்தில் இவர் பத்து இடங்களில் பாராட்டியுள்ளமை இவரது நன்றி மறவாத பண்பிற்குத் தக்க சான்றுகும்.

தாம் இயற்றிய காவியத்திற்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் என்பதாகும்.

கம்ப ராமாயணத்தில் உள்ள ஏழு காண்டங்களுள் முதல் ஆறு காண்டங்களே கம்பரால் இயற்றப் பெற்றவை. ஏழாங் காண்டமாகிய உத்தர காண்டத்தை இயற்றியவர் ஒட்டக் கூத்தர் என்று சிலரும், வாணிதாதர் என்று சிலரும் கூறுவர். கம்பர் பாடியவை பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பனவாகும். அவற்றுள் இப் பாடப் பகுதி யுத்த காண்டத்தில் உள்ளதாகும்; இராவணன் கும்பகருணனை எழுப்பிப் போர்க்களத்திற்கு அனுப்புதலும் கும்பகருணன் போர்க்குச் சென்று களத்தில் மாளுதலும் பற்றிக் கூறுவதாகும்.

# கம்ப ராமாயணம்

## கும்பகருணன் வதைப்படலம்

### கும்பகருணனை எழுப்புதல்

1. உறங்கு கின்ற கும்பகன்ன உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்றது இன்றுகாண்; எழுந்தி ராய்எ
ழுந்திராய்;
கறங்கு போல விற்பிடித்த கால தூதர் கையிலே
உறங்கு வாய்உ றங்குவாய்; இனிக்கி டந்து
உறங்குவாய்.

2. என்றுசொல்ல அன்னவன் எழுந்தி ராமை கண்டுபோய்
மன்றல் தங்கு மாலை மார்ப வன்துயில் எழுப்பலம்
என்று சொல்ல நன்றிதென்று மாவொ டாளி ஏவினுன்
ஒன்றன் மேலொ ராயிரம் உழக்கி விட்டெழுப் புவீர்.

3. என்றலுமே அடிவணங்கி ஈரைஞ்ஞூற்று இராக்கதர்கள்
வன்தொழிலால் துயில்கின்ற மன்னவன்தன் மாடணுகி
நின்றிரண்டு கதுப்புமுற நெடும்உசலங் கொண்டடிப்ப
பொன்றினவன் எழுந்தாற்போல் புடைபெயர்ந்தாங்கு
எழுந்திருந்தான்.

4. ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்களும் நுங்கினுன்
ஏறு கின்ற பசியை எழுப்பினுன்
சீறு கின்ற முகத்திரு செங்கணுன்.

### தமையனைக் கண்டு வணங்கல்

5. கூவி னன்நும்முன் என்றவர் கூறலும்
போயி னன்நகர் பொம்என்(று) இரைத்தெழ
வாயில் வல்லை நுழைந்து மதிதொடுங்
கோயில் எய்தினன் குன்றன கொள்கையான்.

6. நிலைகி டந்த நெடுமதிள் கோபுரத்து
அலைகி டந்த இலங்கையர் அண்ணலைக்
கொலைகி டந்தவேற் கும்ப கருணன்ஓர்
மலைகி டந்தது போல வணங்கினுன்.

## இராவணன் ஏவல்

7. வந்து ணைப்பெருந் தம்பி வணங்கலும்
தன்தி ரண்ட தோள் ஆரத் தழுவினுன்
நின்ற குன்றுஒன்று நீள்நெடுங் காலொடுஞ்
சென்ற குன்றைத் தழீஇஅன்ன செய்கையான்.

8. 'வான ரப்பெருந் தானையர் மானிடர்
கோன் கர்ப்புறஞ் சுற்றினர் கொற்றமும்
ஏனை உற்றனர் நீஅவர் இன்னுயிர்
போன கத்தொழில் முற்றுதி போய்'என்ருன்.

## கும்பகருணன் திகைப்பும் அறவுரையும்

9. ஆனதோ வெஞ்சமம் அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றும் காலமே.

10. கிட்டிய தோசெரு கிளர்பொற் சீதையைச்
சுட்டிய தோமுனம் சொன்ன சொற்களால்
திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோஇது விதியின் வன்மையே

11. என்றுகொண்டு இனையன விளம்பி யான்உனக்கு
ஒன்றுளது உணர்த்துவது உணர்ந்து கோடியேல்
நன்றுஅது நாயக நயக்கி லாய்எனிற்
பொன்றினை யாகவே கோடி போக்கிலாய்.

12. தையலை விட்டவன் சரணந் தாழ்ந்துநின்
ஐயறு தம்பியோடு அளவ ளாவுதல்
உய்திறம் அன்றெனின் உளது வேறுமோர்
செய்திறம் அன்னது தெரியக் கேட்டியால்.

13. பந்தியிற் பந்தியிற் படையை விட்டவை
சிந்துதல் கண்டுநீ இருந்து தேம்புதல்
மந்திரம் அன்றுநம் வலிஎ லாம்உடன்
உந்துதல் கருமம்என்று உணரக் கூறினுன்.

## இராவணன் வெறுத்தல்

14. உறுவது தெரியஅன்று உன்னைக் கூயது;
சிறுதொழில் மனிசரைக் கோறி சென்றுஎனக்கு
அறிவுடை அமைச்சன்நீ அல்லை அஞ்சினை
வெறுவிதுஉன் வீரம்என்று இவைவி ளம்பினன்.

15. மறங்கிளர் செருவினுக்கு உரிமை மாண்டனை
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை
இறங்கிய கண்முகிழ்த்து இரவும் எல்லியும்
உறங்குதி போய்என உளையக் கூறினன்.

16. மானிடர் இருவரை வணங்கி மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்கு மேகடன்
யானது முடிக்கிலேன் எழுக போகென்றான்.

17. தருகஎன் தேர்படை சாற்றென் கூற்றையும்
வருகமுன் வானமும் மண்ணும் மற்றவும்
இருகைவன் சிறுவரோடு ஒன்றி என்னொடும்
பொருகவெம் போர்எனப் போதல் மேயினன்.

## கும்பகருணன் உடன்பட்டு உரைத்தல்

18. அன்னது கண்டவன் தம்பி யானவன்
பொன்னடி வணங்கிநீ பொறுத்தி யால்என
வன்னெடுஞ் சூலத்தை வலத்து வாங்கினன்
இன்னம்ஒன்று உரையுளது என்னக் கூறினன்.

19. வென்றிவ்ண் வருவன்என்று உரைக்கி லேன்விதி
நின்றது பிடர் பிடித்துஉந்த நின்றது
பொன்றுவன் பொன்றினல் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக விடுதி நன்றரோ.

20. என்னைவென் றுளர்எனில் இலங்கை காவல
உன்னைவென் றுயருதல் உண்மை ஆதலால்
பின்னைநின் றெண்ணுதல் பிழைஅப் பெய்வளை
தன்னைநன் களிப்பது தவத்தின் பாலதே.

21. இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளஎனிற் பொறுத்தி கொற்றவ
அற்றதால் முகத்தினில் விழித்தல் ஆரிய
பெற்றனன் விடைஎனப் பெயர்ந்து போயினன்.

## கும்பகருணன் தோற்றம்

22. பாந்தளின் நெடுந்தலை வழுவிப் பாரொடும்
வேந்தென விளங்கிய மேரு மால்வரை
போந்தது போல்பொலந் தேரிற் பொங்கிய
ஏந்தலை ஏந்தெழில் இராமன் நோக்கினன்.

23. தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால் நடுவண் நின்றதோர்
தாளுடை மலைகொலாம் சமரம் வேட்டதோர்
ஆளென உணர்கிலேன் ஆர்கொ லாம்இவன்.

## வீடணன் அறிவித்தல்

24. ஆரியன் அனைய கூற அடியிணை இறைஞ்சி ஐய
பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன் எனக்கு முன்னோன்
காரியல் காலன் அன்ன கழற்கும்ப கருணன் என்னும்
கூரிய சூலத் தான்என்று அவன்நிலை கூறல் உற்றான்.

25. ஊன்உ யர்ந்த உரத்தினால்
மேல்நி மிர்ந்த மிடுக்கினன்
தான்உ யர்ந்த தவத்தினால்
வான்உ யர்ந்த வரத்தினன்.

26. நன்றி தன்று நமக்கெனா
ஒன்று நீதி உணர்த்தினன்
இன்று காலன்முன் எய்தினன்
என்று சொல்லி இறைஞ்சினன்.

27. என்றவன் உரைத்தலோடும் இரவிசேய் இவனை இன்று
கொன்றுஒரு பயனும் இல்லை கூடுமேற் கூட்டிக் கொண்டு
நின்றது புரிதும் மற்றிந் நிருதர் கோன்இடரும் நீங்கும்
நன்றென நினைந்தேன் என்றான் நாதனும் நயனீ தென்றான்.

## வீடணன் கும்பகருணனிடம் செல்லல்

28. ஏகுதற் குரியார் யாரே என்னலும் இலங்கை வேந்தன்
ஆகின்மற் றடியனேசென்று அறிவினல் அவனை
உள்ளம்
சேகறத் தெருட்டி ஈண்டு சேருமேற் சேர்ப்பன் என்ருன்
மேகம்ஒப் பானும்நன்று போகென்று விடையும்
ஈந்தான்.

29. தந்திரக் கடலைநீந்தித் தன்பெரும் பலத்தைச்
சார்ந்தான்
வெந்திற லவனுக்கு ஐயவீடணன் விரைவின் நின்பால்
வந்தனன் என்னச் சொன்ஞர் வரம்பிலா உவகை
கூறச்
சிந்தையாற் களிக்கின் ருன்தன் செறிகழற் சென்னி
சேர்த்தான்.

## கும்பகருணன் நன்மொழிகள்

30. முந்திவந் திறைஞ்சி ஞனை முகந்துயிர் மூழ்கப் புல்லி
உய்ந்தனை யொருவன் போனய் உளையென உவக்கின்
றேன்றன்
சிந்தனை முழுதுஞ் சிந்தத் தெளிவிலார் போல மீள
வந்ததென் தனியே என்ருன் மழையினீர் வழங்கு
கண்ணன்.

31. அபயம்நீ பெற்ற வாறும் அமரரும் பெறுத லாற்ரு
உபயலோ கத்தி னுள்ள சிறப்புங்கேட் டுவந்தே
னுள்ளம்
கவிஞரி லறிவின் மிக்காய் காலன்வாய்க் களிக்கின்
றேம்பால்
நவையினில் வந்ததென் நீ அமுதுண்பாய் நஞ்சுண்
பாயோ.

32. நீதியும் தருமம் நின்ற நிலைமையும் புலமை தானும்
ஆதியங் கடவு ளாலே யருந்தவ மாற்றிப் பெற்ருய்
வேதியர் தேவன் சொல்லால் வீவிலா ஆயுள் பெற்ருய்
சாதியின் தருமம் இன்னுந் தவிர்ந்திலை போலுந்
தக்கோய்.

33. ஐயநீ அயோத்தி வேந்தற் கடைக்கல மாகி ஆங்கே
உய்கிலே யென்னின் மற்றிவ் வரக்கராய் உள்ளோ
மெல்லாம்
எய்கணை மாரியாலே இறந்துபாழ் படுவேம் பட்டால்
கையினு லெண்ணீர் நல்கிக் கடன்கழிப் பாரைக்
காட்டாய்.

34. வருவதுன் னிலங்கை மூதூர்ப் புலையெலா மாண்ட
பின்னைத்
திருவுறை மார்ப னேடும் புகுந்தனை என்றுந் தீராப்
பொருவருஞ் செல்வந் துய்க்க விரைந்தவண் போதி
என்ருன்
கருமமுண் டுரைப்பது என்ருன் உரைஎனக் கழற
லுற்ருன்.

வீடணன் வேண்டுகோள்; அறவுரை

35. இருளுறு சிந்தை யேற்கும் இன்னருள் சுரந்த வீரன்
அருளும்நீ சேரில் ஒன்ருே அபயமு மளிக்கும் அன்றி
மருளுறு பிறவி நோய்க்கு மருந்துமாய் மாறிச்செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை ஒழித்துவீ டளிக்கு மன்றே.

36. எனக்கவன் தந்த செல்வத் திலங்கையு மரசு மெல்லாம்
நினக்கியான் தந்து மற்றுன் னேவலின் நெடிது
நிற்பேன்
உனக்கிதி னுறுதி யில்லை உத்தம உன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து நம்தம் மரபையும் வளர்த்து
வாழ்தி.

37. தீயவை செய்வ ராயிற் சிறந்தவர் பிறந்த வுற்ருர்
தாயவை தந்தை யாரென் றுணர்வரோ தருமம்
பார்ப்பார்
நீயவை அறிதி அன்றே நினக்கியா னுரைப்ப தென்னை
தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வ
துண்டோ.

38. தீவினை யொருவன் செய்ய அவனெடுந் தீங்கி லாதார்
வீவினை யுறுதல்ஐய மேன்மையோ கீழ்மை யோதான்
ஆய்வினை யுடையை அன்றே அறத்தினை நோக்கி ஈன்ற
தாய்வினை செய்ய அன்றே கொன்றனன் தவத்தின்
மிக்கான்.

39. உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததி னுதிரம் ஊற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினுல் துயரந் தீர்வார்
கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது கரும மன்றூல்
மடலுடை யலங்கல் மார்ப மதியுடை யவர்க்கு மன்னே.

40. காக்கலாம் நும்முன் தன்னை எனினது கண்ட தில்லை
ஆக்கலாம் அறத்தை வேறே என்னினு மாவ தில்லை
தீக்கலாங் கொண்ட தேவர் சிரிக்கலாம் செருவி லாவி
போக்கலாம் போன பின்னை நரகன்றிப் பொருந்திற் றுண்டோ.

41. மறங்கிளர் உலகை வென்று வாழ்ந்திலை மண்ணின் மேலால்
இறங்கினை இன்று காறும் இளமையும் வறிதே செல்ல
உறங்கினை யென்ப தல்லால் உற்றதொன் றுளதே என்நீ
அறங்கெட வுயிரை நீத்தல் மேற்கொள்வா னமைந்தது ஐய?

42. தேவர்க்குந் தேவன் நல்க இலங்கையிற் செல்வம் பெற்றுய்
யாவர்க்குஞ் சிறியை அல்லை யாருனை நலியும் ஈட்டார்
மூவர்க்குந் தலைவ ரான மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்குப் பிறந்து நின்றூர் காகுத்த வேடங் காட்டி.

43. முனிவருங் கருணை வைப்பர் மூன்றுல கத்துந் தோன்றி
இனிவரும் பகையும் இல்லை ஈறுண்டென் றிரங்கல் வேண்டா
துனிவருஞ் செறுந ரான தேவரே துணைவ ராவார்;
கனிவருங் காலத்து ஐய பூக்கொய்யக் கருத லாமோ.

## கும்பகருணன் உறுதியுரை

44. வேதநா யகனே யுன்னைக் கருணையால் வேண்டி விட்டான்
காதலா லென்மேல் வைத்த கருணையால் கரும மீதே
ஆதலா லவனைக் காண அறத்தொடுந் திறம்பாது ஐய
போதுவாய் நீயே என்னுப் பொலன்கழ லிரண்டும் பூண்டான்.

45. தும்பியந் தொடையல் மாலைச் சுடர்முடி படியிற் றேயப்
பம்புபொற் கழல்கள் கையாற் பற்றினன் புலம்பும்
பொற்றேள்
தம்பியை யெடுத்து மார்பிற் றழுவித்தன் தறுக ணூடு
வெம்புணீர் சொரிய நின்றான் இனையன விளம்ப
லுற்றான்.

46. நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப்
பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டாற் குயிர்கொடா
தங்குப் போகேன்
தார்க்கோல மேனி மைந்த எனதுயிர் தருதி யாயின்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதின் ஏகி.

47. மலரின்மே லிருந்த வள்ளல் வழுவிலா வரத்தி னால்நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய் உலகுள தனையு
முள்ளாய்
தலைவன்நீ உலகுக் கெல்லாம் உனக்கது தக்க தேயால்
புலையுறு மரண மேனும் எனக்கது புகழ தேயால்.

48. கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக்
காத்துத்
திருத்தலா மாகி லன்றே திருந்துதல் தீரா தாயின்
பொருத்துறு பொருளுண் டாமோ பொருதொழிற்
குரிய ரான
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா.

49. தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன்முன் றுலக மாண்டு
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்.

50. செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வன்
தங்கை
வம்பிட்ட தெரியல் எம்முன் னுயிர்கொண்ட பகையை
வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ
டைய
கும்பிட்டு வாழ்கி லேன்நான் கூற்றையு மாடல்
கொண்டேன்.

51. ஆகுவ தாகுங் காலத் தாவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்
சேகுற நினைந்தோர் நின்னி லாருளர் வருத்தஞ்
செய்யாது
ஏகுதி எம்மை நோக்கி இரங்கலை என்று முள்ளாய்.

52. என்றவள் தன்னை மீட்டும் எடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி யேங்கி நீர்பொழி கண்ணின் நோக்கி
இன்றொடுந் தவிர்ந்த தன்றே உடன்பிறப் பென்பது
என்ன
வென்றிவெந் திறலி னானும் அவனடித் தலத்தின்
வீழ்ந்தான்.

53. வணங்கினன் வணங்கிக் கண்ணும் வதனமும்
மனமும் வாயும்
உணங்கினன் வயிர யாக்கை யொடுங்கினன்
உரைசெய் தின்னம்
பிணங்கின லாவ தில்லை பெயர்வன் என்றெழுந்து
போந்தான்
குணங்களா லுயர்ந்தான் சேனைக் கடலெலாங்
கரங்கள் கூப்ப.

54. எய்திய நிருதர் கோனும் இராமனை யிறைஞ்சி எந்தாய்
உய்திற னுடையார்க் கன்றே அறநெறி யொழுக்க
முண்மை
பெய்திற மெல்லாம் பெய்து பேசினேன் பெயருந்
தன்மை
செய்திலன் குலத்து மானந் தீர்ந்திலன்
சிறிதும் என்றான்.

55. என இனி துரைக்கும் வேலை இராக்கதர் சேனை என்னும்
கனைகடல் கவியின் தானைக் கடலினை வளைந்து கட்டி
முனைதொழில் முயன்ற தாக மூவகை உலகம் முற்றத்
தனிநெடுந் தூளி ஆர்க்க ஆர்த்தில பரவை தள்ளி.

## இலக்குவனுடன் போர்

56. இராமன் தம்பிநீ இராவணன் தம்பிநான் இருவேம்
பொராநின் றேம்இது காணிய வந்தனர் புலவோர்
பராவும் தொல்செரு முறைவலிக் குரியன பகர்ந்து
விராவும் நல்லமர் விளைக்குதும் யாம்என விளம்பா.

57. பெய்த வத்தினோர் பெண்கொடி எம்உமைப் பிறந்தாள்
செய்த குற்றம்ஒன் றில்லவள் நாசிவெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ மற்றவள் கூந்தல்தொட் டீர்த்த
கைத லத்திடைக் கிடத்துவன் காக்குதி என்றான்.

58. அல்லினாற் செய்த நிறத்தவன் அனையது பகர
மல்லினாற் செய்த தோளினன் மாற்றங்கள் நும்பால்
வில்லினாற் சொல்லின் அல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லி னாற்சொலக் கற்றிலம் யாம்எனச் சொன்னான்.

59. கரியின் கைகளும் புரவியின் கால்களும் காலின்
திரியும் தேர்களின் சில்லியும் அரக்கர்தம் சிரமும்
நெரியும் சோரியுள் துறைதொறும் துறைதொறும் சுழிப்பச்
சொரியும் பல்பிணப் பெருங்கரை கடந்தில நீத்தம்.

## சுக்கிரீவனுடன் போர்

60. பொறிந்தெழு கண்ணினன் புகையும் வாயினன்
செறிந்தெழு கதிரவன் சிறுவன் சீறினான்
முறிந்தன அரக்கன்மா முரண்திண் தோள்என
எறிந்தனன் விசும்பின்மா மலைநன் றேந்தியே.

61. ஏற்றொரு கையினால் இதுகொல் நீஅடா
ஆற்றிய குன்றம்என்று அளவில் ஆற்றலான்
நீற்றியல் நுணுகுறப் பிசைந்து நீங்கெனாத்
தூற்றினன் இமையவர் துணுக்கம் எய்தினார்.

62. செல்வன்ஓர் நெடுங்கிரி இன்னும் தேர்ந்தெனா
எல்லவன் கான்முளை உணரும் எல்லையின்
கொல்லென எறிந்தனன் குறைவில் நோன்பினோர்
சொல்லெனப் பிழைப்பிலாச் சூலம் சோர்விலான்.

63. பட்டனன் பட்டனன் என்று பார்த்தவர்
விட்டுலம் பிடநெடு விசும்பிற் சேறலும்
எட்டினன் அதுபிடித்து இறுத்து நீக்கினான்
ஒட்டுமோ மாருதி அறத்தை ஓம்புவான்.

64. அற்றது காலையின் அரக்கன் ஆயுதம்
பெற்றிலன் பெயர்ந்திலன் அனைய பெற்றியின்
பற்றினன் பாய்ந்தெதிர் பருதி கான்முளை
எற்றினன் குத்தினன் எறுழ்வெங் கைகளால்.

65. உறுக்கினர் ஒருவரை யொருவர் உற்றிகல்
முறுக்கினர் முறைமுறை அரக்கன் மொய்ம்பினுல்
பொறுக்கிலா வகைநெடும் புயங்களால் பிடித்து
இறுக்கினன் இவன்சிறிது உணர்வும் எஞ்சினுன்.

66. மண்டமர் இன்றொடும் அடங்கும் மன்இலாத்
தண்டலில் பெரும்படை சிந்தும் தக்கதோர்
எண்டரு கருமமற் றிதனின் இல்எனக்
கொண்டனன் போயினன் நிருதர் கோநகர்.

## இராமனுடன் போர்

67. தீயினும் முதிர்வுறச் சிவந்த கண்ணினுன்
காய்கணை சிலையொடும் கவர்ந்த கையினுன்
ஏய்எனும் அளவினில் இலங்கை மாநகர்
வாயில்சென் றெய்தினன் மழையின் மேனியன்.

68. உடைப்பெருந் துணைவனை உயிரின் கொண்டுபோய்க்
கிடைப்பருங் கொடிநகர் அடையின் கேடெனத்
தொடைப்பரும் பகழியின் மாரி தூர்த்துற
அடைப்பனென் றடைத்தனன் விசும்பின் ஆறெலாம்.

69. மீட்டவன் கரங்களால் விலங்கல் ஆரையை
மூட்டற நீக்குவான் முயலும் வேலையில்
வாட்டலைப் பிடர்த்தலை வயங்கு வாளிகள்
சேட்டகல் நெற்றியின் இரண்டு சேர்த்தினுன்.

70. குன்றின்வீழ் அருவியின் குதித்துக் கோத்திழி
புன்தலைக் குருதிநீர் முகத்தைப் போர்த்தலும்
இன்துயில் எழுந்தென உணர்ச்சி எய்தினுன்
வன்திறல் தோற்றிலான் மயக்கம் எய்தினுன்.

71. நெற்றியில் நின்றுஒளி நெடிதி மைப்பன
கொற்றவன் சரம்எனக் குறிப்பின் உன்னினுன்
சுற்றுற நோக்கினன் தொழுது வாழ்த்தினுன்
முற்றிய பொருட்கெலாம் முடிவு ளான்தனை.

72. கண்டனன் நாயகன் தன்னைக் கண்ணுருத்
தண்டலின் மானமும் நாணும் தாங்கினான்
விண்டவன் நாசியும் செவியும் வேரொடும்
கொண்டனன் எழுந்துபோய்த் தமரைக் கூடினான்.

73. அக்கணத்து அறிவுவந் தணுக அங்கை நின்று
உக்கனன் கவியர சென்னும் உண்மையும்
மிக்குயர் நாசியும் செவியும் வேறிடம்
புக்கதும் உணர்ந்தனன் உதிரப் போர்வையான்.

74. ஏசியுற் றெழும்விசும் பினரைப் பார்க்கும்தன்
நாசியைப் பார்க்குமுன் நடந்த நாளுடை
வாசியைப் பார்க்கும்இம் மண்ணைப் பார்க்குமால்
சீசிஉற் றதுஎனத் தீயும் நெஞ்சினான்.

75. கையி ரண்டொடு கால்களும் துணிந்தன
கருவரை பொருவுந்தன்
மெய்யி ரண்டுநா றுயிரம் பகழியால்
வெறிநுறத் தொளைபோன
செய்ய கண்பொழி தீச்சிகை இருமடி
சிறந்தது; தெழிப்போடும்
பெய்யும் வானிடை இடியினும் பெருத்தது
வளர்ந்தது பெருஞ்சீற்றம்.

76. 'ஐயன் வில்தொழிற்கு ஆயிரம் இராவணர்
அமைவிலர் அந்தோயான்
கையும் கால்களும் இழந்தனன் வேறினி
உதவலாம் துணைகாணேன்
மையல் நோய்கொடு முடித்தவா தான்என்றும்
வரம்பின்றி வாழ்வானுக்கு
உய்யு மாறரிது என்றுதன் உள்ளத்தின்
உணர்ந்தொரு துயர்உற்றான்.

## வரம் வேண்டல்

77. நீதியால் வந்தததொரு நெடுந்தரும நெறிஅல்லால்
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி
ஆதியாய் உனைஅடைந்தான் அரசர்உருக்
கொண்டமைந்த
வேதியா இன்னம் உனக்கு அடைக்கலம்யான்
வேண்டினேன்.

78. தம்பிஎன நினைத்திரங்கித் தவிரான்அத் தகவில்லான்
நம்பிஇவன் தனைக்காணிற் கொல்லும்இறை நல்காணுல்
உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான்
ஒருபொழுதும்
எம்பிபிரி யாணுக அருளுதியான் வேண்டினேன்.

79. மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுட்
போக்குவாய் இதுநின்னை வேண்டுகின்ற பொருள்
என்ருன்.

80. வரங்கொண்டான் இனிமறுத்தல்
வழக்கன்றுஎன்று ஒருவாளி
உரங்கொண்ட தடஞ்சிலையின்
உயர்நெடுநாண் உட்கொளுவாச்
சிரங்கொண்டான் கொண்டதனைத்
திண்காற்றின் கடும்படையால்
அரங்கொண்ட கருங்கடலுள்
அழுவத்துள் அழுத்திஞன்.

# 9. சீருப்புராணம்

சேதுபதி மன்னரிடத்தில் அமைச்சராக விளங்கித் தமிழ்ப் புலவர்களைப் போற்றியும் தமிழ் நூல்களைக் கேட்டுச் சுவைத்தும் வரையாது பொருள் வழங்கியும் பெரும் புகழ் பெற்ற செயத் காதர் மரைக்காயர் (சீதக்காதி வள்ளல்) என்பவர் காலத்தில் விளங்கிய உமறுப் புலவர் இயற்றியது இப் புராணம். நபிநாயகத்தைப் பற்றி ஒரு புராணம் இயற்றினால் அது இஸ்லாமியத் தமிழர்களுக்கு மிகப் பயன் படும் என்று மரைக்காயர் பலகாலம் எண்ணி வந்தார். அப்போது எட்டையபுரச் சமஸ்தானத்தில் இருந்த உமறுப் புலவர் என்பவரைக் கண்டு தம் கருத்தைத் தெரிவித்தார். சில இடர்ப்பாடுகளுக்குப் பின் சில ஆண்டுகள் கழித்து அவருடைய விருப்பம் நிறைவேறிற்று. வள்ளலின் காலத்திற்குப் பிறகே நூல் முடிவுற்று அரங்கேற்றமும் பெற்றது என்பர்.

சீருப்புராணத்துள் ஐந்தாம் படலமாகிய நபியவதாரப் படலத்துள் சில பாட்டுக்கள் இங்குப் பாடமாக அமைந்துள்ளன. இதில் மெக்கா என்னும் நகரில் நபிநாயகம் பிறந்த பிறப்பின் சிறப்புக் கூறப்படுகிறது.

சீரு (சீறத்) என்ற அரபிச் சொல்லுக்குப் புனிதர் வாழ்க்கை வரலாறு என்பது பொருள்.

# சீருப்புராணம்

## நபியவதாரப் படலம்

1. கோதறப் பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி யேவல்செய் திருப்பச்
செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி யாமினு வுதர
மனையிடத் திருந்துமா நிலத்தி
லாதரம் பெருக நல்வழிப் பொருளா
யகுமது தோற்றின ரன்றே.

2. பூதலத் தரசு பதியென வுதித்த
புகழ்பெறு மக்கமா நகரிற்
சீதவொண் கதிர்சேர் கஃபத்துல் லாவின்
றிசையினில் வடகிழக் காக
வேதமொன் றனுகா ஜெம்றத்தி லூஸ்தா
வெனுமொழி தலத்தினி னிடுவே
மாதவ ரபித்தா லிபுதிரு மனையின்
முகம்மது நபிபிறந் தனரே.

3. நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து
துறவறந் தவறி யில்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் கால மிருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

4. பானுவின் கதிரா லிடருறுங் காலம்
படர்தரு தருநிழ லெனலா
பீனமுங் கொலையும் விளைத்திடும் பலநோ
யிடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
குறைஷியிற் றிலதமே யெனலாய்
மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே.

5. செங்கதிர் பரப்பி யுலகெலாம் விளக்கித்
திரிதின கரனும்வெண் ணமுதந்
தங்கிய கிரணச் சசியுமந் தரத்திற்
றவழ்தரு முடுக்குல மனைத்தும்
பொங்கொளி யெவையுஞ் சுவனநா டனைத்தும்
பூதலம் விசும்புமற் றனவு
மிங்கெழின் முகம்ம தொளியினி லென்று
மிவர்க்கெவை யுவமைசொல் லுவதே.

6. சிறந்தநன் மதலை தனைவிரைந் தெடுப்பத்
தெரிவையார் மனத்தினி னினைப்ப
மறந்திகழ் விழியார் தொடத்தகா தென்றென்
மகம்மதை விரைவினி லேந்தி
நிறந்திகழ் சுவனப் பதியினிற் கொடுவம்
மென்றன னெடியவ னதனு
லறந்திக ழாமி ஞதிரு மனைபுக்
கடுத்தவர் பிள்ளையை யெடுத்தார்.

7. அமரருக் கிறைவன் ஜபுராயீல் வரிசை
யகுமதை யெடுத்தினி தேந்தித்
தமருடன் சுவனப் பதியினிற் கொடுபோய்ச்
சலநதி தொறுமுழு காட்டி
யிமைதிறந் திருமண் மையினை யெழுதி
யெண்ணெயிட் டமிர்தமு மூட்டிச்
சுமைதர வாசந் திகழ்த்தியெண் டிசையுஞ்
சுற்றியே சிலமொழி பகர்வார்.

8. ஆதிநா யகன்றன் றிருநபி யிறசூ
லாமிவர் தங்கலி மாவைப்
பூதலத் துறைந்த படைப்பெவை யாவையும்
போற்றுதல் செய்யவும் வேண்டு
மீதிலா லமர ரிவர்கலி மாவுக்
கிசைந்தன ரென்பது மிசைத்துச்
சூதர மொழியா ராமினு விடத்திற்
றேன்றலைக் கொடுத்தகன் றனரே.

9. அந்தர மவனி கடன்மலை யெழுதீ
வகத்தினு மெண்டிசை முழுதுஞ்
சுந்தர வதன முகம்மதைக் கொடுபோய்ச்
சுற்றியெங் கணும்பெயர் விளக்கிச்
சந்தமென் முகத்தா மரைமலர் குளிரத்
தடஞ்சிறை வானவர் திரண்டு
வந்தது மாமி னுதிரு மனையில்
வைத்தது மொருநொடிப் பொழுதே.

10. வள்ளலென் றுதவிப் பெயர்நிலை நிறுத்தி
வளந்தரு புகழ்புல் காசீ
முள்ளக நிறைந்த செம்மலர்ப் பதந்தொட்
டொளிர்பெறு மிணைவிழிக் கேற்றி
விள்ளரும் பவளம் விரிந்தன கனிவாய்
விளங்கிட வாழ்த்தெடுத் துவந்து
தெள்ளமு தனைய முகம்மது நபியைச்
சபாதிரு மடிமிசை கொண்டார்.

## 10. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

செங்கற்பட்டு மாவட்டத்துத் திருவொற்றியூரின்கண் உள்ள முருகர் வழிபாட்டிற்காக மறைமலையடிகளார் எழுதிய செய்யுள் நூல் திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை என வழங்குகிறது. ஆசிரியம், வெண்பா, கலித்துறை ஆகிய மூன்றுவகைச் செய்யுட்களினுல் அமைந்த நூல் இது. மறைமலையடிகளார் கொடிய நோய் ஒன்றினுல் தமது இருபத்திரண்டாவது வயதில் வருந்தியபோது இப்பாக்களைப் பாடத் தொடங்கினுர். இவருடைய இருபத்து நான்காவது வயதில், அதாவது 1900 செப்டம்பரில் இந்நூல் முடிவுற்றது. இதற்குச் சிறந்ததோர் உரை அடிகளாருடைய மாணவர் திரு. இளவழகனுர் எழுதியுள்ளார்.

மறைமலையடிகள் நாகப்பட்டினத்தை யடுத்த காடம்பாடி என்னும் ஊரில் 15—7—1876-ல் பிறந்தவர். இவரது இயற்பெயர் வேதாசலம். அதனைத் தமிழ்ப்படுத்தி மறைமலை என அமைத்துக்கொண்டார். இவர் சோமசுந்தர நாயகரிடம் சைவ சித்தாந்த நூல்களைக் கற்றவர். எனினும் தமது சொந்த முயற்சியால் பல்வேறு நூல்களைக் கற்றுத் துறைபோகிய பெருமகனுர் இவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் வல்லவர். திருவனந்தபுரம் உயர்நிலைப் பள்ளியிற் சில திங்களும், சென்னைக் கிறித்தவக் கல்லூரியிற் சில ஆண்டுகளும் இவர் ஆசிரியராகப் பணியாற்றினுர். ‘பட்டினப்பாலை ஆராய்ச்சி’ ‘முல்லைப்பாட்டு ஆராய்ச்சி’ என்னும் இவருடைய நூல்களும், ‘மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்’ என்னும் நூலும் இவரது ஆராய்ச்சித் திறமைக்குச் சான்ருக நிற்பன. தமிழர் மதம், தமிழ்த் தாய், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவர்கள் என்ற நூல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. காளிதாசர் வடமொழியில் இயற்றிய சாகுந்தலம் என்னும் நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். “ஞானசாகரம்” என்ற தமது சொந்த வெளியீட்டிதழ் வழியாகப் பல்வேறு ஆங்கிலக்

கட்டுரைகளும் எழுதித் தமிழின் சிறப்பை உலகறிய வைத்த பெருமை மறைமலையடிகளார்க்கு உண்டு. இவரது தமிழுரை நடை தன்னேரில்லாத் தனி நடை. இவர் 15—4—1950-ல் மறைந்தார்.

1898 ஜூன் 27-ல் இவர்க்கு உண்டான கொடிய நோய் தீர்ந்தபின், திருவொற்றி முருகப்பெருமான் திருவருளை வியந்து ஆசிரியர் இந்நூலை இயற்றத் தொடங்கினர்; 1900-ல் நூல் முற்றுப் பெற்று இப்பாடப்பகுதி, அம் மும் மணிக்கோவையில் ஆற்றுப்படையாக அமைந்த ஒரு பகுதி யாகும். இந்நூலின் நடையும் கருத்தும் சங்கத் தமிழ் நூல்களின் போக்கில் அமைந்துள்ளன.

# திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

கொழுந்தமிழ் போலக் குளிர்மாண் குணத்தோய்!
உழுந்துருள் அளவையிற் செழுந்தமிழ்ப் பாக்கள்
நூறுநா றியற்றுங் கூறுபடு மதியோய்!
ஒளிச்செல வதனினும் வளிச்செல வதனினும்
நெறிப்படக் கிளக்கும் மிறைக்கவி வல்லோய்!

அளவைநூன் மரபிற் பிறழா தியாண்டுங்
கொளவுரை நிகழ்த்தும் வளமுறும் உணர்வோய்!
பொருளியல் அறிந்து மருளறப் புனைந்து
கேட்போர்ப் பிணிக்குங் காட்சிசால் உரவோய்!
பண்டைப் பிறவியிற் றண்டா தாற்றும்

பெருந்தவ முடையை மன்னே! பொருந்தியின்
றீங்கெனைத் தலைப்பட் டனையே; ஓங்கி
ஊழி செல்லினும் நீடு வாழ்மதி!
கீழ்த்திசை எழீஇ மேற்றிசைப் படருந்
தீத்தெறு ஞாயிறு வடதிசைப் புணர்ந்து

தென்றிசை நோக்கித் திசைதடு மாறினும்,
வானக் கடலின் மீனென வயங்கும்
உடுநிரை உதிர்ந்து கொடுமை யாயினும்
உலவா வாழ்க்கையின் நிலைமதி சிறந்தே!
வறுமை களைந்து சிறுமை நீங்கி

நன்னிலை பலவும் இன்னே பெறுதி!
வரம்பறும் இன்பம் நிரம்பக் கோடி!
நின்னுயிர்க் குறுதி நாடித் துன்னிநின்று
நிரைநிரை கூறுமென் உரைபிழை யலையே
இன்னுங் கேட்டல் வேண்டின் முன்னுமென்

சொல்லள வமைந்து நலம்பல எய்தினர்
பல்லோர் பல்லோர் பண்டும் உண்டால்;
இனியொன்று கூறுவென் கேண்மதி! பனிகெழு
முல்லையங் கொடிக்கு மல்லலஞ் செழுந்தேர்
அருள்வர ஈத்த பெரியனோ இலனே!

விழியாக் கண்ண செழுமயிர்த் தோகைக்கு
நறும்படாம் வீசிய உறுவனும் இலனே!
பவனமா உலகின் நவையுறப் பெற்ற
அமிழ்துபொதி நெல்லி ஔவைக் கீத்த
சிதையாப் பேற்றின் அதிகனும் இலனே!

குறுநடைப் புறவின் றபுதிகண் டஞ்சிக்
குறுதிகெழு பைந்தடி முறைமுறை தடிந்து
கன்னம்புக் கேறிய மன்னனும் இலனே!
அருந்தமிழ்ப் புலவோர் பெருந்திறம் உணர்ந்து
பொன்னும் மணியுந் தண்ணடை நிலனும்

வரையாது வழங்கிய அரசரும் இலரே!

# 11. கிறிஸ்துவின் அருள்வேட்டல்

இந்நூலை இயற்றியவர் சமரசச் சான்றோர் திரு. வி. கலியாணசுந்தரனார். இவர் 26—8—1883-ல் திருவாரூரிற் பிறந்தவர். மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், மறைமலையடிகள் முதலானோரிடம் தமிழிலக்கிய இலக்கண நூல்கள் கற்றுத் தேர்ந்த பின் இவர் சென்னை வெஸ்லி கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். 1917இல் "தேசபக்தன்" என்னும் சிறந்த நாளிதழ் ஆசிரியராகத் திகழ்ந்தார். 1920 முதல் பல ஆண்டுகள் "நவசக்தி" என்னும் வார இதழ் வழியாக நாட்டில் நல்ல தமிழையும் அரசியலையும் வளர்த்தார். இவரது மனைவியார் பெயர் கமலாம்பிகை. 'தமிழ்த் தென்றல்', 'இந்தியாவும் விடுதலையும்', 'பெண்ணின் பெருமை', 'முருகன் அல்லது அழகு' முதலிய இவருடைய உரைநடை நூல்கள் உரைநடையெழுதுவார்க்குச் சிறந்த வழிகாட்டிகள். பெரிய புராணத்திற்கும் திருக்குறளுக்கும் இவர் எழுதிய உரைகள் படித்து மகிழத் தக்கவை. தமிழ் நாட்டில் தொழிலாளர் களுக்காகவும் ஏழைகளுக்காகவும் இவர் பெரிதும் உழைத்து வந்தார். தெள்ளிய இனிய எளிய தமிழ் நடையில் எழுது தலிலும் பேசுதலிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும்படி வாழ்ந்து வந்த இப்பெருமகனார் 17–9–1953-ல் மறைந்தார். இவரால் இயற்றப்பட்ட செய்யுள் நூல்கள் பொதுமை வேட்டல், படுக்கைப் பிதற்றல் முதலியன.

கிறிஸ்துவின் அருள்வேட்டல் என்னும் தலைப்பில் உள்ள செய்யுளிற் பாடமாக வந்திருப்பவை கிறிஸ்து பெருமானின் தியாகமும் அருட் செயல்களும் பற்றியவை.

# கிறிஸ்துவின் அருள்வேட்டல்

1. இறைவன் கோயிலை எண்ணி நுழைந்தாய் இளங்குமரா
கறைகளைக் கண்டதுங் 'கள்ளர் குகை'யெனக்
காய்ந்துவிட்டாய்
குறைகளைப் போக்குங் குருமொழி யாயது கோதகற்றித்
தறையைத் திருத்துந் தகைமையை என்னென்று
சாற்றுவனே.

2. கள்கொலை காமம் களவுபொய் தீய கறைகழித்துத்
தள்ளும் வழிகளைச் சாற்றினர் பல்லோர் தரணியிலே
பள்ளிப் படிப்பாய்ப் பரவின வாழ்வில் படிவதற்குக்
கொள்ளு மனமே கொலைஞரை மன்னித்த கோவடியே.

3. ஒழுக்கம் விழுப்பம் உயிரினும் ஓம்பென்
றுரைத்திருந்தால்
கொழிக்குமோ தானே குலவி நடந்து, குவலயத்தீர்
ஒழுக்க வடிவாங் கிறிஸ்துவை உன்னி உளத்தழுதால்
அழுக்கைக் கழுவும், ஒழுக்கம் அரும்பி அலர்ந்திடுமே.

4. அன்பே! உனைக்காண் பரிதென அன்னை
அகந்திரண்டாய்
என்புதோல் போர்த்து நடந்தாய், மொழிந்தாய்,
இருநிலத்தில்
மன்பலித நோய்கண் டிரங்கி இரங்கி மரித்தெழுந்தாய்
பொன்னுரு வில்லையேல் புந்தியில் என்ன
பொலிந்திடுமே.

5. பாவி பிறந்தனன் பாவி வளர்ந்தனன் பாவவினை
மேவிய வாழ்வினன் மீக்கூர்ந்து பாவம் விளைந்ததது
சாவியாய்ப் போகச் சமயப் புறத்தினில்
சார்ந்தலுத்தேன்
தேவனே அன்புச் சிலுவையின் நீழலைச் சேர்ந்தனனே.

6. அலகிலொளி ஐயாவே அகிலமெலாம் உன்கருவில்;
உலகிடைநீ ஒருகன்னி உயர்கருவில் உதித்ததென்னே?
சிலைநுதலார் உலகினிலே செறிந்தஇழுக்
கொழித்தவர்தம்
நிலைமையினை வளஞ்செய்ய நினைந்ததுவே
நெஞ்சினிலே.

7. எவ்வுயிர்க்குந் தாயான இறையவனே இவ்வுலகில்
செவ்வியலி ஒரு தாயின் செழுங்கையில்
வளர்ந்ததென்னே?
எவ்வுயிருந் தாயன்பை எய்திவிடின் இறையுண்மை
மெய்ம்மழவில் பொலியுமென்று விளம்புதற்கு
வளர்ந்ததுவே.

8. பருவுடலை மறைத்தருளிப் பரமவுடல் அடைந்தக்கால்
திருமக்ளிர் விழிக்கமுதச் செழுங்காட்சி வழங்கியதென்?
திருமகண்மை உளமெய்தின் தெய்வவுரு
விளங்குமென்று
மருவுலகம் உணரகுரு மகிழ்காட்சி வழங்கியதே.

9. நெடுங்காலம் நஞ்சுமிழ்ந்து நிலம்வதைத்த நீளரவக்
கொடுங்கோன்மை கொதித்ததென்னே? குமரா நீ
பிறந்ததுமே
கொடுங்கோன்மை விழுத்தவந்த குணக்கோவென்
றுனைத்தெரிந்து
நடுங்கியதே கொடுங்கோன்மை நலிந்துவரல்
கண்கூடே.

10. பேய்மையிலா உலகிருந்து பேயுலகிற் பிறப்பெடுத்துப்
பேய்புரிந்த சோதனையும் பெற்றுவெற்றி
அடைந்தென்னே?
பேய்நிலத்தில் சோதனையுண் டஞ்சாதே என அபயம்
பேய்மனத்து மக்களுக்குப் பெரியவனே தெரிப்பதற்கே.

11. மாடிமனை யிடைஏசு மலரடியை வையாமல்
காடுமலை கடல்குடிலில் கான்மலரை வைத்ததென்னே?
காடுமலை கடல்குடிலுங் கடவுணெறி கூட்டியற்கை
வீடமைதி யெனவிசிக்க மேவியதே கான்மலரே.

12. முடிசேர்ந்த முள்ளடுக்கும் முகஞ்சேர்ந்த எச்சிலுமே
இடிசோரும் உரமுடையாய்! இகலெழுப்ப விலையென்ன?
கடியாத பொறுமையன்புக் கலைவளர வேண்டுமென்று
நடையாலே நாட்டுதற்கு நல்லுளத்தில் எண்ணியதே.

13. சிலுவையிலே கிறிஸ்துஉனைச் சேர்த்தாணி அறைந்தகொடுங்
கொலைஞரையும் பகையாது குழைந்தருளைச் சுரந்ததென்னை?
பலியிரத்தம் முழுகிமனம் படிந்துருகி மன்னிக்கும்
நிலவுலகம் படைப்பதற்கு நினைந்தருளைச் சுரந்தமையே.

14. ஒருகன்னம் அறைந்தவர்க்கு மறுகன்னம் காட்டென்றும்
கருவியினால் வெட்டுபவர் வெட்டுண்பர் கடியென்றும்
பொருநரையும் நேசியென்றும் போதனையால் சாதனையால்
மருவவைத்த கிறிஸ்துஉன்றன் மலரடியில் அடைக்கலமே.

15. வாளேந்திப் போர்புரிந்த வாகையரும் மாண்டுவிட்டார்
வாளேந்தாக் கிறிஸ்துவேநீ மரித்தெழுந்தாய் வீரவள்ளால்!
வாளேந்தும் வழியுழன்றேன் வழிகண்டேன் மரித்தெழுவேன்
வாளேந்தா நெறிவளர்க்க மலரடியில் அடைக்கலமே.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111059
EGMORE, MADRAS

# குறிப்புரை

## 1. நெடுநல்வாடை

1. வையகம் - உலகம். ஈண்டு இடவாகு பெயராய் உலக மக்களை உணர்த்தியது. பனிப்ப - குளிரும்படி. வலனேர்பு - வலமாக எழுந்து. வளைஇ - வளைந்து. சொல்லிசையளபெடை.

2. பொய்யா - பருவம் பொய்யாத. வானம் - ஈண்டு மேகம். புதுப்பெயல் - கார்காலத்து மழை.

3. ஆர்கலி - வெள்ளம். முனைஇய - வெறுத்த. கொடுங் கோல் - கொடிய கோலினையுடைய. கோவலர் - இடையர்.

4. ஏறுடை இனம் - ஏற்றையுடைய இனங்கள். நிரை - பசுக்கள். வேறுபுலம் - மேட்டு நிலம். பரப்பி - மேயவிட்டு.

5. புலம்பெயர் - தான் பயின்ற நிலத்தைக் கைவிட்டு வேறு நிலம் போகின்ற. புலம்பொடு - தனிமை யினாலே. கலங்கி - வருந்தி. கோடல் - காந்தட்பூ.

6. நீடிதழ் - நீண்ட இதழ்களாற் கட்டின. அலை - அலைத் தலாலே. கலாவ - கலக்கமெய்த.

7. மெய் - உடம்பு. பனி - குளிர்ச்சி. நலிய - வருந்த.

8. கொள்ளியர் - நெருப்பினையுடையராய். கவுள்புடையூஉ - பற்பறை கொட்டி.

9. மா - விலங்குகள். மேயல் - மேயற்றொழில். மந்தி - குரங்கு. கூர - குளிர்ச்சி மிக.

10. படிவன - தங்குவன. வீழ - (காற்று மிகுதியினலே) நிலத்தே வீழ. கறவை - பசுக்கள்.

11. கன்று கோளொழிய - கன்றை ஏற்றுக் கோடலைத் தவிர. கடியவீசி - (குளிரின் மிகுதியாற்) கடியவாய் உதைத்து.

12. குன்று - மலை. குளிர்ப்பன்ன - குளிர்ச்சி செய்யுமாறு போன்ற. கூதிர் - கூதிர் காலம் (குளிர் காலம்) ஐப்பசி, கார்த்திகை மாதங்கள். பால் நாள் - நடுயாமம் (நள்ளிரவு).

13. புன் - புல்லிய. வான்பூ - வெள்ளிய பூ.

14. பீரம் - பீர்க்கு. புதல் - புதர்.

15. பைங்கால் - பசிய கால்; பண்புத் தொகை. மெல் பறை - மெல்லிய சிறகு. தொழுதி - திரள்.

16. இருங்களி - வண்டலிட்ட சேறு.

17. செவ்வரி - சிவந்த வரியினையுடைய. எவ்வாயும் - எவ்விடங்களிலும்.

18. கயல் - மீன்கள். அறல் எதிர - அற்ற நீர்க்கு எதிரே வர. சாஅய் - ஒதுங்கி.

19. பெயல் - மழை. உலந்து - வருந்தி. பொங்கல் - பொங்குதலையுடைய; தொழிற் பெயர். வெண்மழை - வெள்ளிய மேகம்.

20. இருவிசும்பு - பெரிய ஆகாயம்.

21. அங்கண் - அழகிய இடத்தையுடைய. கலித்த - தழைத்த.

22. வண்தோடு - வளமான இலை; பண்புத் தொகை. வருகதிர் - முளைத்த கதிர்; வினைத் தொகை. வணங்க - முற்றி வளைய.

23. முழுமுதல் - பெரிய அடி. மணி - நீலமணி. உறழ் - ஒத்த; உவம உருபு. எருத்து - கழுத்து.

24. கொழு மடல் - கொழுமையான மடல்; பண்புத் தொகை. அவிழ்ந்த - பாளை விரிந்த. பெருங்குலை - பண்புத் தொகை.

25. தெவிள வீங்கி - திரளும்படியாக வீங்கி. புடை திரண்டு - பக்கந்திரட்சி பெற்று.

26. தெண்ணீர் - தெளிந்த நீர்; பண்புத் தொகை. பசுங்காய் - பச்சைப் பாக்கு; பண்புத் தொகை. சேறு - இனிமை.

27. நளி - செறிவு. சிமைய - உச்சி. வியன் - அகன்ற. ('வியலென் கிளவி அகலப் பொருட்டே' என்பது தொல்காப்பிய உரியியல் நூற்பாவாகும்) கா - சோலை.

28. சினை - கொம்பு. குரூஉ - நிறத்தையுடைய. துளி - மழைத்துளி. தூங்க - மாருமல் வீழ.

29. மல்லல் - வளமை. ('மல்லல் வளனே' - தொல். உரியியல்) மூதூர் - பழைமையான ஊர்; பண்புத் தொகை.

30. கிடந்தன்ன - கிடந்தாற் போன்ற.

31. படலை - தழை. பரேர் - பருத்த அழகினையுடைய. திணிதோள் - இறுகின தோள்.

32. முடலை - முறுக்குண்ட. யாக்கை - உடம்பு. மாக்கள் - மிலேச்சர்.

33. மூசு - மொய்க்கின்ற. தேறல் - கட்தெளிவு. மாந்தி - உண்டு. மகிழ் சிறந்து - களி மிகுந்து.

34. துவலை - சிறு தூறல். பேணுர் - அஞ்சாதவராய்.

35. இருகோட்டு - முன்னும் பின்னும் தொங்கவிடப்பட்ட. அறுவையர் - துகிலினையுடையார். வேண்டுவயின் - விரும்பிய இடத்தில். திரிதர - திரிதலைச் செய்த.

36. வெள்ளி - வெளுக்கப்பட்ட. வள்ளி - சங்குவளை. வீங்கு - இறுகின. இறை - முன்கை. பணைத்தோள் - பருத்த தோள்கள்.

37. சாயல் - மென்மை. உறழ் - போன்ற; உவம உருபு. முறுவல் - பல்.

38. பூங்குழை - பொலிவினையுடைய மகரக்குழை. அமர்ந்த - அழகிற்குப் பொருந்தின. ஏந்தெழில் - உயர்ந்து தோன்றுகின்ற அழகினையுடைய மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்.

39. மடவரல் - இளமை. பிடகை - பூந்தட்டி. பெய்த - இட்டு வைத்த.

40. செவ்வி - மலருங்காலம். பித்திகம் - பிச்சிப்பூ.

41. அவ்விதழ் - அழகிய இதழ்கள். அவிழ்பதம் - விரியும் செவ்வி. கமழ - மணம் வீச. பொழுதறிந்து - அந்திக்காலம் அறிந்து.

42. ஈர்ந்திரி - நெய் தோய்ந்த திரி. கொளீஇ - கொளுத்தி; சொல்லிசையளபெடை. விளக்கு - ஆகுபெயர்.

43. தூஉய் - சிதறி. கைதொழுது - இல்லுறை தெய்வத்தை வணங்கி.

44. ஆவணம் - அங்காடித் தெரு. மாலை - மாலைக் காலம். அயர - கொண்டாட.

45. புறவு - புரு. சேவல் - ஆண் புரு.

46. உண்ணாது - இரைதேடியுண்ணாமல்.

47. இரவும் பகலும் மயங்கி - இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குகையினாலே. இரவும் பகலும் - உம்மைத் தொகை. கையற்று - செயலற்று.

48. மதலைப்பள்ளி மாறுவன இருப்ப - கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகைகளிலே பறவாதிருந்து கடுத்த கால் ஆறும்படி மாறி மாறி இருக்க. மதலைப் பள்ளி - வீட்டின் ஓருறுப்பு.

49. கடி - காவல். சிறுகுறு தொழுவர் - சிறியராகிய குற்றேவல் செய்வோர்.

50. கொள் - கொள்ளு. உறழ் - ஒத்த. போல - உவம உருபு. நறுங்கல் - நறிய சாத்தம்மி. சாந்தரைக்கும் அம்மி. பல கூட்டு - கத்தூரி முதலிய பல பசுங்கூட்டு. மறுக - அரைக்க.

51. வடவர் வடநாட்டிலுள்ளார். வான்கேழ் - வெள்ளிய நிறமுடைய. வட்டம் - சிலாவட்டம், சந்தனக்கல்.

52. தென்புலம் - தென்னாடு. மருங்கு - பக்கம். சாந்து - சந்தனம். துறப்ப - பயன்படாமற் கிடப்ப.

53. கோதை - மாலை.

54. பல்லிருங்கூந்தல் - பலவாகிய கரிய மயிர். சின்மலர் - சிலமலர். பெய்ம்மார் - முடித்தலை வேண்டி. மாரீற்று எதிர்கால வினையெச்சம்.

55. தகரம் - மயிர்ச் சந்தனம். முளரி - விறகு.

56. இருங்காழ் - கரிதாகிய வயிரத்தையுடைய. அகில் - அகிற் கட்டை. அயிர் - கண்ட சருக்கரை.

57. கவின்பெறப் புனைந்த - அழகு பெறப் பண்ணின.

58. செங்கேழ் - சிவந்த நிறமுடைய. வட்டம் - ஆல வட்டம். சுருக்கி - உறையிடப்பட்டு. கொடுந்தறி - வளைந்த முளைக்கோல்.

59. சிலம்பி - சிலந்தி. வானூல் - வெள்ளிய நூல். வலந்தன - சூழப்பட்டன. தூங்க - தொங்க.

60. நிவந்த - உயர்ந்த.

61. வேனிற் பள்ளி - இளவேனிற் காலத்துத் துயிலும் படுக்கை. தென்வளி - தென்றற் காற்று. தரூஉம் - இன்னிசையளபெடை.

62. நேர்வாய்க் கட்டளை - சாலேகம், சன்னல். திரியாது - நின்று உலவாது.

63. போர்வாய் கதவம் - இரண்டு கதவும் தம்முட் பொருதல் வாய்த்த. தாழொடு துறப்ப - தாழிட்டுக் கிடக்க.

64. கல் - ஒலிக்குறிப்பு. தூவல் - பரப்புதல்.

65. தொகுவாய் - குவிந்தவாய். கன்னல் - கரகம், இக் காலத் 'தம்ளர்'.

66. பகுவாய் - பிளந்த வாய். தடவு - தூபமூட்டி. ஆர - வெம்மையை நுகர.

67. நின்றன்று - நிலைபெற்றது. போது - பின்னர் நிகழ்ந்தபொழுது. மாதிரம் - திசை.

68. விரிகதிர் - விரிந்த கிரணங்கள்; வினைத்தொகை. வியல்வாய் - அகன்ற இடத்தையுடைய. மண்டிலம் - ஞாயிறு மண்டலம்.

69. இருகோல் குறிநிலை வழுக்காது - இரண்டு இடத்து நாட்டின இரண்டு கோலிடத்தும் சாயா நிழலால் தாரை போக ஒடுகின்ற நிலையைக் குறித்துக் கொள்ளுந்தன்மை தப்பாத. குடக்கு ஏர்பு - மேற்றி சைக்கண் சேருவதற்கெழுந்து.

70. ஒரு திறம் - ஒரு பக்கம். சாரா - சாராத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அமையம் - சமயம்.

71. நூலறி புலவர் - சிற்ப நூலறிந்த தச்சர். நுண்ணிதின் - கூரிதாக. கயிறிட்டு - கயிற்றை நேரே பிடித்து.

72 தேஎங் கொண்டு - திசைகளைக் குறித்துக்கொண்டு.

73. மனை வகுத்து - மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலியவற்றையும் கூறுபடுத்தி.

74. ஒருங்குடன் வளைஇ - ஒரு சேர வளைத்து. ஓங்குநிலை - உயர்ந்த மதில்.

75. பிணித்து - கட்டி. செவ்வரக்கு - சாதிலிங்கம். உரீஇ - வழித்து.

76. துணைமாண் - இரண்டாய் மாட்சிமைப்பட்ட. பொருத்தி - சேர்த்தி இணை - இணைதல்.

77. நாள் - உத்தரமென்னும் நாள். விழுமரம் - உத்தரக் கற்கவி. கோளமை - செருகுதல் பொருந்தின.

78. 'நடுவே திருவும் இரண்டு புறத்தும் இரண்டு செங் கழுநீர்ப்பூவும் இரண்டு பிடியுமாக வகுத்த உத்தரக் கற்கவி' என்பர் உரையாசிரியர் நச்சினார்க்கினியர். (இரண்டு யானைகளின் இடையே திருமகள் வீற்றிருக்கும் காட்சியினைக் கோயிற் சிற்பங்களில் இன்றும் காணலாம்.)

79. குயின்ற - சேரப்பண்ணின. போரமைப் புணர்ப்பின் - பலமரங்களும் தம்மிற் கிட்டுதலமைந்த கூட்டத்தினை யுடைய.

80. முடுக்கலின் - கடாவுதலின். புரைதீர்ந்து - வெளியற்று.

81. ஐயவி - வெண் சிறு கடுகு.

82. வேழம் - யானை.

83. குன்று - மலை. குயின்றன்ன - நடுவே வெளியாகத் திறந்தாற் போன்ற. வாயில் - கோபுரவாயில்.

84. திரு - திருமகள். தீது தீர் - குற்றமற்ற. சிறப்பு - தலைமை.

85. நெமிரிய - பரப்பிய. திருநகர் - மனை.

86. எகினம் - கவரிமா. தூநிறம் - தூய நிறம்.

87. உகளும் - தாவித் திரியும். முன் கடை - வாசல் முன்.

88. பணை நிலை - பந்தியிலே நிற்றல். முனைஇய - வெறுத்த. உளை - பிடரி மயிர். புரவி - குதிரை.

89. உண - உணவு. தெவிட்டும் - குதட்டும். புலம்பு விடு - தனிமை தோற்றுவிக்கின்ற.

90. பயன் கொள்ளும் - நுகரும். முற்றம் - நிலா முற்றம்.

91. கிம்புரி - மகரவாய். அம்பணம் - வீட்டின் கூடுவாய் மூலையிலமைந்த நீரை வீழ்த்துங் கருவி.

92. கலிழ்ந்து - கலங்கி. பாடுவிறந்து - ஓசை செறிந்து.

93. ஒலி - தழைத்த. பீலி - தோகை. ஒல்க - ஒதுங்க மெல்லியல் - மெல்லிய இயல்பினையுடைய.

94. கலி - மனஞ் செருக்கின. அகவும் - ஆரவாரிக்கும். வயிர் மருள் - கொம்பென்று மருளும்.

95. நளி - செறிவு. சிலம்பின் - ஆரவாரம் போல. இன் - போல; உவம உருபு.

96. யவனர் - சோனகர். வினைமாண் - தொழில் மாட்சி பெற்ற. பாவை - பிரதிமை.

97. கையேந்து - கையிலே ஏந்தியிருக்கின்ற. ஐ - வியப்பு. அகல் - தகளி. சொரிந்து - வார்த்து.

98. பரூஉத்திரி - பருத்த திரி. கொளீஇய - கொளுத்தி வைத்த. குரூஉ - நிறம். நிமிர் எரி - மேல் நோக்கி எரிகின்ற விளக்கு.

99. அறுவறு காலைதோறும் - நெய் வற்றின காலந் தோறும், ஒளி மழுங்கின காலந்தோறும். அமைவரப் பண்ணி - நெய்வார்த்துத் தூண்டி.

100. பள்ளி - இடம். பாயிருள் - பரந்த இருட்டு.

101. பீடு - பெருமை. சிறப்பு - தலைமை. பெருந்தகை - பாண்டியன்.

102. ஆடவர் - குற்றேவல் செய்வோர். குறுகா - அணுக வாராத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கடி - காவல். வரைப்பு - இடம்.

103. வரை - மலை. தோன்றல் - உயர்ச்சியுடைய.

104. வில் - இந்திரவில். பல்வயின் - பலவிடங்கள் தோறும்.

105. வெள்ளி - வெள்ளியாகிய மீன். சுதை - சாந்து. உரீஇ - வாரி.

106. மா - கருமை. திரள் - திரட்சி. காழ் - தூண்.

107. இயன்ற - பண்ணப்பட்ட. செய்வுறு - தொழில்கள் செய்தலுற்ற.

108. உருவம் - வடிவழகு. ஒரு கொடி - வல்லிசாதி என்னும் ஒரு வகைக் கொடி.

109. பெயரிய - பெயர்பெற்ற. காண்பின் - காட்சிக்கினிய.

110. தசம் - பத்து. தசம் நான்கு - நாற்பது. பணைமருள் - முரசென்று மருளும். நோன்குறள் - வலிய கால்.

111. இகல் - போர். மீக்கூறும் - மேலாகச் சொல்லும். ஏந்தெழில் - உயர்ந்த அழகு. வரி நுதல் - புள்ளியினையுடைய துதிக்கை.

112. பொருதொழி - பொருதுபட்ட. நாகம் - யானை. ஒழியெயிறு - தானே வீழ்ந்த கொம்பு. அருகெறிந்து - இரண்டு புறத்தையுஞ் செதுக்கி.

113. சீரும் செம்மையும் ஒப்ப - கனமும் செம்மையும் ஒப்ப. வல்லோன் - தச்சன்.

114. கூருளி - கூரிய சிற்றுளி; பண்புத்தொகை. ஈரிலை இடையிடுபு - இலைத்தொழிலை இடையேயிட்டு.

115 புடை திரண்டிருந்த - பக்கம் உருண்டிருந்த.

117. பேரளவு - பெரிய எல்லை. எய்திய - பெற்ற. பாண்டில் - கட்டில்.

118. மடைமாண் - மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட. நுண்ணிழை - மெல்லிய நூல். பொலிய - அழகு பெற. தொடை மாண்ட - கட்டுதற் சிறந்த.

119. சாலேகம் - சாளரம், சன்னல். நாற்றி - நாற்புறமும் தொங்கவிட்டு. குத்துறுத்து - ஆணிகளாலே தைத்து.

120. பொறி - வரி. பூக்கேழ் - பொலிவு பெற்ற நிறம். தட்டம் - கச்சு.

121. கண் புதைய - இடம் மறையும்படி. கொளீஇ - கோக்கப்பட்டு. துகள் - குற்றம். தகடு - சட்டம்.

122. ஊட்டுறு - நிறம் பிடித்த. வயமான் - சிங்கம் முதலிய விலங்குகள்.

123. வேட்டம் பொறித்து - வேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளை வைத்து.

124. உறழ - மாறுபடும்படி.

125. சேக்கை - படுக்கை.

126. சில்மெல்லோதி - சிலவாகிய மெத்தென்ற மயிர்.

127. நீர் - ஒளி. வார்குழை - மகரக்குழை. குறுங்கண் - சிறிய இடம்.

128. வாயுறை - தாளுருவி. வறிதுவீழ் - சிறிதே தாழ்ந்த.

129. பொலம் - பொன். 'முன்பு பொன்னாற் செய்த தொடி கிடந்து தழும்பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக்கிடந்த முன்கை.' (நச்சினார்க்கினியர்)

130. வலம்புரி - வலம்புரிச்சங்கு. வளை - வளையல். கடிகை நூல் - காப்புக் கயிறு. யாத்து - கட்டி.

131. வாளை - வாளை மீன். பகுவாய் - பிளந்த வாய். கடுப்ப - போல; உவமஉருபு. வணக்குறுத்து - முடக்கத்தையுண்டாக்கி.

132. விளக்கம் - முடக்கென்னும் மோதிரம்.

133. மகளிர் - ஈண்டு அரண்மனைச் சேடியர். நல்லடி வருட - துயிலுண்டாகுமோவென்று அடியைத் தடவ.

134. நரை - நரை மயிர். விராவுற்ற - கலத்தலுற்ற.

135. செவிலியர் - செவிலித்தாயர். கைமிக - தலைவியின் ஆற்ருமையாகிய ஒழுக்கம் மிகுகையினாலே. குழீஇ - திரண்டு.

136. குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி - 'பொருளொடு புணராப் பொய்ம் மொழியும் மெய்ம் மொழியுமாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லி' என்பர் நச்சினார்க்கினியர்.

137. இன்னே - இப்பொழுதே.

138. உகத்தவை - மனத்திற்கு இனிய ஆறுதல் மொழிகள். ஒல்லாள் - பொருந்தாளாய்; வினையாலணையும் பெயர். கலுழ்ந்து - கலங்கி.

139. புதுவதின் இயன்ற - புதிதாக எழுதின. படம் - ஆடை.

140. மருப்பு - கொம்பு. ஆடு தலையாக - மேடராசி முதலாக.

141. ஊர்பு திரிதரும் - ஏனை இராசிகளிற் சென்று திரியும். வீங்கு செலல் - மிக்க செலவினையுடைய. மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம்.

142. முரண்மிகு - மாறுபாடு மிகுந்த. செல்வன் - திங்கள். நிலைஇய - திரியாமல் நின்ற.

143. உரோகிணி நினைவனள் நோக்கி - 'உரோகிணியைப் பேரல யாமும் பிரிவின்றியிருத்தலைப் பெற்றிலேமே யென்று நினைத்து அவற்றைப் பார்த்து' (நச்சினார்க்கினியர்) நெடிதுயிரா - நெட்டுயிர்ப்புக் கொண்டு.

144. மாயிதழ் - நீலப்பூ. மலிந்தேந்திய - மிக்குச் சுமந்த. அரிப்பனி - ஐதாகிய நீர்.

145. தெறியா - தெறித்து. செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

146. புலம்பொடு - (கணவனைப் பிரிந்த) தனிமையோடு. வதியும் - வசிக்கின்ற. நலங்கிளர் - அன்பு மிகுகின்ற.

147. இன்னா - தீதாக இருக்கின்ற. அரும்படர் - அரிய துன்பம். விறல் - வெற்றி.

148. முடிகதில் - முடிவதாக. அம்ம - கேட்பாயாக. மின்னவிர் - ஒளி விளங்குகின்ற.

149. ஓடை - யானையின் நெற்றிப் பட்டம். வினைநவில் - போர்த் தொழிலிற் பயின்ற.

150. தடக்கை - உரிச்சொற்றொடர்.

151. களம்படுத்த - போர்க்களத்தில் கொன்ற. பெருஞ்செய் - பெரிய செயலையுடைய. ஆடவர் - வீரர்.

152. ஒளிறுவாள் - விளங்குகின்ற வாள். விழுப்புண் - சிறந்த புண். காணிய - காணும் பொருட்டு. செய்யிய யென்னும் வினையெச்சம்.

153. வடந்தை - வாடை. தண்வளி - குளிர்ந்த காற்று. எறிதொறும் - அடிக்குந்தோறும். நுடங்கி - அசைந்து.

154. தெற்கு - தென்திசை. ஏர்பு - எழுந்து. இறைஞ்சிய - வணங்கிய.

155. பாண்டில் விளக்கு - கால் விளக்கு. விளக்கு - ஆகு பெயர். பரூஉச்சுடர் - பருத்த சுடர்க் கொழுந்துகள். அழல - எரிய.

156. வேம்பு - வேப்பம்பூமாலை. தலையாழ்த்த - தலையிலே கட்டின. நோன்கால் - வலிய காம்பு. எஃகம் - வேல்.

157. முன்னோன் - முன்னே செல்கின்ற சேனைத் தலைவன்.

158. மாத்தாள் - பெருமையினையுடைய தாள். பிடி - பெண் யானை.

159. பருமம் - குதிரைச் சேணம். களையா - கழற்றப்பெறாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பாய்பரி - பாய்ந்து செல்லும் செலவினையுடைய.

160. இரு - கரிய. விதிர்ப்ப - உதறிக்கொண்டிருக்க.

161. புடை - இடத்தோள். வீழ் - நழுவி விழுந்த. இடவயின் தழீஇ - இடப்பக்கத்தே தழுவிக்கொண்டு.

162. வன்கண் - அஞ்சாமையுடைய.

163. சுவல்மிசை - தோளிலே. அமைத்த - வைத்த. கையன் - கையையுடையவனாய் முகனமர்ந்து - முகம் பொருந்தி.

164. நூல் கால் யாத்த மாலை - நூலாலே சட்டத்தைக் கட்டிய முத்தமாலை.

165. தவ் - ஒலிக்குறிப்பு. அசைஇ - அசைந்து; சொல்லிசையளபெடை.

166. யாமத்தும் - உம், சிறப்பும்மை.

167. சிலரொடு - சில வீரரோடு. திரிதரும் - திரியும். வேந்தன் - பாண்டியன் நெடுஞ்செழியன்.

168. முரணிய - மாறுபட்ட.

# 2. புறநானூறு

1. சேயிழை - செம்மை இழை - சிவந்த அணி. வாள்நுதல் - ஒளி தங்கிய நெற்றி. தடவுவாய் - பெரிய இடம்; தட என்ற உரிச்சொல் திரிந்து நின்றது. கலித்த - தழைத்த. மா - கரிய. சிதர் - துளி. கலாவ - கலக்க. மால்பு - கண் ஏணி. சாயல் - மென்மை.

'விறலி, பாரிவேள்பாற் பாடினை செலின், சேயிழை பெறுகுவை' எனக் கூட்டுக. விறலி - பாடி ஆடுபவள்; பாடினி.

பாடாண்டிணை: இது புறத்திணைகளுள் ஒன்று. பாடப்படும் சிறந்த ஆண் மகனுடைய புகழ், வலி கொடை, அளி முதலியவற்றைத் தெரிந்து கூறுவது இத்திணையின் இலக்கணமாம்.

விறலியாற்றுப்படை: இது பாடாண்டிணையுள் வரும் ஒரு துறை. அரசனுடைய புகழைப் பாடி ஆடுதல் பயின்ற வளாய்ப் பரிசில் பெற விரும்பி நிற்கும் விறலி ஒருத்தியை, ஓர் அரசனிடம் பரிசில் பெற்றுவரும் விறலி ஒருத்தி, அவ்வரசனை அடையும் வழிகூறி, அவனை அவ்வழியிற் செலுத்துதல் விறலியாற்றுப்படை ஆகும்.

2. குவிஇணர் - குவிந்த பூங்கொத்து. மடவர் - அறி வில்லாதார். மெல்லியர் - அற்பக் குணங்களையுடையவர். கைவண்மை - கொடை.

3. பல ஏத்தி - பல புகழையும் வாழ்த்தி. செந்நாப் புலவர் - செவ்விய நாவையுடைய அறிவுடையோர். புரப்பது - காப்பது.

'உலகு புரத்தற்கு மாரியும் உண்டாயிருக்கப் பாரி ஒருவனையே புகழ்வர் புலவர்' எனப் பழித்ததுபோலப் புகழ்ந்தவாறு.

இயன்மொழி: இது பாடாண்டிணையுள் ஒரு துறை. ஒரு தலைவன் இயல்புகளைப் புகழ்தல் இத்துறையாகும். 'இன்னார் இன்னது கொடுத்தார்; அவர் போல நீயும் கொடுப்பாயாக' என யாவரும் அறியக் கூறுதலும், தலைவனுடைய முன்னோர் செய்திகளை அவன்மீ தேற்றிக் கூறுதலும், தலைவன் தன்மைகளைப் புகழ்ந்து கூறுதலும் இத்துறையின் இலக்கணமாகும்.

4. மாட்டிய - மடுத்து எரிக்கப்பட்ட; மூட்டிய. வறல் - வற்றுதல். ஆரம் - சந்தனம். சினை - கொம்பு. வரையன் - எல்லையில் நிற்பவன்.

5. அளிது - இரங்கத்தக்கது. அளிதோ என்ற ஓகாரம் வியப்பின்கண் வந்தது. நளி - பெருமை. பயன் - விளையுள். வெதிர் - மூங்கில். ஊழ்க்கும் - முதிர்ந்து உதிரும். ஓரி - தேன் முதிர்ந்தால் அதன்கண் பரக்கும் நீல நிறம்; முசுக் கலையுமாம். வான்கண் - வானிடம். 'வானத்துக்கண் மீன் அற்று' எனக் கூட்டி, 'அவ்வானத்தின்கண் விண்மீனை யொக்கும்' எனப் பொருளுரைத்துக் கொள்க; இனிக் கண் அசையுமாம். தாள் - முயற்சி. கொள்ளலிர் - கொள்ள மாட்டீர். சுகிர்புரி நரம்பு - வடித்து முறுக்கப்பட்ட நரம்பு. பண்ணுதல் - இசை கூட்டுதல் - விரை - நறுநாற்றம். ஒலி கூந்தல் - தழைத்த கூந்தல். விறலிய ரென்றது, அவர்தம் உரிமை மகளிரை.

நொச்சி: இது புறத்திணைகளுள் ஒன்று; பகைவர்க்கு எதிரூன்றி, நொச்சிப் பூமாலை சூடி மதிலைக் காக்கும் வீரர், தம் மதில் காக்கும் திறம் கூறுவது; மதிலைக் காக்கும் வீரர்கள் சூடிய போர்ப்பூவைப் புகழ்வதுமாம்.

மகள் மறுத்தல்: இது நொச்சித் திணைத் துறைகளுள் ஒன்று; ஒரு வீரன் தான் மணம் புரிந்துகொள்வதற்குத் தம் மகளை வேண்டச் சிற்றரண்களிலுள்ளோர் மறுத்துக் கூறுதல் என்னும் பொருளுடையது.

6. கடந்து அடுதானை - வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படை. உடலுதல் - போர் செய்தல். ஊர்த்து - ஊர்களையுடையது.

7. வேறல் - வெல்லுதல். நீலத்திணை மலர் - இணைந்த நீலமலர்; கண்களுக்கு உவமை. உண்கண் - மையுண்ட கண். கிணைமகள் - கிணை என்னும் பறையை யுடையவளாகிய விறலி.

8. மட்டு - மது; ஈண்டு மதுச்சாடி: ஆகு பெயர். மைவிடை - ஆட்டுக் கிடாய். பழுனி - முதிர்ந்து. மன்: கழிவின்கண் வந்தது. கையற்று - செயலற்று. பழிச்சி - வாழ்த்தி. சேறும் - செல்வேம். வாழி, ஓ: அசை நிலைகள். பெயர் - புகழ். தொடி - வளை. கிழவர் - உரியவர். படர்ந்து - நினைந்து.

'பறம்பே பெருவளம், பழுனி நட்டனை முன்; இனி நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்து சேறும்' எனக் கூட்டுக.

9. ஆர்ப்ப - ஆரவாரித்துக்கொண்டு ஒழுக. மண்டை - மண்டை எனப்படும் உணவுப்பாத்திரம். பெய்ம்மார் - வார்க்க வேண்டி. வாக்க - வடிக்க. உக்க - வழிந்த. தேக்கள் - இனிய கள். அண்ணல் - தலைமை. இன்னன் - கொடியோன்.

10. தீநீர் - இனிய நீர். குண்டு - ஆழமான. கூம்பு - முகை. மூசு - மொய்த்து. பஞ்சி - பஞ்சு. பீரை நாறிய - பீர்க்கு முளைத்த. ஒழுகை - சகடம். ஆலவும் - ஆடவும். கலை - முசுக்கலை என்னும் குரங்கு. பயம் பகரும் - பழம் முதலியவற்றை விளைத்துக் கொடுக்கும். யாணர் - புது வருவாய். கலிமா - செருக்கிய குதிரை.

11. மை மீன் - கரிய நிறமுடைய சனி என்னும் விண் மீன். சனி புகைதலாவது இடபம், சிங்கம், மீனம் இவற் றோடு மாறுபடுதல். இவற்றுள் சனி, தனக்குப் பகை வீடா கிய சிங்கராசியில் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளை விப்பன் என்பதை, ''மகத்தில் புக்கதோர் சனியெனக் காணய்'' எனத் தேவாரம் கூறுவது காண்க. தூமம் - புகைக்கொடி; தூமகேது என்பதும் இதுவே; இதன் தோற்றம் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பர்; "தூமகேது புவிக்கெனத் தோன்றிய" எனக் கம்பராமாயணம்

குறிப்பது காண்க. புதல் பூ - புதலிடத்து மலரும் பூ. மகவு - குழவி. அமர் கண் - விருப்பத்தை விளைவிக்கும் கண். ஆமா - காட்டுப் பசு. ஆர - மேய. பல்கி என்பதைப் பல்க எனத் திரிக்க. வெருகு - காட்டுப் பூனை. முள் எயிறு - கூரிய பல். முகைக்கும் - அரும்பு விடும். ஆய் தொடி - நுண்ணிய தொழிலையுடைய வளை.

12. அறை - பாறை. பொறை - சிறு குவடு. மணந்த - கூடிய. கொடு கரை - வளைந்த கரை. கீள்வது - உடைவது. மாதோ; அசை. குவைஇய - திரண்ட. மொய்ம்பு - தோள். நாடுகுளங் கீள்வது என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்து மேல் ஏறி நின்றது.

13. கார்ப் பெயல் - கார் காலத்து மழை. தலைஇய - பெய்து மாறிய. காண்பு இன் காலை - காட்சி இனிய காலம். வரி - புகர்; புள்ளி. தெறுழ்வீ - தெறுழினது மலர். தெறுழ் - காட்டகத்து ஒரு கொடி; புளிமாவுமாம். அளை - மோர். யாணர்த்து - புது வருவாயை உடையது. நந்தும் - கெடும். பணை - முரசம். இறந்தும் - மிகுத்தும்.

"வள்ளியோன் நாடு இன்னளைப் புளித்து; யாணர்த்து; அது நந்துங் கொல்லோ" எனக் கூட்டுக.

14. சுவல் - மேட்டு நிலம். கலித்த - தழைத்த. பூழி - புழுதி. பல்லி - ஒரு வகைக் களை. கழாலின் - களைதலால். தோடு ஒலிபு நந்தி - இலை தழைத்துப் பெருகி. புனிறு - ஈன்றணிமைத்தாகிய. பீல் - சூல். கவ்வை - எள்ளிளங் காய். விளர்க்காய் - வெள்ளைக்காய். பழுனிய மட்டு - முதிர்ந்த மது. தேறல் - தெளிவு. குரம்பை - சிறு வீடு. விசைப்ப - துள்ள. பெருந்தோள் - பெரிய தோளையுடைய மனைவி. தாலம் - உண்கலம். யாணர் - புது வருவாய். இருமை - கருமை. நரலும் - ஒலிக்கும். சிமை - உச்சி. கம்பலை - ஆரவாரம். விறல் - வென்றி.

15. நிவந்த - ஓங்கிய. கடுவன் - ஆண் குரங்கு. மந்தி - பெண் குரங்கு. கழை - மூங்கில். கறங்கும் - ஒலிக்கும். வணக்கும் - தாழ்விக்கும். மடங்கா விளையுள் - மடக்கப் படாத மிக்க விளைவு.

'பலவின் கனி கவர்ந்துண்ட கடுவன் மந்தியோடு சிறந்து சேண் விளங்கிக் கழைமிசைத் துஞ்சும்' என்றதனல் நீயும் இவரை வரைந்துகொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டும் என்பது தோற்றி நின்றது.

பரிசிற்றுறை: இது பாடாண்டிணையுள் ஒரு துறை; அரசன் முன்னே, பரிசிலர் தாம் கருதிய பேறு இஃதெனக் சொல்லுதல் இதன் இலக்கணம்.

உலகில் மகட்பேசிவிடக் கொடுத்தலேயன்றித் தாமே 'இவரைக் கொள்வாயாக' என்று இரந்து கூறினமையின், இது பரிசிற்றுறை ஆயிற்று.

16. இவர் - இந்த மகளிர். உடன் - எல்லாம். செல்லா - தொலையாத. படுமணி - ஒலிக்கும் மணி. தடவு - ஓமகுண்டம். புரிசை - மதில். உவரா ஈகை - வெறுப்பில்லாத கொடை. சேடு - பெருமை. ஒலியல் - தழைத்தல். உடலுநர் - பகைவர். உட்கும் - அஞ்சும்.

'வேளே அண்ணல் இருங்கோவே, புலிகடிமாஅல், கிழவ, நாடு கிழவோய், நீ இப்படிப்பட்ட உயர்ந்த குடியிற் பிறந்தவனதலால், யான்தர இவரைக் கொண்மதி' எனக் கூட்டி வினைமுடிவு செய்க.

யான் இவருடைய தந்தை தோழனதல்ானும் அந்தணனதலானும் யான்தர நீ இவரைக் கோடற்குக் குறையில்லை என்பது கருத்து.

17. ஆட்ட - அலைப்ப. கட்சி - புகலிடம். கடறுமணி - வரைச் சாரலில் உள்ள மணி. கிளர - மேலே கிளம்ப. மிளிர - விளங்க. கடிய கதழும் - விரைய ஓடும். படப்பை - பக்கம். இருபால் பெயரிய உருகெழு மூதூர் - சிற்றரையம் பேரரையம் என இரு கூற்றல் பெயர் பெற்ற அச்சம் தோற்றுவித்தல் பொருந்திய பழைய ஊர். தாயம் - உரிமை. தேற்ற - தெளியாத. நோற்றிசின் - பொறுப்பாயாக. விடுத்தனன் - விடை கொண்டேன். அடுக்கம் - அரைமலை; சரிவு. மாதகடு ஒள்வீ - கரிய புறவிதழையுடைய ஒள்ளியபூ. தாய - பரந்த. வைப்பு - ஊர்.

'புலி கடி மா அல், அண்ணல், நாடு கிழவோய், அரையத்துக் கேடும் கேள் இனி; அது, கழா அத்தலையை இகழ்ந்ததன் பயன்; இப்பொழுது எவ்வி தொல்குடிப் படீஇயர்; இவர் பாரி மகளிர் என்ற புன் சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே, நின்னை விடுத்தேன்; நின் வேல் வெல்வதாக' எனக்கூட்டி வினை முடிவு செய்க.

நீடு நிலை அரையத்துக் கேடும் கழாஅத்தலையை இகழ்ந்ததன் பயனென்ற உம்மையான் இவ் விகழ்ச்சியும் உனக்குக் கேடு தரும் என்பதாயிற்று.

'வெலீஇயர் நின்வேல்' என்றது குறிப்பு மொழி.

'நுந்தை தாயம் நிறைவுற வெய்திய' என்பதும், 'நும்போ லறிவின்' என்பதும் இகழ்ச்சி தோன்ற நின்றன.

'வேங்கைவீ தாய துறுகல் இரும்புலி வரிப்புறம் கடுக்கும்' என்ற கருத்து; 'துன்பம் செய்யாததும் துன்பம் செய்வது போலக் கண்டார்க்கு அச்சம் வரத் தோன்றும்' என்பது: இதுவும் இகழ்ச்சி தோன்ற நின்றது.

18. கலை - முசுக்கலை எனப்படும் ஆண் குரங்கு. முழவு - மத்தளம். சிலை - வில். புலந்தனை - வெறுத்தனை. உம்மை - மறு பிறவி. பால் - விதி.

# 3. பதிற்றுப்பத்து

## 1. புண்ணுமிழ் குருதி

1. வரை மருள் - மலையை ஒக்கின்ற. புணரி - அலை. வான் பிசிர் - வெள்ளிய திவலைகள். உடைய - உடையும் படி.
2. வளி பாய்ந்து அட்ட - காற்றுத் தாக்கிச் சிதைத்த. துளங்கிருங் கமஞ்சூல் - அசைகின்ற பெரிய நிறைந்த நீரினையுடைய.
3. நளியிரும் பரப்பின் - குளிர்ந்த பெரிய பரப்பினையுடைய. முன்னி - கருதி.
4. அணங்கு - பிறரை வருத்தும். ஏமம் - காவல்.
5. சூர் - சூரபன்மா. முழுமுதல் - மாவின் பெரிய அடி. தடிந்த - வெட்டின.
6. பேரிசை - பெரும்புகழ். விறல் வேள் - வெற்றியினை யுடைய முருகவேள்.
7. எஃகம் - வேல். விலங்குநர் - எதிரில் நின்று தடுக்கும் பகைவர்.
8. அருநிறம் - அரிய மார்பு. நிறம் - உயிர் நிலையுமாம்.
9. மணி - நீலமணி. இருங்கழி - பெரிய உப்பங்கழி. நிறம் பெயர்ந்து - நிறம் மாறி.
10. மனுலக் கலவை - குங்குமக் கலவை. அரண் கொன்று - அரணினை அழித்து.
11. முரண் - வலி. ஊக்கலை - செலுத்தும் முயற்சியுடையாய்.
12. மொசிந்து - மொய்த்து. ஓம்பிய - காத்த. கடம்பு - கடப்ப மரம்.
13. கடி - காவல். முழுமுதல் - அடிமரம். ஏஎய் - ஏவி.

14. வென்று - வஞ்சியாது எதிர் நின்று கொன்று. முழங்கு பணை - ஒலிக்கும் முரசு; வினைத்தொகை.

15. நார் அரி நறவின் - பன்னாடையால் அரிக்கப்படுகின்ற கள்ளையுடைய. ஆரம் - சந்தனம்; முத்துமாலையுமாம்.

16. போர் - அறப்போர். தானை - சேனை.

17. பைந்தார் - பசுமையான மாலை; பண்புத் தொகை. ஓடை - நெற்றிப்பட்டம்.

18. வலன் - வெற்றி. மருப்பு - கொம்பு. பழிதீர் - குற்றமில்லாத.

19. பொலம் - பொன்; ஈண்டு பொன்னரிமாலை. எருத்தம் - பிடரி.

20. கண்டிகும் - கண்டோம்.

21. கவிர் - முள்ளு முருங்கை. ததை - செறிந்த. சிலம்பு - மலை. துஞ்சும் - உறங்கும். கவரி - கவரிமான்கள்.

22. நரந்தம் - நரந்தப்புல். கனவும் - கனவிற் கண்டு மகிழும்.

23. துவன்றிய - நிறைந்த. பேரிசை - பெரும்புகழ்; பண்புத் தொகை.

24. ஆயிடை - இடைப்பட்ட.

25. மன்மீக்கூறுநர் - அரசர்களுள் உயர்த்துக் கூறப்படுபவர்களுடைய. தப - கெட. கடந்து - வென்று.

## 2. மறம் வீங்கு பல்புகழ்

1. வயவர் - வீரர். வாளரின் மயக்கி - வாட்போரைச் செய்து.

2. கடும்பு - சுற்றம். அரசு - பகையரசர்கள். பனிப்ப - நடுங்க.

3. கடம்பு - காவல் மரமாகிய கடப்ப மரம். முதல் தடிந்த - அடியோடு வெட்டியழித்த.

4. தார் - பிடரிமயிர். எருத்து - கழுத்து. வாரல் - நீட்சி. வள் - கூரிய. உகிர் - நகங்கள்.

5. அரிமான் - சிங்கம். வழங்கும் - உலாவும். சாரல் - மலைச்சரிவு. பிறமான் - யானை முதலிய பிற விலங்குகள்.

6. தோடு - தொகுதி. இனநிரை - கூட்டம்.

7. அதிர்ந்தாங்கு - நடுக்குற்று ஒடுங்கியதுபோல.

8. நெடுநகர் - பகைவருடைய பெரிய நகரங்கள். துயிலீயாது - துயிலாது.

9. மாதிரம் - திசை. பனிக்கும் - நடுங்கச் செய்யும். மறம் வீங்கு பல்புகழ் - வீரத்தின் மிகுதியால் வந்த பல புகழ். கேட்டொறும் - கேட்குந்தோறும்.

10. காண்டல் - காணுகின்ற. கமழும் - மணம் வீசும். குளவி - காட்டு மல்லிகை.

11. வாடா - உதிராத. ஆடுநடை - அசைந்த நடை.

12. அண்ணல் - பெருமை பொருந்திய. மழகளிறு - இளைய ஆண் யானை. அரிஞிமிறு - கோடுகளையுடைய வண்டுகள் ஒப்பும் - ஓட்டும்.

13. கன்றுபுணர் - கன்றோடு கூடிய. பிடி - பெண் யானை. நீந்தி - கடந்து.

14. இறுத்த - தங்கிய இரும்பேரொக்கல் - கரிய பெரிய சுற்றம்.

15. உழந்த - வருந்திய. பழங்கண் - துன்பம். வீழ - கெட.

16. எஃகு - இங்கே அரிவாள். போழ்ந்து - பிளந்து. வால் - வெண்மை. நிணம் - ஊன். கொழுங்குறை - வளமான இறைச்சி.

17. மையூண் - ஆட்டிறைச்சி. வெண்ணெல், வெண்சோறு : பண்புத் தொகைகள்.

18. நனையமை - மலரம்பு பெய்து பக்குவஞ் செய்யப்பட்ட. கள்ளின் தேறல் - கட்தெளிவு. மாந்தி - உண்டு.

19. நீர்ப்படு - மழையால் நனைந்த.

20. நிலந்தின் சிதாஅர் - மண் படிந்து மாசேறிய கந்தையாகிய உடை.

21. நூலாக் கலிங்கம் – நூற்கப்படாத நூலாலியன்ற ஆடை; பட்டாடை. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வால் அரைக் கொளீஇ – வெள்ளிய இடுப்பில் உடுத்திக் கொண்டு.

22. வணர் – வளைந்த இரு – கரிய. கதுப்பு – கூந்தல். வாங்கு – வளைந்த. அமை – மூங்கில் போலும்.

23. வசையில் – குற்றமில்லாத. வயங்கிழை – விளங்குகின்ற அணிகள்.

24. அமர்பு – மனம் பொருந்தி. மெய் ஆர்த்த சுற்றம் – உண்மையைத் தம்மிடத்தே கட்டிய மந்திரி முதலிய சுற்றத்தார்.

25. நுகர்தற்கு – கலந்து மகிழ்தற்கு. பெருங்கலி மகிழ்வு – பெரிய திருவோலக்க இன்பம்.

## 3. பூத்த நெய்தல்

1. தொறுத்த வயல் – ஆட்டுக்கிடை கட்டிய வயல்கள். ஆரல் – ஆரல் மீன்கள். பிறழ்ந – உகள; பிறழ்ந்து விளையாட.

2. ஏறு – பன்றிகள். பொருத – மருப்புக்களாற் கிண்டிப் புழுதியாக்கிய. செறு – வயல். வித்துநவும் – விதை விதைக்கவும்.

3. நெய்தல் – நெய்தற்பூ.

4. இருங்கண் – பெரிய கண்கள். நிரை – கூட்டம். தடுக்குநவும் – பிறவிடத்திற்கு மேய்ச்சல் வேண்டிச் செல்லாவாறு தடுக்கும்.

5. கலிகெழு – ஒலிமிக்க. துணங்கை – மகளிர் கைபிணைந்து ஆடும் ஒரு வகைக் கூத்து. ('மகளிர் தழீஇய துணங்கை யானும்' என்ற குறுந்தொகைப் பாடலை (31) நோக்குக.)

6. மூதா – முதிய பசுக்கள். ஆம்பல் – ஆம்பற் பூ. ஆர்நவும் – மேயும். பிறழ்ந, வித்துந, தடுக்குந, ஆர்ந – வினையாலணையும் பெயர்கள்.

7. ஒலி - தழைத்த. தெங்கு - தென்னை. இமிழ் மருது - கிளி முதலிய பறவைகள் ஒலிக்கின்ற மருதமரம்.

8. புனல்வாயில் - கால் வாய்கள்.

9. பாடல் சான்ற - புலவர் பாடும் புகழ் பெற்ற. பயங்கெழு - செல்வம் பொருந்திய. வைப்பு - ஊர்கள்.

10. கவினழிய - அழகு கெட. நாமம் - அச்சம். தோற்றி - உண்டாக்குவித்து.

11. கூற்று - கூற்றுவன்; இயமன். அடுதல் - அழித்தல்.

12. சிவந்து - கோபித்து. இறுத்த - தங்கி முற்றுகையிட்ட தனல். நீரழிபாக்கம் - தம் நீர்மையழிந்த பேரூர்கள்.

13. புல்லென - பொலிவழிய.

14. திரிகாய் - முறுக்கியது போலும் காயையுடைய. விடத்தர் - விடத்தேரை என்னும் ஒரு வகை முள் மரம். கார் - கருமை. உடை - உடை என்னும் ஒரு வகை முள் மரம்.

15. கவைத்தலை - கவைத்த தலை. கழுது - பேய். இயங்க - செல்ல.

16. ஊரிய - பரந்த. நெருஞ்சி - நெருஞ்சி முள். நீறு - புழுதி. ஆடு - பரந்த. பறந்தலை - பாழ்பட்ட இடம்.

17. தாதெரு - தாதாகிய எரு. மறுத்த - ஒழிந்த. கலியழி - ஆரவாரம் அழிந்த. மன்றம் - பொதுவிடம்.

18. உள்ளம் - மனவெழுச்சி. ஊக்குநர் - செல்லக் கருதுவோர். மிடல் தபு - வலியை அழித்து.

19. உள்ளுநர் - கருதிச் செல்வோர். பனிக்கும் - நடுங்கும்.

20. காடு - பெருங்காடு. கடவுள் - ஈண்டு முனிவர். மேன - விரும்பப்பட்டன. புறவு - சிறு காடு.

21. மள்ளர் - வீரர்.

22. ஆறு - (காடும் புறவுமல்லாத) பெரு வழி. ஞாலம் - உலகம்.

23. கூலம் - நெல் முதலிய எண் வகை உணவுப் பண்டங்கள். பகர்நர் - விற்கும் வணிகர். புறந்தராஅ - பாதுகாத்து.

24. குடிபுறந்தருநர் – ஈண்டு வேளாளர். பாரம் – குடும்பம், சுற்றம் முதலியன.

25. அழல் – செவ்வாய். வெள்ளி – சுக்கிரன். ஓடாது – செல்லாது. செவ்வாயும் வெள்ளியும் சேர்ந்தால் மழை பெய்யாதென்பர் வான நூற் கூறு உணர்ந்தோர்.

26. புலம் – நிலம். மாரி நிற்ப – மழை பொழிய.

27. நோயொடு பசியிகந்து ஒரீஇ – நோயும் பசியும் இல்லையாக நீங்கி.

28. பூத்தன்று – பொலிவு பெற்றது. பெரும – பெருமானே! விளி.

## 4. சான்றோர் மெய்ம்மறை

1. வளி – காற்று. விசும்பு – ஆகாயம்.

2. அளப்பரியை – அளந்து காண இயலாத அருமையுடையாய். நிலத்தின் பரப்பும் நீரின் ஆழமும் வளியின் செலவும் விசும்பின் ஒக்கமும் அளப்பரியனவாதலின், அவற்றை உவமை கூறினர்; பல்வகைப் பெருமைக்கு அவற்றை உவமை கூறுதல் மரபு. "இருமுந்நீர்க் குட்டமும், வியன் ஞாலத் தகலமும், வளிவழங்கு திசையும், வறிது நிலைஇய காயமும், என்றாங், கவையளந் தறியினு மளத்தற் கரியை" (புறநானூறு. 20 : 1–5). பகைவர் பிழை செய்தலைப் பொறுத்தலில் நிலத்தைப் போன்றும், சதுரங்க வலியிலும் மனவலியிலும் வளியைப் போன்றும், ஆராய்ச்சியின் விரிவில் விசும்பைப் போன்றும் அவ்வத் தன்மையின்கண் அளத்தற்கு அரியையென உவமையைப் பொருத்திக்கொள்க. (புறநானூறு. 2 : 1–8, உரை)

3. நாள் – நாண்மீன்கள் (நட்சத்திரங்கள்) கோள் – கோள்கள். கனையழல் – மிக்க நெருப்பு.

4. ஒருங்கு புணர்ந்த – ஒன்றாகச் சேர்ந்த. விளக்கம் – ஒளி.

5. தலை மிகுந்த – மிக்க மேம்பாடுற்ற. ஈரைம்பதின்மர் – நூற்றுவர்: துரியோதனன் முதலிய கௌரவர் நூற்றுவர். இது தொகைக் குறிப்புப் பெயர்.

6. துப்பு – துணைவலி. துறை – நெறி, வழி. துணிவு – அஞ்சாமை.

7. அக்குரன் – "பாரதத்தில் கூறப்படுபவனும், தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய அக்குரன் போலும்; கர்ண னென்று நினைத்தற்கும் இடமுண்டு; ஆதாரம் கிடைக்க வில்லை" என்பர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர். வண்மை – வள்ளன்மை; கொடை.

8. கடந்து – வஞ்சியாது எதிர் நின்று. தும்பை – அதிரப் பொருவோர் சூடும் பூ.

9. பீடு – பெருமை. செரு புகல் முன்ப – போரை விரும்பு கின்ற வலியையுடையோய்.

10. வெகுண்டு – சினந்து. மாற்றும் – பிறக்கிட்டோடச் செய்யும்.

11. எழுமுடி கெழூஇய-பகையரசர் எழுவரது முடிப்பொன்னாற் செய்யப்பட்ட ஆரமணிந்த. திரு – திருமகள். ஞெமர் – பரந்த. அகலம் – மார்பு.

12. நோன்புரி – வன்மை பொருந்திய. தடக்கை – உரிச்சொற்றொடர். சான்றோர் – ஈண்டு வீரர்கள். மெய்ம்மறை – கவசம்.

13. நலன் – அழகு. இகல் – மாறுபாடு.

14. வயங்கு – விளங்குகின்ற. இழை – தலையில் அணிந்து கொள்ளும் அணிவகைகள். கரந்த – மறைப்புண்ட. படு – மொய்க்கும். கதுப்பு – கூந்தல்.

15. ஒடுங்கு – ஒடுங்கிய. ஈரோதி – மண்ணுதலால் (குளித்தலால்) நெய்ப்புற்ற கூந்தல். கொடுங் குழை – வளைந்த குழையணிந்த சேரனின் தேவி; பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

16. தொழுதி – கூட்டம். வெல்கொடி – வெல்லுகின்ற கொடி; வினைத்தொகை. நுடங்கும் – அசையும்.

17. படையை ஏராகக் கொண்டு பகைவர் படையாகிய புலத்தை யுழுகின்ற உழவன். பாடினி – பாண் மகள்.

18. இலங்கு – விளங்கும். மிடைந்த – செறிந்த. பொலங்கலம் – பொன்னாற் செய்யப்பட்ட அணிகலன்கள். திகிரி – அரசியல் ஆணையைச் செலுத்தி.

19. கடலக வரைப்பு – கடல் சூழ்ந்த நிலவுலகத்தே. பொழில் – நாவலந்தீவு ; தமிழகம்.

20. முன்திணை முதல்வர் – குலத்து முன்னோர்.

21. கொடஅ – அழியாத நல்லிசை – நல்ல புகழ். நிலைஇ – நிறுவி.

22. தவா அலியர் – கெடாமல் இருப்பாயாக.

# 4. திருக்குறள்

## 1. தெரிந்து செயல் வகை

அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந் திறம். வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்வதே தெரிந்து செயல் வகை என்பர் மணக்குடவரும், பரிப்பெரு மாளும்.

### செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறும்

1. அழிவதூஉம் - வினை செய்யுங்காலத்து அழிவதனை யும். ஆவதூஉம் - அழிந்தால் பின் ஆவதனையும். சூழ்ந்து - சீர்தூக்கிப் பார்த்து. அழிவதூஉம், ஆவதூஉம்; இன்னிசை யளபெடைகள்.

2. தேர்ந்து - செய்யத்தகும் வினையை ஆராய்ந்து. அரும்பொருள் - (எய்துதற்கு) அரிய பொருள்; பண்புத் தொகை.

3. ஆக்கம் கருதி - ஊதியத்தினை நோக்கி. ஊக்கார் - மேற்கொள்ளார். 'கருதி' என்னும் வினையெச்சம் 'இழக்கும்' என்னும் பெயரெச்ச வினை கொண்டது. எச்சவும்மை விகா ரத்தால் தொக்கது.

4. தெளிவிலதனை-ஆராய்ந்து துணிதலில்லாத. இளிவு- இளிவரவு, தாழ்ச்சி. 'இளிவரவு - அவ்வினையால் பின் அழிவு எய்திய வழி அதன்மேலும் அறிவும் மானமும் இலர் என்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி.' ஏதப்பாடு - குற்றம்.

5. வகையற - முற்றவும். சூழாது - ஆராயாது. எழுதல் - பகைவர்மேற் செல்லுதல். பாத்திப்படுப்பது - வளரு நிலத் திலே நிலைபெறச் செய்வது. ஓர் ஆறு - ஒரு வழி.

6. செய்தக்க - செய்யத்தக்கன. செயக்கெடும் - செய்த லால் கெடும். 'செய்யத்தக்கன அல்லவாவன : பெரிய முயற்சி

யினவும், செய்தால் பயனில்லனவும், அது சிறிதாயினவும், பின் துயர் விளைப்பனவும் என இவை' என்பர் பரிமேலழகர்.

செய்வனவற்றிற்கு உபாயமும் அதன் உரிமையும்

7. இழுக்கு - குற்றம்.

செய்யத் தகுந்த செயலையும் முடிக்கும் உபாயத்தையும் எண்ணித் தொடங்குக. அவ்வாறு துணிந்தபின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

8. வருந்தா வருத்தம் - முயலாத முயற்சி. வருந்தா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். போற்றினும் - குற்றம் வராமல் காத்தலும். பொத்துப்படும் - குற்றப்படும்.

9. தவறு - குற்றம். அவருள்ளும் - உம்மை சிறப்பும்மை.

10. எள்ளாத - இகழாத. கொள்ளாத - பொருந்தாத. உலகு - இடவாகுபெயர்.

## 2. வலியறிதல்

அரசன் தன் நால்வகை வலியையும் அளந்து அறிதல். "வலியறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல்" என்பர் மணக்குடவரும், பரிப்பெருமாளும்.

வலியின் பகுதியும் அதனை அறிந்து மேற்செல்வார் எய்தும் பயனும்

1. மாற்றான் பகைவன். தூக்கி - சீர் தூக்கி.

"தான் செய்யக்கருதிய வினைவலியையும், அதனைச் செய்து முடிக்கும் தன் வலியையும், அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும், இருவர்க்கும் துணையாவார் வலியையும், சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க" என்னும் பரிமேலழகர் உரை சிறந்த விளக்கந் தருதல் காண்க.

2. ஒல்வது - இயல்வது. செல்லாதது - முடியாதது. இல் - இல்லை. "தமக்கு இயலும் வினையையும் அதற்கு அறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து, எப்பொழுதும் மன மொழி மெய்களை அதன்கண் வைத்துப் பகைமேற் செல்லும் அரசர்க்கு முடியாத பொருள் இல்லை" என்பர் பரிமேலழகர்.

தன்வழி அறியாவழிப்படும் இழுக்கு

3. ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சி மிக்கு. இடைக் கண் - இடையே. முரிந்தார் - கெட்டவர்.

4. ஆங்கு - அயல் வேந்தரொடு. அமைந்து - பொருந்தி. அளவு - வலிமையின் அளவு.

5. பீலி - மயிற்றோகை. பெய் - ஏற்றிய. சாகாடு-வண்டி. அச்சிறும் - அச்சு முறியும். சால - மிகுதியாக (பொறுக்கும் அளவின்றி மிகுத்து)

6. அஃதிறந்து - அவ்வளவினைக் கடந்து. ஊக்கின் - சென்றால். 'நுனிக்கொம்பர்' என்பது கடைக்கண் என்பது போலப் பின் முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை.

7. ஆற்றின் அளவு - தமக்குள்ள பொருளின் எல்லை. போற்றி வழங்கும் - பேணிக்கொண்டு ஒழுகும். 'வருவாய் அளவறிந்து கொடுக்க' என்பர் பரிப்பெருமாள்.

8. ஆகாறு - பொருள் வருகின்ற நெறி. அளவு இட்டிது - அளவு சிறிது. போகாறு - செலவழிகின்ற நெறி.

'முதலுக்குத் தக்க செலவு செய்யவேண்டும்' என்று மணக்குடவரும், 'முதலுக்குச் செலவு குறையவேண்டும்' என்று பரிப்பெருமாளும் உரைப்பர்.

9. அளவு - பொருளின் எல்லை. உளபோல - உள்ளன போல. 'அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது, அதனில் சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல்' என்பர் பரிமேலழகர்.

10. ஒப்புரவாண்மை - பிறரைப் பரிகரிக்கும் திறன். வல்லை - விரைவாக.

தனக்குப் பொருள் உள்ள அளவை ஆராயாமல் மேற் கொள்ளும் ஒப்புரவினால், ஒருவனுடைய பொருளின் அளவு விரைவில் கெடும்.

## 3. காலமறிதல்

வலியான் மிகுதியுற்றுப் பகைவர்மேற் செல்லும் அரசன் அச் செலவிற்கேற்ற காலத்தினை அறிதல்.

1. கூகை - கோட்டான். இகல் - பகைமை. பொழுது - ஏற்ற காலம்.

காலம் அறிதற் பயன்

2. பருவத்தோடு - தனக்காகும் காலத்தோடு. ஒட்ட - பொருந்த. திரு - செல்வம். தீராமை - நீங்காமை. ஆர்க்கும் - பிணிக்கும்.

'திரு' என்பதற்கு ஒருவர்கண்ணும் நில்லாது நீங்கும் 'செல்வத்தை' என்று பரிமேலழகர் நயவுரை கண்டுள்ளமை காண்க.

3. அருவினை - அரிய வினை. கருவி - செயலை முடித்தற்கு ஏற்ற கருவி. காலம் - செய்தற்கு ஏற்ற காலம்.

4. ஞாலம் - உலகம். கருதினும் - தானே ஆளக் கருதினாலும். கைகூடும் - கையகத்ததாம்.

காலம் வாராவழிச் செய்வது

5. கலங்காது - தப்பாது. 'தப்பாமை - கருதிய வழியே கொள்ளுதல்' என்பர் பரிமேலழகர்.

6. ஊக்கம் - வலிமிகுதி. ஒடுக்கம் - இருப்பு. பொருதகர் - பொருகின்ற ஆட்டுக்கடா; வினைத்தொகை. தாக்கற்கு - பாய்தற்கு. பெருந்தகைக்கு - கால்வாங்கும் தன்மைத்து.

ஊக்கம் மிகுந்தவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருத்தல், போர்செய்யும் ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்காகப் பின்னே கால்வாங்குதலைப் போன்றது.

7. பொள்ளென - (பகைவர் மிகைசெய்த) அப்பொழுதே. புறம் - வெளியே. வேரார் - கோபிக்க மாட்டார்கள். வேர்ப்பர் - வெகுள்வர். ஒள்ளியவர் - அறிவுடையர்.

8. செருநர் - பகைவர். சுமக்க - பணிக. இறுவரை - பகைவரை வெல்லக் கருதும் காலம் வரும் வரை. தலை கிழக்காம் - தகைவின்றி இறுவர்.

'தலைமேற் கொண்டதொரு பொருளைத் தள்ளுங்கால் அது தன் தலைகீழாக விழுமாதலின்' எனும் பரிமேலழகர் விளக்கம் உய்த்துணரத்தக்கது.

காலம் வந்தவிடத்து விரைந்து செய்க

9. இயைந்தக்கால் - பொருந்தியபோது.

"ஆற்றல் முதலியவற்றால் செய்துகொள்ளப் படாமையின், 'எய்தற்கு அரியது' என்றும், அதுதானே வந்து இயைதல் அரிதாகலின், 'இயைந்தக்கால்' என்றும், இயைந்தவழிப் பின்நில்லாது ஓடுதலின் 'அந்நிலையே' என்றும், அது பெருவழிச் செய்யப்படாமையின் 'செய்தற்கரிய' என்றும் கூறினார்." (பரிமேலழகர்)

காலம் வருமளவும் காத்திருக்க

10. ஒக்க - போல இருக்க. கூம்பும் பருவத்து - வினைமேற் செல்லாதிருக்கும் காலத்து. குத்தொக்க - தப்பாமற் செய்க. சீர்த்த இடத்து - வாய்த்தவழி.

"மீன் கோடற்கு இருக்கும் வழி அது வந்து எய்துந் துணையும் முன் அறிந்து தப்பாமைப் பொருட்டு உயிரில்லது போன்று இருக்குமாகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும், இருப்பிற்கும் செயவிற்கும் கொக்கு உவமையாயிற்று" என்னும் பரிமேலழகரின் விளக்கத்திற் பொதிந்துள்ள நயம் காண்க.

இச்செய்யுளில் உவமையணி அமைந்துள்ளது.

## 4. இடனறிதல்

வலியும் காலமும் அறிந்து பகைவர்மேற் செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல்.

பகைவர் அரணின் புறத்திருப்பார் அதற்காம் இடனறிதல்

1. முற்றும் - முற்றுகை செய்வதற்கு. எள்ளற்க - இகழாதொழிக.

"முற்றுதல் - வளைத்தல். அதற்கு ஆம் இடமாவது வாயில்களானும் நூழைகளானும் அவர் புகலொடு போக்கொழியும் வகை அரணினைச் சூழ்ந்து ஒன்றற்கு ஒன்று துணையாய்த் தம்முள் நலிவில்லாத பலபடையிருப்பிற்கும், மதிலும் அகலும் முதலிய அரண் செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடக்கையும் நீரும் உடையது" என்பர் பரிமேலழகர்.

2. முரண் - மாறுபாடு. மொய்ம்பு - வலிமை. பலவும் - பல பயன்களையும். பலவும் - உம்மை சிறப்பும்மை.

3. ஆற்றுரும் - வலியரல்லார். அடுப - வெல்லுப. போற்றுர் - பகைவர்.

4. துன்னியார் - நெருங்கிச் சென்ற அரசர். துன்னி - (அரணைப்) பொருந்தி நின்று.

வினைசெய்தற்காம் இடனறிதல்

5. நெடும்புனல் - ஆழமுடைய நீர்.

எல்லாரும் தம்நிலத்து வலியர். இச்செய்யுளில் பிறிது மொழிதல் அணி அமைந்துள்ளது.

6. கால்வல் - கால் வலிய. நாவாய் - படகு. பிறிதுமொழிதல் அணி.

7. எஞ்சாமை - ஒழியாமை. அஞ்சாமை - பயப்படாத திண்மை.

8. செல்லிடம் - புகலிடம். உறுபடையான் - பெரும் படையுடைய அரசன். ஊக்கம் - பெருமை.

9. சிறுநலன் - அரண் அழித்தற்கு அருமை. சீர் - பெருமை. ஒட்டல் - தாக்குதல். 'நிலத்தொடு' என்பது வேற்றுமை மயக்கம். "ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கண் சென்று தாக்கின் அவர் அதுவிட்டுப் போதல் துணிவினரன்றிச் சாதல் துணிவினராவர்; ஆகவே அவர்க்குப் பெரும்படை உடையும் என்பதாம்" (பரிமேலழகர்).

10. காலாழ் - கால் புதையும். களரின் - சேற்று நிலத்தில். வேலாள் - வேல் ஏந்திய வீரர். முகத்த - கோத்தெடுத்த கொம்புகளையுடைய (களிறு).

## 5. தெரிந்து தெளிதல்

அமைச்சர் முதலாயினரைப் பலவகையானும் ஆராய்ந்து தெளிதல்.

குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையாரைத் தெளிக

1. உயிரெச்சம் - உயிர்க்காக அஞ்சும் அச்சம்.

2. குடி - உயர்குடி. வடுப்பரியும் - குற்றத்திற்கு அஞ்சும். "நாண் - இழிதொழில்களில் மனம் செல்லாமை" (பரிமேலழகர்).

3. அரிய கற்று - கற்றற்கு அரிய நூல்களைக் கற்று. ஆசு - குற்றம். தெரியுங்கால் - ஆராயுமிடத்து. வெளிறு - அறியாமை.

4. நாடி - ஆராய்ந்து.

"குணமே உடையார் உலகத்து அரியராகலின், இவ்வகை யாவரையும் தெளிக என்பது இதனால் கூறப்பட்டது." (பரிமேலழகர்).

5. கட்டளைக்கல் - உரைகல். இப்பாட்டில் ஏகதேச உருவக அணி அமைந்துள்ளது.

"மக்களது பெருமையும் சிறுமையும் தப்பாமல் அறியலுறுவார்க்குப் பிற கருவிகளும் உளவாயினும், முடிந்த கருவி செயல் என்பது தேற்றேகாரத்தால் பெற்றும்" என்பர் பரிமேலழகர்.

தெளியப்படாதார் இவர் என்பதும், அவரைத் தெளிந்தாற்படும் இழுக்கும், தெளிவிற்கு எல்லையும்

6. அற்றார் - சுற்றமில்லாதார். தேறுதல் ஓம்புக - தெளிதல் ஒழிக.

"உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலக நடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின் அவர் தெளியப்படார் என்பதாம்" (பரிமேலழகர்).

7. காதன்மை - அன்புடைமை. கந்தா - பற்றுக்கோடாக. தேறுதல் - தெளிதல். பேதைமை - அறியாமை.

8. தேரான் - ஆராயாமல். வழிமுறை - பின்சந்ததியினர். தீரா - நீங்காத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இடும்பை - துன்பம்.

9. தேராது - ஆராயாது. தேறும் பொருள் - தெளியும் பொருள்.

10. ஐயுறவு - ஐயப்படுதல்.

"வினை வைத்தபின் ஒரு தவறு காணாது வைத்து ஐயுறுமாயின், அதனை அவன் அறிந்து 'இனி இது நில்லாது' என்னும் கருத்தான் அவ்வினையை நெகிழ்த்துவிடும்; அதுவேயன்றிப் பகைவரால் எளிதில் பிரிக்கவும்படும்; ஆதலான் தெளிந்தான்கண் ஐயுறவும் ஆகாதாயிற்று" என்பர் பரிமேலழகர்.

---

## 5. சிலப்பதிகாரம்

1. அரும்பெறற்பாவை - கண்ணகி.
2. உவகை - மகிழ்ச்சி.
3. அளை - மோர்.
4. மிளை - கட்டுவேலி.
5. பூவல் - செம்மண்.
8. நறுமலர்க்கோதை - கண்ணகி.
9. கூடன் மகளிர் என்றாள், தானறியுமூர் அதுவாகலின்.
10. ஆடகம் பொன்; நால்வகைப்பொன்னுள் ஒன்று என்றுமாம்.
11. செய்யாக்கோலம் - பிறவியழகு.
14. நங்கை - நங்காய் (அண்மை விளி)
15. மாதவத்தாட்டி - கவுந்தியடிகள்.
16. ஏதம் - தீங்கு. இடந்தலைப்படுத்துதல் - கூட்டுதல்.
17. நும்மகனார்க்கு - நும்கணவனார்க்கு (கோவலனுக்கு).
18. சாவகநோன்பு - துறவாது விரதங்காத்தல். அடிகள் என்றது கோவலனை.
19. நாத்தூண் நங்கை - நங்கை நாத்தூண் (மாதரி மகள் ஐயை).
20. அடிசில் - உணவு. நற்கலம் - புதுக்கலம். அமைந்த நற்கலங்கள் - மேன்மக்கள் ஆளும் மடைக்கலங்கள்.
21. நெடித்தல் - (காலம்) நீட்டித்தல்.
23. மடைக்கலம் - ஆக்குங் கலம்.
24. கோளிப்பாகல் - பூவாது காய்க்கும் பலா. பூவாது காய்க்கும் மரங்கட்கெல்லாம் கோளி என்பது பொதுப் பெயர்.

25. வாள்வரிக் கொடுங்காய் - வெள்ளரிக்காய்.

26. சாலி - செந்நெல்.

30. குயம் - அரிவாள். விடுவாய் செய்தல் - அரிதல்.

32. அட்டில் - அடுக்களை (சமையலறை). பெயர - புகை கண்டறியாதபடியாலே திரும்ப.

33. வை - வைக்கோல்.

35. தாலம் - பனை.

"புறக்கா ழனவே புல்லென மொழிப." (மரபியல், 85) என்றார் தொல்காப்பியனாராதலின், தாலம் புல்லெனப் பட்டது.

37. தவிசு - தடுக்கு.

39. சுடுமண் மண்டை - புதுமட்கலம். மண்டை - மொந்தை.

42. குமரிவாழை - ஈனு வாழை.

44. அரசர் பின்னோர் - வணிகர். அருமறை - ஓதவும் உணரவும் அரிய மறை.

45. உரியவெல்லாம் - வாய்ப்பூச்சு பலியிடுதல் முதலிய எல்லாம்.

47. பூவை - காயா. பூவைப் புதுமலர் வண்ணன் - கண்ணன்.

50. தொழுனை - காளிந்தி; யமுனை ஆறு.

51. விழுமந்தீர்த்த விளக்கு என்றது பின்னையை.

52. தவ்வை - தாய். விம்மிதம் - வியப்பு.

55. திரையல் - வெற்றிலைச்சுருள். அடைக்காய் - பாக்கு.

56. மையீரோதி - கரிய பெரிய கூந்தலையுடையாள் (கண்ணகி). ஈர் - குளிர்ந்த என்றுமாம்.

57. கல் அதர் - பருக்கைக்கல் பொருந்திய சிறு வழி. அத்தம் - வெங்கானம், பாலை.

59. சுரம் - பாலை.

60. முதுகுரவர் - பெற்றோர்.

63. வறுமொழி - பயனில்சொல். வம்ப - புதிய. பரத்தர் - காமுகர்.

64. குறுமொழி - சிறுசொல். குறுமொழிக் கோட்டி - பிறரை இகழ்ந்து கூறுதல். நெடுநகைபுக்கு - வெடிச் சிரிப்புக்குட்பட்டு.

65. பொச்சாப்புண்டு - மறதியிற் பொருந்தி. பொச் சாத்தல் - மறத்தல். பொருளுரையாளர் - மெய் யுரைக்கும் சான்றோர்.

66. நச்சு – நச்சப்படும் ஒழுக்கம் நச்சுதல் - விரும்புதல்.

67. இருமுதுகுரவர் - தாய்தந்தையர். ஏவல் பிழைத்தல் - மாதவி நட்பை விலக்கியும் விடாமை.

68. சிறுமுதுக்குறைவி - சிறிய பருவத்தே பெரிய அறிவை யுடையாள்.

69. வழு - பழிப்புரை. எனும் - சிறிதும்.

70. அறவோர் - துறவாது விரதங்காத்தோர் (சாவக நோன்பிகள்).

74. பெருமகள் - கோவலன் தாய். பெயர் - புகழ். தலைத் தாள் - தலைமையுடைய முயற்சி.

75. மன் - மன்னரால் (அடைந்த). மாநிதிக் கிழவன் - கோவலன் தந்தை.

76. முந்தை நில்லா முனிவிகந்தனளு - நீர் என் முன்பு நில்லாமையான் வந்த வெறுப்பை மறைத்தொழுகி னேனாக (கண்ணகி கூற்று).

77. அளைஇ - அளவி, கலந்து.

79. நொடித்தல் - சொல்லுதல்.

80. வாய்அல் - பொய்யான. முறுவல் - நகை, புன்னகை.

85. ஆயம் - சேவிக்கும் தோழிமார்.

86. நல்லோர் ஏத்து - நல்லோரால் புகழப்படும் தன்மை; மகளிரால் புகழப்படும் அழகு என்றுமாம்.

93. மாறி - விற்று. இச்சொல் அறியாது சொன்ன அமங்கல மொழியாயுமிருத்தல் காண்க.

95. உழையோர் - பாங்கோர், துணையோர், ஏவலர்.

97. பனி - கண்ணீர்.

99. வல்லா நடை - மாட்டா நடை.

100. இமில் - முரிபு. இமிலேறு எதிர்தல் இடையர் அறியும் தீக்குறி.

102. தாதெரு மன்றம் - எருபொடியாய்க் கிடக்கும் மந்தை.

103. மாதர் வீதி - தளிப்பெண்டுகள் தெரு.

105. கண்ணுள் வினைஞர் - சித்திரகாரிகள், உருக்குத் தட்டார்.

107. மெய்ப்பை - சட்டை. விலங்கு நடைச்செலவு - உயர்ந்தோர் வந்தவிடமெங்கும் ஒதுங்கி நடத்தல்.

116. பொதிவாய் - கட்டினவாய்.

117. மத்தகமணி - தலையான மணி, சூடிகை மணி; சிலம்பின் மத்தகத்தின் மணி எனினுமாம்.

118. பத்தி - வரிசை. கேவணம் - கல்லழுத்துங்குழி. குடை - புடைபட்டு. சூல் - உட்கருவையுடைய.

120. உடனோக்கி - தான் திருடின சிலம்போடு ஒக்கும் படியைப்பார்த்து.

122. யாப்புறவு - தகுதி, பொருத்தம்.

126. தேவகோட்டம் - கோயில்.

127. கரந்து - திருடி, மறைவாய்க் கவர்ந்து.

129. புலம்பெயர் - நாடுவிட்டு நாடு வந்த. புதுவன் - புதியவன்.

134. ஊடல் - மனைவி கோபித்தல்.

138. சிலதியர் - ஏவன் மகளிர், தோழிமார்.

142. கன்னகம் - கன்னக்கோல். கவைக்கோல் - படைக்கல் செங்கல் முதலியவற்றைப் பறிக்கும் குறட்டுக்கோல்.

143. மந்திரம் - துயில் மந்திரம். துயில் - தூக்கம்.

146. கல்என் - ஆரவாரத்தையுடைய. காவலர் - ஊர் காப்பாளர்.

147. சில்லை - இழிவு.

149. சினை - கிளை; அரும்பு என்றுமாம். வேம்பன் - பாண்டியன்.

152. கன்றிய - அடிப்பட்ட.

154. கருந்தொழில் - கொலைத்தொழில்.

155. ஏவலுள்ளம் - ஏவப்பட்டவுள்ளம்.

156. முதிர்தல் - சூழ்தல், முற்றுதல்.

162. இலக்கண முறைமையின் - உடன் கூற்றானும் இருந்த முறையானும் (உம்மைத்தொகை).

164. அகநகைத்து - இகழ்ச்சியாக நகைத்து.

165. காட்டினன் - ஏதுக்களைக் காட்டி.

169. கட்டு - களவு செய்து.

171. நவை - தண்டனை. பட்டீர் என இறந்த காலத்திற் கூறியது தேற்றம் பற்றி.

172. இந்திரகுமரர் - தேவர்.

180. தந்திரகரணம் - களவுநூலிற் சொல்லிய தொழில்கள்.

183. காண்கிற்பார் - காணவல்லார்.

189. கரவிடம் - களவின் பகுதி; புகலிடம் - ஒளிக்கும் இடம்; சொல்லின் முடிவு என்றுமாம்.

192. துளக்கிலன் - நடுக்கமின்றி, அசையாது.

193. இளங்கோவேந்தன் - பாண்டியன் தம்பி. துளங்கு - விளங்குகின்ற. ஆரம் - முத்துமாலை.

193–4 ஆரம்............வாங்க - வெயிலிடு வயிரத்து ஆரத்தை விரைந்து கவர; ஆரத்தை வயிரத்தொளியே ஒளியாகச் சென்று கவர என்றுமாம்.

199. கல்வி - களவு நூற்கல்வி.

204. அகழ்தல் - தோண்டுதல். தானை - ஆடை.

205. கலன்நசை வேட்கை - அணிகலன்களை விரும்பிய ஆசை.

210. அலைக்கும் - தண்டிக்கும்.

213. வெள்வாள் - ஒளியுள்ள வாள்; பகைவரை வெட்டிக் குருதிக்கறை படியாத வாள் என்றுமாம். விலங்கு - குறுக்காக

214. குருதி - இரத்தம்.

217. ஊழ் - விதி. உருத்து - கோபித்து.

## 6. சீவக சிந்தாமணி

1. முருகு - வாசனை. கண்ணி - தலையின் மாலை. முறி மிடை - படலை. மாலை - ஒருவகை மாலை. முறி - தளிர். உருவம் - அழகு. சிலையினாற்குத் தம்பி - நந்தட்டன். கழலினார் - தோழர்.

2. மாசு - அழுக்கு. கழுவினீர் - வெளியாக்கினீர். செய்யாள் - திருமகள்.

3. சோர - ஒழுகுப்படி. கண்ணரிந்து - கூடா நட்பினரைத் தன்னிடத்தே இல்லாதபடி நீக்கி. தேற்றம் - தெளிவு. விளிகுற்றார் - அழிந்தார்.

4. வண்ணம் - நிறம். வால் - தூய. சேவல் - சக்கரவாகப் பறவை. எல்லா - தோழனே; பதுமுகன்; விளி. யூகம் - கருங்குரங்கு.

5. அஞ்சனம் - மை. பஞ்சியின் - பஞ்சைக் காட்டிலும்.

6. தெவ்வர் - பகைவர். எறிந்தும் - இடித்தும். மதலை - பற்றுகவுள்ளவன்

7. மடங்கல் - சிங்கம்.

8. நறிய சந்தின் துணி - மணமுள்ள சந்தனக்கட்டை.

9. பூசை - காட்டுப் பூனை. இங்குலிகம் - சாதிலிங்கம்.

10. அண்ணல் - பெருமை. வருடை - மலையாடு.

11. கிலுத்தம் - ஒருவகை மரம். பாந்தள் - பாம்பு. முழை - குகை. உலம்பும் - முழங்கும்.

12. தழைவயின் - தழைக்கு நடுவே. நிரந்த - வரிசையாகவுள்ள. நாவி - புழுகு. ஓசனை - நான்கு காத எல்லை.

13. ஆமான் - காட்டுப் பசு. வெடித்தல் - வீசுதல்.

14. வருக்கை - பலா. திருவில் - இந்திரவில். திரு - அழகு. செகுக்கும் - வெல்லும்.

15. வெயில் போழ்தலின் - வெயில் உருகுதலாலே. மட்டு - தேன். தாழ் - தங்கிய.

16. கோட்டம், குங்குமம் எனபன மரவகைகள். ஏகலாகா - செல்லுதற்கு முடியாத. அல்கி - தங்கி. தோகை - மயில். நாகம் - சுரபுன்னை மரம்.

17. பொன்னூல் - தலையிற் கட்டும் பொற்கயிறு. நீர்பிலிற் றும் காந்தம் - சந்திர காந்தக்கல். பிலிற்றும் - துளிக்கும். கோய் - பரணி. சாத்துறி - பரணிக்கூடு. கன்னல் - கமண்டலம். நீத்தவர் - துறவிகள். நாற்றி - தூக்கி. நிழல்மணியுலகம் - ஒளியுடைய அழகிய தேவருலகம்.

18. பொறி - புள்ளி. முருகனின் - முருகக் கடவுளைப்போல. மா - குதிரை. மத்திகை - குதிரைச்சம்மட்டி. வெறுமை யினவரை - அறிவில்லாதவரை. அடிகள் : விசயை. செவ்வி - சமயம்.

19. எல்லிருள் - விடியற்காலத்திருளிலே. நம்பி : சீவகன் தேவி : விசயை. அடிகள் : விசயை ; விளி.

20. வில் உமிழ்ந்து - ஒளியைச் சிந்தி. கூப்பி - குவித்து. அற்பு முன்னீர் - அன்புக் கடல்.

21. குருசில் - சச்சந்தன். கயத்தியேற்காண - கொடியவ ளாகிய என்னைக் காணுதற்கு. சேடு - பெருமை.

22. கொற்றம் - அரசுரிமை. நடலை - வருத்தம். வைக - தங்க. நைய - வருந்தும்படி.

23. ஒளவை : தாய். அமிர்தம் - இனிமை.

24. குமரன் : நந்தட்டன். புனக்கொடி : விசயை. போற்ருர் - பகைவர்.

25. பார்ப்பு - மயிற்குஞ்சு. புல்லி - தழுவி. சிறுவர் : சீவக னும் நந்தட்டனும். அமிர்தம் - உணவு. அறுபகல் - ஆறு நாட்கள்.

26. குடம்புரை காய்வழை - குடத்தையொத்த காயையுடைய சுரபுன்னைமரம். உருவம் - அழகு. உருவமாதர் : விசயை.

27. நலிவுஇல் - அழித்தற்கரிய. உறை - தங்கிய. புலியனுர் : குறுநில மன்னர். வலியின்மிக்கவர் - முடியுடையரசர். கோடல் - மணம் செய்து கொள்ளுதல். வழக்கு - முறைமை.

28. அறுத்து - அறுதியிட்டு. ஆதியாய - தொன்றுதொட்டு வந்த. பெட்டது - விரும்பப்பட்டது.

29. கற்றமாந்தர் : அமைச்சர். கொற்றம் - அரசுரிமை. குறி - கருத்து.

30. மேதகவு - மேம்பாடு. குன்றினுர்களை - குறைந்தவர்களை. பொன்துஞ்சு - திருத் தங்கும். ஆகம் - பாம்பு.

31. தரணி - பூமி. துன்னுங்காலை - வந்து சேருமளவில். துன்னுதன - அடைய முடியாத பொருள்கள்.

32. கொள்கையம் - கொள்கையை உடையோம். கலைக்கணுளர் - மந்திரிமார். வலித்தது - துணிந்த காரியம். வள்ளல் - சீவகன்.

33. எரி - தீ. சீவகனுக்குச் சிங்கமும் கட்டியங்காரனுக்கு நரியும் உவமைகள். பரிவு - அன்பு. பாம்பு : கட்டியங்காரன். கண்ணி : மாலை.

34. கலுழ - மனமுருகும்படி காதல் - அன்பு. கலிகெழு நிலத்தை - கட்டியங்காரனிடத்துப் பொருந்திய பூமியை. காளை : சீவகன்.

35. மடம் - அறியாமை சூழும் - சூழ்ச்சி செய்யும். கடம் - காடு.

36. இழை - ஆபரணம் பொறை - பாரம். இட்டிடை - சிறுகிய இடை. முழை - குகை. மை - கருமைநிறம். வழை - சுரபுன்னை மரம்.

37. ஒன்னர் - பகைவர். துஞ்ச - இறக்கும்படி. மாழை - பொன். பாழி - வலி. பாணி - தாமதமாகும்.

38. பொருவரும் - ஒப்பில்லாத. குரைய : அசை. மைந்தர் : பதுமுகனெழிந்த தோழர். பொம்மென - கடுக. உரறி - முழங்கி. கதிர் - சூரியன். தெவ்வர் - பகைவர்.

39. கார் - கார் காலம். கமலம் - தாமரை. சீர்-புகழ். மாமன் மலரும் - கோவிந்தன் மனம் மலரும். செறற்பாலே - கொல்லத்தக்காய்.

40. பதி - இராசமாபுரம். எமர்க்கே - உறவினர்க்கு; ஏ: அசை. களிற்ருன் - கோவிந்தன். உழை - இடத்து.

31. தைவந்தன்ன - தொட்டாற்போன்ற. நுதி - கூர்மை. பரல் - பருக்கைக் கல். நூற்றைவர்: தாபதப்பள்ளியிலுறையும் மகளிர்; விசயைக்குத் துணையாயிருப்பவர். பரிக்கும்- செல்லுகின்ற. மான் - குதிரை.

42. மன்றல் - திருமணம். நீத்தம் - வெள்ளம். ஓவா - ஒழியாத. நாடு - ஏமாங்கதம்.

43. கா - சோலை. தெகிழ்ந்த - வாய்விட்ட. நாற்றம்-வாசனை. வாவி - தடாகம். உயிர்த்த - வீசிய. ஏ - அம்பு; விற்ருெழில்.

44. தொடுத்த - வைத்த. கலி - ஆரவாரம். சுரும்பு - வண்டு. துவைத்த - ஒலித்தனவாய். பூணினன் : சீவகன்.

45. பொறையிர்த்தன - சுமத்தலை நீங்கி இளைப்பாறின. செல்லல் - வழிவந்த வருத்தம். நறை - தேன். நாமவேல்- அச்சந்தரும் வேல். அமுதம் - உணவு.

46. கட்டி - வெல்லக்கட்டி. புழுக்கும் - வெந்த. காணம் - கொள். புட்டில் - குதிரைக்கு உணவு கட்டும் மொக்கணியென்னும் கருவி. பரிவு - வருத்தம்.

47. பேண - உபசரிக்க. அழிமதம் - ஒழுகுகின்ற மதம். கழி - உப்பங்கழி.

48. இமைத்தன - விளங்கின. புகை - அகிற்புகை. புரி நரம்பு - முறுக்கிவிட்ட நரம்பு. மணி - அழகு. பாண்டில் - கஞ்சதாளம். மணி - குதிரைக்குக் கட்டிய மணி.

49. கதிர்க்கடவுள் - சூரியன். நனை - தேன். நக்க - இகழ்ந்த. முனைவன் - அருகன். வேளனன் : சீவகன்.

50. சாற்றி - அமைத்து. கோதை - பூமாலை. பாவை : விமலை.

51. தலத்தகத்த - இடத்தினுள்ளே யுள்ளனவாக. மங்கை : விமலை. பொங்கி - மிக்கு. உருவம் - அழகு.

52. கரந்த - மறைந்த. ஏலநாறு இருங்குழல் - மயிர்ச்சாந்தின் மணம் வீசுகின்ற கரிய கூந்தல். நூலின்நேர் - நூலை ஒத்த. உச்சி - உச்சியிற் சென்றதாகிய பந்து.

53. உராய் - பரந்து. ஏணி - எல்லை. பத்தியின் - வரிசைப்படி. மண்டிலம் - வட்டம். புடைத்தல் - அடித்தல். மாதர் : விமலை. மைந்து - வலிமை.

54. நக - விளங்க. நகும்பந்து என்க. நக்கி - தீண்டுதலால். இறந்தெழுந்து - தன் எல்லையைக் கடந்து மேலேபோய். கோதை - விமலை. மின்மலர்ந்த - ஒளி பரந்த. வேலினுன் - சீவகன்.

55. வேய்ந்து - மொய்த்து. கந்தாரம் — ஒருவகைப்பண். திரு - இலக்குமி.

56. திங்கள் மணி - சந்திரகாந்தக்கல். துவலை - துளி. மாந்தி - உண்டு. கார் தங்கி நின்ற கொடி - பசுமை உறைந்து நின்றதொரு கொடியனைய விமலை. பொய்யா மலர் - பழம்பூ. பீர்தங்கி - பசலை பூத்து.

57. கண்ணுள் : விமலை. கோலி - வளைந்து. எய்ய - எய்தலால். என்னு - என்று எண்ணி. மா - மாவடு. மறித்தும் - மீட்டும். குழைந்து - வருந்தி.

58. நாவி - கத்தூரி. நீலக்காவி - நீலோற்பல மலர். அணங்கு - வருத்தும் தெய்வம். அறியாதேன் மேவி - அறிவுகலங்கினேனை அடைந்து. நோய் - காமநோய். வினுத்தருவார் - வினவுவார்.

59. பனி - குளிர்ச்சி. கயம் - குளம். மட்டு - தேன். நீர்மை - தன்மை. என் உள் நீர்மை யெல்லாம் - எனது உள்ளத்தில் அறிவு முழுவதையும். நோக்கு - பார்வை. பெண்ணீர்மை - பெண்மைத்தன்மை.

60. இலங்க - விளங்க. கொங்குஉண் - வாசனை ஊட்டப்பெற்ற. குழல் - கூந்தல். கோட்டு எருத்தம் செய்த நோக்கு - சாய்ந்த கழுத்துத் தந்த பார்வை.

61. வாள் ஆர் - ஒளி பொருந்திய. முகத்த - முகத்திற் கிடக்கின்றவை; கண்கள். தாள் - தண்டு.

62. ஒன்ருர் - பகைவர். கடந்தான் - வென்ருனுகிய சீவகன். மாதர் நலம் - விமலையின் இன்பத்தை. புலம்பு - வருத்தம். அடர்பொன் - தகட்டுப்பொன்.

63. திருமல்க வந்த திருவே - எனக்குச் செல்வம் மிகும்படி வந்த திருவே என்றது சீவகனை. நாயகன் : சாகரதத்தன். செரு - போர். வரி : ஒரு வகைப் பண்; வரிப் பாடல். எரிமல்கு - ஒளி நிறைந்த.

64. இடை - சமயம். நகர் - இராசமாபுரம். கம்பமிலாதாள் - கற்பின் அசைவில்லாதவள். கமலை : சாகரதத்தனுடைய மனைவி; விமலையின் தாய்.

65. தோமில் - குற்றமற்ற. தூம்பு - மடை. என்ருன் - என்று சோதிடன் கூறினுன்.

66. ஆற்றினுள் - வேட்கையைப் பொறுத்திருந்தாள்.

67. கொம்பனையாள் : விமலை. குன்றனுன் : சீவகன். இம்பர் - இவ்வுலகு.

# 7. பெரிய புராணம்

1. அங்கணர் – அழகிய கண்களை உடைய சிவபெருமான். ஆண்டவர் – ஆளப்பட்டவர் ; சுந்தரமூர்த்தி நாயனர்.

5. பயந்தவர் தம்பால் – பெற்ருேரிடத்தில். மகன்மை – மகனுக்குதல்.

8. நேர்ந்தான் – உடன்பட்டான்.

9. மணவினை – திருமணச் சடங்கு. கொற்றவர் திரு – அரசருடைய செல்வப் பெருமை.

10. கொங்கு – மகரந்தம்.

11. ஈண்டி – ஒருங்கு சேர்ந்து. முளை சாத்தல் – திருமணத்திற்கு முக்கியமானதொரு சடங்கு.

12. பணை – பருமை, பெருமை. நாண்காப்பு – கயிற்ருல் காப்புக் கட்டும் சடங்கு. (கங்கணம்)

13. மறைவழிவழாமல் – வைதிக முறைகள் தவருமல். மணத்துறைக் கடன்கள் – திருமணச் சடங்குகள். துவன்றி – நெருங்கி. ஆர்ப்ப – ஒலிக்க. காமுறு – (காண) விரும்புகின்ற.

14. நுணங்கிய – நுட்பமான. கேள்வி – கேட்டறிந்த அறிவு.

16. நுதி – முனை. சிகழி – தலை மயிரின் முடிப்பு ; முடியில் அணியும் மாலையுமாம்.

17. மான்மதம் – கஸ்தூரி. முந்நூல் – பூணூல். பவித்திரம் – தூய்மை. வைதிகச் சடங்கில் வலக்கை விரலில் அணியும்படி தருப்பைப் புல்லால் செய்யப்படுவது.

18. கால் சீக்கும் – அடியோடு நீக்கும்.

20. துவைப்ப – ஒலிக்க. யானங்கள் – ஊர்திகள், பல்லக்குகள்.

22. ஏங்க – ஒலிக்க. மிடைந்து – கலந்து நெருங்கி.

25. அகழ்ந்து – தோண்டி. அயனுக்கும் – பிரமனுக்கும். அரியார் – தோண்டிக் காண்பதற்கு அரியவர்.

26. சழங்க – நெகிழ, தொங்கி அசைய.

29. மடங்கலனையான் – சிங்கம் போன்றவர், சுந்தரர்.

30. பிஞ்ஞகன் – அழிக்கும் கடவுள், சிவன். நாவலர் பெருந் தகை – சுந்தரர். இசைவால் – உடன்படிக்கையால்.

32. நாவல்நகர் – திருநாவலூர்.

33. நக்கான் – நகைத்தான்.

36. வித்தகம் – திறமைப் பேச்சு, சாமர்த்தியம்.

43. ஆரூரர் – திருவாரூரராகிய சுந்தரர். போதாய் – வாராய்.

44. போதினும் – வரினும்.

46. பாரகர் – தேர்ந்தவர், கரைகண்டவர்.

47. நேர்ந்தது – உடன்பட்டு எழுதிக் கொடுத்தது. தனியாய் – ஒப்பற்றவனாய், தனிமையாய்.

51. ஆட்சி ஆவணம் (Documentary evidence) அயலார் காட்சி என்பன மூன்றும் வழக்கை நிறுவுவதற்கு வேண்டுவன. படியோலை – மூல ஓலையைப் பார்த்து எழுதியது. (copy)

53. கரணத்தோன் – திருமணச் சடங்கிற்கு உரிய சுந்தரர்.

54. மேலெழுத்திட்டார்கள் – சான்றாகக் கையெழுத்து இட்டவர்கள்.

57. மருண்டது – மயங்கியது. அரண்தரு. காப்பு – அழியாத வாறு காத்து வைக்கப்பட்டது.

60. போதும் – வாரும், வருக.

62. உம்பர் – மேல், விண்.

63. கேளா – கேட்டு. கரசரண் – கைகால்.

64. மேதினி – மண்ணுலகம்.

69. 'பித்தா பிறை சூடி' என்னும் சுந்தரர் தேவாரத்தின் யாப்பிற்கு ஏற்பவே சேக்கிழாரும் பாடுதல் காண்க.

70. இந்தளம் – அந்தத் தேவாரப் பாடலின் பண். மதுரம் – இனிமை.

71. பரிவு – அன்பு. புரம் எய்தான் – திரிபுரங்களை அழித்த சிவன்.

73. புரவி – குதிரை. இரவி – சூரியன்.

74. உழவாரத்தையே படையாகக் கையில் ஏந்திய திருநாவுக்கரசர். மடை – நீர்பாயும் வாய்க்கால்.

75. புடை – பக்கம். பரிசனம் – சுற்றம், ஏவல் செய்வோர், உடன் வந்தோர்.

76. பதுமம் – தாமரை.

78. கரந்த – மறைத்துக் கொண்ட. கரந்தான் – மறைந்தான்.

79. செம்மாந்து – இறுமாந்து. தம்மான் – தம் தலைவன். கைம்மாவின் உரியான் – யானையின் தோலைப் போர்த்தவன்.

———

## 8. கம்ப ராமாயணம்

1. மாயம் – பொய். கறங்கு – காற்ருடி.

2. உழக்கிவிட்டு – மிதித்துக் கலக்கி.

3. உசலம் – உலக்கை. வன்தொழில் – முரட்டுத் தொழில்.

5. கூயினன் – கூப்பிட்டான். நும்முன் – உம் தமையன். வல்லே – விரைந்து. கோயில் – அரண்மனே.

6. அலே – கடல்; ஆகு பெயர்.

8. நீ அவர்களுடன் போர் செய்து அவர்களின் உயிர்களே உண்க என்றவாறு. போனகம் – உணவு.

9. சமம் – போர். இனம் – இன்னம்; இடைக்குறை. பொன்றும் காலம் – அழியும் காலம்.

10. மு(ன்)னம் சொன்ன சொற்கள் – நந்தி சாபம், வேதவதி சாபம் முதலியவை.

11. பொன்றினே – இறந்தாய். கோடி – கொள்ளுதி, கொள்வாய்.

12. உய்திறம் – பிழைத்தற்குரிய வழி.

13. பந்தி – வரிசை. மந்திரம் – ஆலோசனே. உந்துதல் – செலுத்தல்.

14. கோறி – கொல்லுதி, கொல்வாய்.

15. மறம் – வீரம். உரிமை – உரிய வல்லமை. உளேய – மனம் வருந்த.

16. ஊன் உடை உம்பி – ஊன் உணவையே விரும்புகிற உன் தம்பி. (புகழை விரும்பாத உன் தம்பி.)

17. சாற்று என் கூற்றை – என் கட்டளேயை யாவர்க்கும் தெரிவி.

19. தோளி – சீதை. விடுதி – விடுக.

20. சீதையை இராமனிடம் சேர்ப்பதே சிறந்த தவம் என்றவாறு.

22. ஆதிசேடனுடைய பெரிய தலையிலிருந்து தவறி. தேர்த் தட்டு, பூமி; அதன் மேற்பகுதி மேருமலை போலும் என்னுமாறு தோன்றினன்.

23. மலை கொல் – பூமி நடுவே நிற்பதாகிய கால் முளைத்த மேருமலையோ. வேட்டதோர் – விரும்பிய ஒரு.

24. காரியல் காலன் தோன்றினன் – கரிய யமன் போன்ற கும்பகருணன்.

25. ஊன் – உடம்பு.

26. இது – பிறர் மனைவியைச் சிறை வைத்திருக்கும் இது.

27. இரவிசேய் – சுக்கிரீவன். நிருதர்கோன் – வீடணன். நாதன் – இராமன்.

28. ஆகில் – அப்படியானல். தெருட்டி – தெளிவித்து.

29. தந்திரக்கடலை நீந்தி – சேனையாகிய கடலைக் கடந்து; தன் பெரும்பலத்தை – தனக்குச் சிறந்த துணைவனை கும்பகருணனை; வெந்திறலவனுக்கு – மிக்க பலமுடைய கும்பகருணனுக்கு.

30. மழையின் நீர் – மழைத் தாரை போன்ற நீர். இறைஞ்சினனை – வணங்கிய வீடணனை.

31. நீ அபயம் பெற்றவாறும் – நீ (இராமனை யடைந்து) அபயம் பெற்ற விதத்தையும். அமரரும் பெறுத லாற்ருச் சிறப்பு – தேவர்களும் பெற முடியாத சிரஞ்சீவியாயிருக்கும் பெருமை. உபயலோகத்திலுள்ள சிறப்பு – இவ்வுலக மறு உலகங்களில் உள்ள செல்வங்களின் பெருமை. கவிஞரில் அறிவின் மிக்காய் – புலவரைப் போலச் சிறந்த அறிவுள்ளவனே!

32. தரும நின்ற நிலைமையும் – அற நிலையான் நல்ல செயலும். புலமை தானும் – உண்மை யறிவும். அருந்தவம் இயற்றி – செயற்கு அரிய தவத்தைச் செய்து. ஆதியங் கடவுளாலே பெற்ருய் – பிரமன் கொடுக்கப் பெற்றுக் கொண்டாய். வீடணன் பிரமனிடம் நீதியும், தரும நிலைமையும், புலமையும் பெற்ருன்.

33. வேந்தற்கு – இராமனுக்கு. உய்கிலை என்னில் – பிழைக்க வில்லை என்ருல். இவ்வரக்கராயுள்ளோ மெல்லாம் –

அரக்கராயுள்ள நாங்கள் எல்லோரும். எய் கணை மாரியாலே – விடும் அம்பு மழையாலே. எண்ணீர் (எள் + நீர்) – எள்ளோடு கூடிய நீரை. கடன் கழிப்பாரை – பிதிர்க்கடனைச் செய்வோரை.

34. வருவது புலையெலாம் – வளர்ந்து வருவதாகிய இழிந்த குணமுடைய அரக்கரெல்லோரும். புலை, ஆகுபெயர். மாண்டபின்னை – இறந்த பின்பு. திருவுறை மார்பன் – இராமன். உன் இலங்கை மூதூர் புகுந்தனை எனக் கூட்டுக. புகுந்தனை – புகுந்து. என்றும் தீரா – எக் காலத்திலும் அழியாமலிருக்கும். பொருஅரு – ஒப்பற்ற. துய்க்க – அநுபவிக்க. அவண்போதி – அவ்விடம் செல்.

35. இருள் உறு சிந்தையேற்கும் – அஞ்ஞானம் நிரம்பிய மனமுடைய எனக்கும். இன்னருள் சுரந்த வீரன் – இனிய கருணை செய்த இராமன். அருளும் ஒன்றோ – கருணை காட்டுவதொன்று மட்டுமா? அபயமும் – பய மற்ற நிலையையும். மருள் உறு – மயக்கமுற்ற. மாறிச் செல்லும் – நின்ற நிலையில்லாத. உருள் உறு சகட வாழ்க்கை – வண்டிச் சக்கரத்தைப் போன்ற (மாய) வாழ்வு.

36. அவன், நெஞ்சறி சுட்டு. செல்வத்திலங்கையும் அரசும் – செல்வங்கள் நிரம்பிய இலங்கை நகரையும் அரசுரிமையையும். எல்லாம் – பிற உரிமைகளையும். யான் நினக்குத் தந்து – நான் உனக்குக் கொடுத்து. இதில் உறுதி – இதனினும் நன்மை. உன்பின் வந்தேன் – உன் தம்பியாகிய எனது. மனக்கு நோய் துடைத்து – மனத்தில் உற்ற துன்பத்தை நீக்கி. நம் தம் மரபையும் வளர்த்து – நமது புலத்திய வம்சத்தையும் வளர்த்து.

37. பிறந்த உற்ருர் – உறவினராகப் பிறந்தோர் (ஆனாலும்). தாயவை – தாய். தருமம் பார்ப்பார் – அறத்தைக் கருதுவோர். உணர்வரோ – (பொருளாக) மதிப்பரோ? அவை – அந்த உண்மைகளை. நீ அறிதியன்றே – நீ நன்கு அறிவாயன்ருே?

38. ஒருவன் தீவினை செய்ய – ஒருவன் பாவச் செயலைச் செய்ய. தீங்கிலாதார் – பாவமற்ற பிறர். அவனொடும் வீவினையுறுதல் – அந்தப் பாவியோடு மரணமடைதல்.

மேன்மையோ - சிறந்ததோ? கீழ்மையோ - இழிந்ததோ? ஆய்வினையுடையை - நன்மை தீமைகளை ஆராயும் தொழிலுடைய நீ. தவத்தின் மிக்கான் - தவத்தாற் சிறந்த பரசுராமன். ஈன்ற தாய் - பெற்ற தாயாகிய ரேணுகை. வினை செய்ய - (பாவத்) தொழிலைச் செய்ய.

39. உதிரம் ஊன்றி - கெட்ட ரத்தத்தை நீக்கி. வேறோர் மருந்தினால் - மலை காடு முதலிய வேறிடங்களில் தோன்றிய மருந்தால். துயரம் தீர்வார் - துன்பம் நீங்குவார்கள். கோட்டம் - (உடலிற் பூசிப் பரிமளிக்கச் செய்ய வேண்டிய) வாசனைப் பொருளை கழிவது கருமம் அன்று - வீணாக்குவது காரியமாகாது. மடல் உடை அலங்கல் மார்ப - இதழ்களையுடைய மலர்களாலாகிய மாலையணிந்த மார்பினையுடைய கும்பகருண!

40. நும்முன் தன்னைக் காக்கலாம் என்னின் - உமது தமையனை இராவணனைக் காப்பாற்றலாமென்றால். அது கண்டதில்லை - அதைச் செய்ய முடியாது. வேறே - வேறொரு வழியில். அறத்தை - தருமத்தை.

41. மண்ணின் மேலால் இறங்கினை - இந்தப் பூமியில் வந்து இறங்கி. இன்றுகாறும் - இன்றைய வரையில். ஒன்று உற்றது உளதே - ஏதேனும் பயனுண்டோ? என் - என்ன பயன் கருதி. அறங்கெட - தருமம் அழிய. உயிரை நீத்தல் மேற்கொள்வான் அமைந்தது - உயிரைப் போக்கிக்கொள்ள இசைந்தது.

42. யாவர்க்கும் - எப்படிப்பட்ட திறமை உள்ளவர்களுக்கும். உனை நலியும் ஈட்டார் யார் - உன்னை வருத்தப்படுத்தும் வன்மையுள்ளவர் எவருளர்? மூவர்க்கும் தலைவரான மூர்த்தியார் - (பிரமன் திருமால் உருத்திரன் என்ற) திருமூர்த்திகளுக்குத் தலைவரான திருமால். காகுத்த வேடங்காட்டி - ககுஸ்த வம்சத்திற் பிறந்தவர்போல் தோன்றி.

43. துனி வரும் - கோபங் கொண்ட. செறுநரான தேவரே - பகைவரான தேவர்களெல்லோரும். கனிவரும் காலத்து - பழம் பறித்துத் தின்னத் தக்க காலத்தில்.

44. வேத நாயகனே - வேத முதல்வனான இராமனே. அவனை - இராமனை; காண - தரிசிக்க. அறத்தொடும்

திறம்பாது போதுவாய் – தருமத்திற்கும் மாறுபாடின்றி வருவாயாக. பொலன் கழல் இரண்டும் – அழகிய இரண்டு பாதங்களையும்; கழல்: ஆகுபெயர். பூண்டான் – விழுந்து வணங்கி முடிமேல் அணிந்தான்.

45. தும்பி – வண்டுகள் (மொய்க்கின்ற). அம் – அழகிய. தொடையல் மாலை – மலர் மாலைகளும் மணி மாலைகளும். தொடையல் மாலை: உம்மைத் தொகை. படியில் தோய – பூமியிற் படியும்படி. பொன் பம்பு கழல்கள் – பொன் பரவிய வீரக் கழலை யணிந்த திருவடிகள்.

46. தார்க் கோல மேனி மைந்த – மாலைகளணிந்து அழகுடன் விளங்கும் மேனியையுடைய வீடணனே! மைந்த என்றது வலியுள்ளவனே என்ற பொருளில் வந்தது. தருதியாயின் – காக்கக் கருதினால். கார்க்கோல மேனியானை – நீர் கொண்ட மேகம் போன்ற அழகிய வடிவமுள்ள இராமனை.

47. மலரின் மேல் இருந்த வள்ளல் – தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். வழுவிலா – பொய்யா. உலைவிலாத்தருமம் – அழியா அறத்தை. பூண்டாய் – மேற்கொண்டாய். உலகு உளதனையும் – இவ்வுலகம் உள்ள அளவும். உள்ளாய் – சிரஞ்சீவியாக இருக்கப் போகின்றாய். புலை உறு – இழிவைத் தருவதாகிய.

48. கருத்து இலா இறைவன் – அறிவில்லாத தலைவன். தீமை கருதினால் – தீய காரியஞ் செய்ய எண்ணினால். காத்து – தடுத்து. திருத்தலா மாகிலன்றோ – திருத்தக் கூடுமானாலன்றோ. தீராதாயின் – முடியாவிடில். ஒருத்தரின் முன்னம் – (அறிவற்ற) தலைவர் மடிவதற்கு முன்னமே.

49. வீரன் – இராமன். சுடுகணை – நெருப்பைக் கக்கும் அம்பு. துரப்ப – விட. சுற்றும் – சூழ்ந்துள்ள. வெம்பு வெஞ்சேனையோடும் – கோபத்தையுடைய கொடிய படையுடன். கிளைஞர் – உறவினர்.

50. செம்பிட்டுச் செய்த இஞ்சி – செம்பினாற் கட்டப்பட்டிருக்கின்ற மதில். தெரியல் எம் முன் உயிர் கொண்ட – மாலையை அணிந்த எனது தமையன்மாரான கரதூடணர் உயிரைப் போக்கிய. அம்பிட்டு – (நாணமென்னும்)

அம்பால். துன்னங் கொண்ட – தைக்கப்பட்ட. புண்ணுடை நெஞ்சோடு – புண்பட்ட மனத்தோடு. கூற்றையும் – எமனையும். ஆடல் கொண்டேன் – வெற்றி கொண்ட நான்.

51. சிந்திப் போகுவது – சிதறிப் போகத் தக்க காலத்தில் அயலே நின்று போற்றினும் – பக்கத்தில் இருந்து பல உபாயங்களைச் செய்து காத்தாலும். சேகு உற – உறுதியாக., இரங்கலை – வருந்தாதே. என்றும் உள்ளாய் – சிரஞ்சீவியே!

52. அவன் தன்னை – வீடணனை. புல்லி – தழுவி. நீர்பொழி கண்ணின் – நீரொழுகும் கண்ணால். வென்றி வெந்திறலினானும் – வெற்றியுடைய மிக்க பலமுள்ள வீடணனும். அவன் – கும்பகருணனுடைய.

53. பிணங்கினால் ஆவது இல்லை – கோபம் கொண்டால் செய்யத் தக்க காரியமில்லை. பெயர்வன் – இவ்விடம் விட்டுப் புறப்படுவேன். குணங்களாலுயர்ந்தான் - நற்குணங்களாற் சிறந்த வீடணன்.

54. உய்திறனுடையார்க்கு அன்றே – கடைத்தேறக் கருதுவார்க்கு அன்றோ? அறநெறி – தருமநெறியும். ஒழுக்கம் – நல்லொழுக்கம். உண்மை – உள்ளன. பெய்திறமெல்லாம் பெய்து – (முடிந்த அளவு) சொல்லக் கூடிய புத்திமதிகளெல்லாம் சொல்லி. சிறிதும் தீர்ந்திலன் – சிறிதும் அவனை விட்டு நீங்கவில்லை.

55. கனைகடல் – ஒலிக்கின்ற கடல். கவி – குரங்கு. பரவை – கடல்.

56. பொராநின்றேம் – பொருவதாக உள்ளோம். பராவும் தொல் செரு முறை – பாராட்டத் தகுந்த பழைமையான போர் முறை. விராவு – பொருந்திய.

58. அல் – இருள்.

59. பிணக் குவியல்களிடையே இரத்த வெள்ளம் தேங்கி நின்றது என்றவாறு.

60. முரண் – வலி.

61. அளவில் ஆற்றலான் – கும்பகருணன். நீற்றியல் நுணுகுற – நீற்றின் தன்மையதாய் நுண்ணியதாக.

62. இன்ஞெரு மலையைக் கொண்டுவரச் சொல்வேன் என்று சொல்லிப்போய்த் தேடுகையில். நோன்பிஞேர் – தவத்தையுடையவர். சொல் – சாபச் சொல். என – போல.

63. உலம்பிட – வாய்விட்டுக் கதறுமாறு.

64. அற்றது காலையின் – சூலாயுதம் இல்லாத போது அனைய பெற்றியின் – அவ்வேளையில். எறுழ் – வலி.

65. உறுக்கினர் – அதட்டினர்கள். இவன் – சுக்கிரீவன்.

66. மன் – அரசன். தண்டல் – கெடுதல்.

67. ஏய் எனும் அளவினில் – ஒரு நொடிப் பொழுதில்.

69. மீண்டும் தன் கைகளால் அம்புமதிலை நீக்கும் பொருட்டு

70. உணர்ச்சி எய்தியவன் சுக்கிரீவன். தோற்றிலான் – கும்பகருணன்.

71. உன்னினவன் சுக்கிரீவன். முற்றிய...தனை – நிரம்பிய பொருட் கெல்லாம் முடிவாக அடைதற்கு உரிய பரம் பொருளின் அமிசமான இராமனை.

74. விசும்பினரை – வானவரை.

75. தீச்சிகை – அக்கினிச்சுவாலை. இருமடி – இருமடங்கு. தெழிப்பு – ஆரவாரம்.

76. மையல் நோய் – ஆசையாகிய நோயானது.

77. ஆதியாய் – முதற்கடவுளே. என் தம்பி ஏற்கெனவே உன்னை அடைக்கலமாக அடைந்துள்ளான், மீண்டும் அவனை அடைக்கலப் பொருளாகக் காத்தலை வேண்டினேன் என்றவாறு.

78. இறை – தலைவனாகிய இராவணன், சிறிதும்.

80. உட்கொளுவா – பூட்டி. அழுவம் – கடல்.

# 9. சீருப்புராணம்

1. ஆமினு – தாயின் பெயர். அகுமது – அஹமத், நபியின் பெயர்,

2. அபித்தாலிபு – நபியின் பெரிய தந்தை. மக்கமாநகர் – மெக்கா என்று பெயர் வழங்கும் பெருமை உடைய நகரம். கஃபத்துல்லா – மெக்காவில் உள்ள இறைவன் கோயில். ஜெமீறத்திலூஸ்தா – கோயில் உள்ள புனிதமான இடம்.

3. நபிகள் பிறந்த காலத்திருந்த சூழ்நிலையும், அவர் பிறப்பால் ஏற்பட்ட நன்மையும் கூறப்படுகின்றன.

4. பானு – சூரியன். தீன் – மறைமொழி. குறைஷி – நபி பிறந்த இனம்.

5. தினகரன் – தினத்தைச் செய்பவன், சூரியன். சசி – சந்திரன். உடுக்குலம் – விண்மீன் கூட்டம்.

6. தெரிவைமார் – பெண்கள்.

7. ஜபுரயீல் – தெய்வத் தூதர்.

8. கலிமா – இஸ்லாமியச் சமயத் திருமொழி. இறசூல் – தூதர், தெய்வத் திருத்தூதர். சூதரமொழி – இசை போன்ற மொழி.

9. அந்தரம் – ஆகாயம். தீவகத்திலும் – தீவிலும். சந்தம் – அழகு.

10. அபுல்காசிம் – நபியின் மற்றொரு பெயர்.

## 10. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

1. உழுந்துருள் அளவை – உழுந்து ஒருமுறை உருளு வதற்கு ஆகும் நேரம்; சிறு நொடிப்பொழுது. கூறுபடுமதி – பகுத்துணரும் அறிவு.

2. செலவு – செல்லும் விரைவு. வளி – காற்று. ஒளிச் செலவு – ஒளியின் வேகத்தைவிட, காற்றின் வேகத்தை விட, மிக்க வேகத்தோடு சித்திரகவி இயற்றுதல் வல்ல புலவரே. மிறைக்கவி – சித்திர கவி.

6. அளவை நூல் – தருக்க நூல். யாண்டும் – எங்கும்.

7. கொள – கேட்போர் மனம் கொள்ளுமாறு.

8. பொருளியல் – சொல்லும் பொருளின் வகை.

9. காட்சி – அறிவு.

10. தண்டாது – தவறாமல். ஆற்றும் – செய்த.

13. மதி – முன்னிலை அசை.

14. எழீஇ – எழுந்து.

17. வயங்கும் – விளங்கும்.

18. உடுநிரை – விண்மீன் கூட்டம்.

19. உலவா – கெடாத இயற்கை பிறழ்ந்து தீமைகள் விளைந் தாலும், கெடாத நல் வாழ்க்கையில் நிலைபெறுக.

21. இன்னே – இப்பொழுதே.

22. கோடி – கொள்ளுதி, கொள்வாய்.

23. துன்னி – அணுகி.

24. நிரை நிரை – முறை முறையாக. பிழையலே – தவற வேண்டா.

26. சொல் அளவு அமைந்து – சொல்லின்படி நின்று.

28. பனி – குளிர்ச்சி. கெழு – பொருந்திய.

29. மல்லல் - வளமான, செல்வத்தில் சிறந்த.

30. அருள்வர – அருள் தோன்ற.

31. விழியாக் கண்ண – இமைக்காத கண்களை உடைய (கண்கள் போன்ற பீலிகளை உடைய). தோகை – மயில்.

32. நறும்படாம் – நல்ல போர்வை. உறுவன் – தக்கவன்.

33. பவனமா உலகு - நாகர் உலகம். நவை – குற்றம்.

35. சிதையாப் பேறு – அழியாத நிலை, புகழ்.

36. குறுநடைப் புறவு – சிறு நடை உடைய புறா. சிபியின் கதை. தபுதி – அழிவு.

38. கன்னம் – நிறைத்தட்டு, தராசு.

40. தண்ணடை நிலன் – மருத நிலத்து வயல்கள்.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111059
EGMORE, MADRAS

## 11. கிறிஸ்துவின் அருள் வேட்டல்

1. கறை – மாசு. கோது – குற்றம்.
2. கோ – இறைவனது; ஏசுவின்.
3. ‘ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம். உயிரினும் ஓம்பப்படும்’ – திருவள்ளுவர். இருந்தால் – சும்மா கிடந்தால். குவலயத்தீர் – உலகீர்.
4. காண்பு – காண்டல். மன்பதை – மக்கள் கூட்டம். புந்தியில் – மனத்தில்.
5. மீக்கூர்ந்து – மேன்மேலும் அதிகரித்து (கூர்தல் உள்ளது சிறத்தல்). விளைந்தது அது; அது – அப் பாவம்.
6. அலகுஇல் – அளவில்லாத. சிலை – ஒளி; வில்லுமாம். நுதலார் – வெற்றியுடையவர். (ஒளிவிளங்கும் அல்லது வில்லைப் போன்ற நெற்றியுடைய பெண் மக்களின்) பெண்ணுலகில், ஆணுலகால் சேர்ந்த இழுக்குகளைப் போக்கி, அவ்வுலகிற்கு நலஞ்செய்து அதை மேம்படுத்த என்றபடி.
7. செவ்வியலி – செம்மை இயல்புடையவள்; நற்குண முடையவளாகிய ஒரு தாயின். மழவில் – குழந்தை மையில்.
8. மகண்மை – பெண்மை. மருவு உலகம் – காணப்படும் உலகம்; விளங்கும் உலகம்; கலப்பு உலகமுமாம்.
9, நீளரவை (பாம்பை) யொத்த கொடுங்கோன்மை. கொடுங்கோன்மை அன்று நடுங்கியது, அன்று தொட்டுக் கொடுங்கோன்மை படிப்படியே நலிந்துவரல் கண்கூடு.
11. குடியில் – குடிசையில்,
12. உரம் – பலம். இகல் – பகைமை; போர்.
14. கடி – விலக்கு; நீக்கு. வாளேந்தலை ஒழி என்றபடி. பகைவரிடத்தும் அகிம்சை நெறியைக் கடைப்பிடி என்றவாறு. பொருநர் – பகைவர்.
15. வாகையரும் - வெற்றிமாலை யணிந்தவரும்.